சுருக்கம்

வேளாண்மை - உழவர் நலத்துறை –வேளாண் நிதிநிலை அறிக்கை – கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம் – 2022-2023 – வேளாண்மைத் துறை, தோட்டக்கலை (ம) மலைப்பயிர்கள் துறை, வேளாண்மை பொறியியல் துறை, வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை மற்றும் சர்க்கரைத்துறை மூலம் திட்டம் செயல்படுத்துதல் - ரூ.234.22926 கோடிக்கான நிதி ஒப்பளிப்பு மற்றும் வழிகாட்டு நெறிமுறைகள் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

வேளாண்மை - உழவர் நலத் (வஇபதி) துறை

அரசாணை (நிலை) எண். 298 நாள்: 16.12.2022

திருவள்ளுவர் ஆண்டு, 2053

சுபகிருது, மார்கழி 1

படிக்கப்பட்டது:-

1. அரசாணை (நிலை) எண். 59, வேளாண்மை-உழவர் நலத் (வஇபதி) துறை, நாள் 09.03.2022.
2. மாண்புமிகு வேளாண்மை –உழவர் நலத்துறை அமைச்சர் அவர்களால் 2022-2023 ஆம் ஆண்டு வேளாண்மை நிதிநிலை அறிக்கையில் வெளிடப்பட்ட அறிவிப்பு நாள். 19.03.2022, அறிவிப்பு எண்.1
3. வேளாண்மை இயக்குநரின் கடிதம் எண். கலைஞர் திட்டம்/14433/ 2022, நாள் 05.05.2022. 18.05.2022, 04.08.2022 மற்றும் 11.11.2022.

---

ஆணை:-

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையின்படி, 2021-2022-ஆம் ஆண்டில் கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டத்தினை 1997 கிராமப் பஞ்சாயத்துகளில், வேளாண்மைத் துறை, தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள்துறை மற்றும் வேளாண்மை பொறியியல் துறை மூலம் ஒருங்கிணைத்து செயல்படுத்திட ரூ. 227.0588 கோடி நிதி ஒதுக்கீடு

செய்தும், திட்ட செயலாக்கத்திற்கான வழிகாட்டு நெறிமுறைகளை அங்கீகரித்தும் ஆணை வெளியிடப்பட்டது.

2. மாண்புமிகு வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் அவர்கள் சட்டமன்றப் பேரவையில், 2022-2023-ஆம் ஆண்டிற்கான வேளாண்மை நிதிநிலை அறிக்கையில் "கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம் 2022-2023-ஆம் ஆண்டில், 3,204 கிராமப் பஞ்சாயத்துக்களில் 300 கோடி ரூபாய் மாநில அரசு நிதி ஒதுக்கீட்டில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்துடன் இணைந்து செயல்படுத்தப்படும்." என்ற அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்கள்.

3. வேளாண்மை இயக்குநர், மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட தனது கடிதங்களில், மாண்புமிகு வேளாண்மை- உழவர் நலத்துறை அமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட அறிவிப்பினை செயல்படுத்தும்பொருட்டு, கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டத்தினை, 2022-2023 ஆம் ஆண்டில், 3,204 கிராமப் பஞ்சாயத்துகளில், ரூ.290.03926 கோடி மாநில அரசு நிதி ஒதுக்கீட்டில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம் செயல்படுத்தப்படும் கிராம ஊராட்சிகளில் ஒருங்கிணைத்து இதர துறை திட்டங்களுடன் செயல்படுத்த ஏதுவாக கீழ்க்கண்டவாறு திட்ட ஒப்புதல், அனுமதி மற்றும் நிதி ஒதுக்கீடு செய்து உரிய வழிகாட்டு நெறிமுறைகளுடன் ஆணை வழங்குமாறு அரசினைக் கோரியுள்ளார்:-

i. 2021-2022 ஆம் ஆண்டில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தினை செயல்படுத்த தேர்வு செய்யப்பட்ட 2657 கிராமப் பஞ்சாயத்துகளில், அரசாணை (நிலை) எண். 59, வேளாண்மை-உழவர் நலத் (வஇபதி) துறை, நாள் 09.03.2022 இன்படி அனுமதியளிக்கப்பட்ட 1,997 கிராமப் பஞ்சாயத்துக்கள் போக, எஞ்சிய 660 கிராமப் பஞ்சாயத்துகளுடன் நடப்பு 2022-2023 ஆம் நிதி ஆண்டில் "கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டத்தினை செயல்படுத்திட தேர்வு செய்யப்பட்ட 2,544 கிராமப் பஞ்சாயத்துகளுடன் சேர்த்து மொத்தமாக 3,204 கிராமப் பஞ்சாயத்துகளில் ஒருங்கிணைத்து இத்திட்டத்தினை செயல்படுத்த ஆணை வழங்குமாறும்.

ii. 2022-2023-இல் மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத்துறை அமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ், ஒருங்கிணைந்து செயல்படுத்தப்பட உள்ள வேளாண்மைத்துறைக்கு ரூ.32.2367 கோடியும், வேளாண்மைப் பொறியியல் துறைக்கு

ரூ.212.850 கோடியும், தோட்டக்கலைத்துறை மற்றும் மலைப்பயிர்கள் துறைக்கு ரூ.28.82256 கோடியும், வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறைக்கு ரூ.14.87 கோடியும் சர்க்கரைத்துறைக்கு ரூ.1.26 கோடியும் ஆக மொத்தம் ரூ.290.03926 கோடியினை மாநில நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்து நிர்வாக மற்றும் நிதிஒப்பளிப்பு வழங்குமாறும்.

iii. வேளாண்மைத்துறை மூலமாக இத்திட்டத்தினை செயல்படுத்திட ரூ.32.2367 கோடியினை வேளாண்மை இயக்குநர் அவர்கள் செலவினம் மேற்கொள்ள அனுமதி வழங்குமாறும், திட்ட செயலாக்கத்தின் போது கள நிலவரத்தின் தேவைக்கேற்ப, இனங்களின் நிதி இலக்கிற்கு மிகாமல் பொருள் இலக்கினை மாற்றி அமைத்துக்கொள்ள வேளாண்மை இயக்குநருக்கு அனுமதி அளித்து அது தொடர்பான செயல்பாட்டு வழிமுறைகளை (Excecutive Guidelines) வேளாண்மை இயக்குநர் அவர்களே மாற்றி அமைத்துக்கொள்ளஅனுமதி வழங்குமாறும்,

iv. 2022-2023 ஆம் ஆண்டில் இத்திட்டம் செயல்படுத்தப்படும் 3,204 கிராமப் பஞ்சாயத்துக்களில் வழங்கப்பட்ட வழிகாட்டுதல்களின்படி விவசாயிகளுக்கு திட்ட இனங்களை செயல்படுத்த இயலாதவாறு போதிய எண்ணிக்கையில் பயனாளிகள் இல்லாத பட்சத்தில் அக்கிராமங்களுக்கென வழங்கப்பட்ட இலக்கினை நடப்பு ஆண்டில் அதே வட்டாரத்தில் தேர்வு செய்யப்பட்ட பிற கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்ட கிராமப் பஞ்சாயத்துக்களில் இலக்கினை மாற்றி அமைத்து திட்டத்தினை செயல்படுத்திட சம்பந்தப்பட்ட வட்டார வேளாண்மை – உழவர் நலத்துறை அலுவலர்களுக்கு அதிகாரம் வழங்க அனுமதி வழங்குமாறும்,

v. மேலும், அந்த வட்டாரத்திற்குள்ளும் போதிய விவசாயிகள் இல்லாத பட்சத்தில் அந்த மாவட்டத்திற்குள் தேர்வு செய்யப்பட்ட பிற கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்ட கிராமப் பஞ்சாயத்துக்களில் அவ்வினங்களை மாற்றி அமைத்துக்கொள்ள சம்பந்தப்பட்ட மாவட்ட வேளாண்மை – உழவர்

நலத்துறை அலுவலர்களுக்கு அதிகாரம் வழங்க அனுமதி வழங்குமாறும்,

vi. அதற்கும் மேலாக அவ்வினத்தின் இலக்கினை மாவட்டத்திற்குள் செயல்படுத்த இயலாத நிலை ஏற்படும்போது, அவ்விலக்கினை மாநிலத்திற்குள் வேறு சில மாவட்டத்தில் உள்ள பிற கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்ட கிராமப் பஞ்சாயத்துக்களில் மாற்றம் செய்துகொள்ள வேளாண்மை துறை இயக்குநருக்கு / தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர் துறை இயக்குநருக்கு / தலைமை பொறியாளருக்கு (வே.பொ) / சர்க்கரைத்துறை இயக்குநருக்கு மற்றும் வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை இயக்குநருக்கும் அதிகாரம் வழங்கிட அனுமதி வழங்குமாறும்,

vii. நீலகிரி மாவட்டம், திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள கொடைக்கானல் வட்டாரம் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் உள்ள வெள்ளிமலை வட்டாரம் ஆகிய பகுதிகளில் வேளாண்மைத் துறைக்கான அலுவலகங்கள் இல்லாததால் அப்பகுதிக்கு ஒதுக்கப்பட்ட வேளாண்மைத் துறையின் திட்டங்களின் இலக்குகள், சம்பந்தப்பட்ட தோட்டக்கலைத் துறையின் அலுவலகங்கள் மூலம் செயல்படுத்திட அனுமதியும், இப்பகுதிக்கு தேவையான இடுபொருட்கள் கொள்முதல் பணிகள், நிதி செலவினம் நீலகிரி மாவட்டத்திற்காக வேளாண்மை இணை இயக்குநர், கோயம்புத்தூர் அவர்களும் கொடைக்கானல் வட்டாரத்திற்காக வேளாண்மை இணை இயக்குநர், திண்டுக்கல் அவர்களும் வெள்ளிமலை வட்டாரத்திற்காக வேளாண்மை இணை இயக்குநர், கள்ளக்குறிச்சி அவர்களும் மேற்கொள்ள அனுமதியும், பயனாளிகள் தேர்வு மற்றும் விவசாயிகளுக்கு விநியோகம் செய்யும் பணிகள் தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை மூலமாக மேற்கொள்ளவும் அனுமதி வழங்குமாறும்,

viii. வேளாண்மைத்துறை மூலம் செயல்படுத்தப்படும் திட்ட இனமான "தென்னங்கன்றுகள் விநியோகம்" இனத்திற்கு தேவைப்படும் 19.164 இலட்சம் நெட்டை தென்னங்கன்றுகளில் வேளாண்மைத்துறையின் அரசு தென்னை நாற்றுப் பண்ணைகள் மூலமாக 10.00 இலட்சம் தென்னங்கன்றுகளும், தோட்டக்கலைத் துறை மூலமாக 9.164 இலட்சம் கன்றுகளும், கன்று ஒன்றுக்கு ரூ.60/- வீதம் உற்பத்தி செய்து விநியோகம் செய்யப்பட உள்ளதால் விதைநெற்று கொள்முதலுக்கும், உற்பத்தி செலவினங்களை மேற்கொள்ளும் பொருட்டும் வேளாண்மைத் துறை மூலம் உற்பத்தி செய்யப்பட உள்ள 10 இலட்சம் தென்னங்கன்றுகளுக்கான முழு

தொகையான ரூ. 6.00 கோடியினை துணை தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு விதை மேம்பாட்டு முகமை அவர்களுக்கும், தோட்டக்கலைத் துறை மூலம் உற்பத்தி செய்யப்படும் 9.164 இலட்சம் கன்றுகளுக்கான முழு தொகையான ரூ.5.4984 கோடியினை மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு தோட்டக்கலை வளர்ச்சி முகமை அவர்களுக்கும் பெற்று வழங்கிட வேளாண்மை இயக்குநருக்கு உரிய அனுமதி வழங்குமாறும்,

ix. தரிசு நிலங்களை பதிவு செய்வதற்கான செலவினம் மேற்கொள்ள தேவையான நிதி வேளாண்மைத் துறைக்கு மட்டுமே திட்டத்தில் ஒதுக்கீடு செய்ய கோரப்பட்டுள்ள நிலையில், கிராமப் பஞ்சாயத்துக்களில் தரிசு நிலத் தொகுப்புகளை அமைக்கும் பணிகளை தோட்டக்கலைத் துறை, வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறையின் மூலம் நியமிக்கப்பட்ட பொறுப்பு அலுவலர்கள் (Nodal Officers) மேற்கொள்ளும் போது தரிசு நிலத் தொகுப்புகளை பதிவு செய்வதற்கான செலவினங்களை அந்தந்தத் துறையின் பொறுப்பு அலுவலர்களே மேற்கொள்ளவும் அவ்வாறான செலவினத் தொகையினை உரிய ஆவணங்களை சமர்ப்பித்து சம்பந்தப்பட்ட வட்டார வேளாண்மை உதவி இயக்குநரிடமிருந்து மீள பெற்றுக் கொள்ள அனுமதி வழங்குமாறும்,

x. தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை மூலம் செயல்படுத்தப்பட உள்ள திட்டங்களுக்கான ரூ.28.82256 கோடி நிதியினை, தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் அவர்கள் செலவினம் மேற்கொள்ள அனுமதியும், திட்ட செயலாக்கத்தின் போது கள நிலவரத்தின் தேவைக்கேற்ப இனங்களின் நிதி இலக்கினை மிகாமல் பொருள் இலக்கினை மாற்றி அமைத்துக்கொள்ள தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநருக்கு அனுமதி அளித்து அது தொடர்பான செயல்பாட்டு வழிமுறைகளை (Excecutive Guidelines) தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறையின் இயக்குநர் அவர்களே மாற்றி அமைத்துக்கொள்ள அனுமதி வழங்குமாறும்,

xi. வேளாண்மைப் பொறியியல் துறை மூலம் செயல்படுத்தப்பட உள்ள திட்டங்களுக்கான ரூ.212.850 கோடி நிதியினை, தலைமைப் பொறியாளர்(வே.பொ), வேளாண்மைப் பொறியியல் துறை அவர்கள் செலவினம் மேற்கொள்ள அனுமதி வழங்குமாறும்,

xii. மேலும், இத்திட்டம் செயல்படுத்தப்படும்போது, கிணறுகள் அமைக்கும் பணியில் உள்ள உப இனங்களில் (ஆழ்துளைக் கிணறு / குழாய்க் கிணறு) நிலநீர் ஆய்வு அறிக்கை அடிப்படையில்

கிடைக்கக்கூடிய நீரின் அளவு பொறுத்து (Well yield) ஆழ்துளைக் கிணறு / குழாய்க் கிணறு தேவையின் அடிப்படையில் கிணறுகளின் எண்ணிக்கை மற்றும் அளவுகளில் மாற்றம் செய்துகொள்ள தலைமைப் பொறியாளர் (வே.பொ), வேளாண்மைப் பொறியியல் துறை அவர்களுக்கு அனுமதி வழங்குமாறும்,

xiii. கிணறுகளின் வகையும், ஆழமும், மோட்டாரின் குதிரைத் திறனும் (HP), அதற்கான நிதி தேவையும், ஒவ்வொரு தொகுப்பு நிலங்களின் நிலநீர் ஆய்வு அறிக்கையின் அடிப்படையில் மாறுபடும் நிலையில், முதற்கட்ட நில நீர் ஆய்வின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்ட 3,204 கிராமப் பஞ்சாயத்துகளில் அமையவுள்ள ஆழ்துளைக் கிணறுகளும், குழாய் கிணறுகளும், அரசாணை எண். 142, பொதுப்பணி (ஆர் 2) துறை, தேதி.23.07.2014-இல் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை தளர்வு செய்து மித அபாயகரமான நுகர்வு (Semi Criticial), அபாயகரமான நுகர்வு (Critical) மற்றும் அதி நுகர்வு (Over Exploited) குறுவட்டங்களில் தலைமைப் பொறியாளர் (மாநில நில மற்றும் மேற்பரப்பு நீர்வள ஆதார விவரக் குறிப்பு மையம்) அவர்களின் குறிப்புரையின்படி கிணறுகளுக்கான இடைவெளி விதிமுறைகள் பின்பற்றுதல், தேவையான நீர்செறிவூட்டும் கட்டமைப்புகள் ஏற்படுத்துதல் மற்றும் கண்காணிப்பு கிணறுகள் அமைத்தல் போன்றவற்றை தவறாமல் பின்பற்ற வேண்டுமென்ற நிபந்தனையின் அடிப்படையில் இதனை சிறப்பு நிகழ்வாகக் கருதி பாதுகாப்பான குறுவட்டங்களைத் தவிர்த்து இதர குறுவட்டங்களில் கிணறுகள் அமைக்க கடந்த 2021-2022 ஆம் ஆண்டு மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் வழங்கப்பட்டது போல் நடப்பு 2022-2023 ஆம் ஆண்டிற்கும் அனுமதி வழங்குமாறும்,

xiv. நீர் ஆதாரங்கள் ஏற்படுத்தும் பொருட்டு நிலநீர் ஆய்வின் அடிப்படையில் கண்டறியப்படும் திறந்தவெளி கிணறுகள் அமைக்கும் பணிகள் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை மூலமாக ஒருங்கிணைத்து செயல்படுத்திடவும், பணிகள் முடிக்கப்பட்ட பின், நீரிறைக்கும் அமைப்பு (மின் / சூரியசக்தி) மற்றும் இதர பணிகள் வேளாண்மைப் பொறியியல் துறை மூலமாக கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் மேற்கொள்ள அனுமதி வழங்குமாறும்,

xv. சூரிய சக்தி மூலம் செயல்படும் பம்புசெட்டுகள் அமைக்கும் பணிகள், பாதுகாப்பான குறுவட்டங்களில் உள்ள கிணறுகளுக்கு பிரதம மந்திரி விவசாயிகள் ஆற்றல் பாதுகாப்பு மற்றும் மேம்பாட்டு திட்ட (PM-KUSUM) நிதியிலிருந்தும், இதர குறுவட்டங்களில்

அமைக்கப்படும் கிணறுகளில் சூரிய சக்தி மூலம் செயல்படும் பம்புசெட்டுகள் அமைக்கும் பணிகளுக்கு கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண்மை வளர்ச்சித் திட்ட நிதியிலிருந்தும் செயல்படுத்திட அனுமதி வழங்குமாறும்,

xvi. ஆழ்துளை / குழாய் / திறந்தவெளி கிணறுகளுக்கு நீர் விநியோகக் குழாய்கள், பிரதம மந்திரியின் வேளாண் பாசனத்திட்டத்தின் துணைநிலை நீர் மேலாண்மை செயல்பாடுகள் (PMKSY-SWMA) நிதியிலிருந்து ஒன்றிய அரசின் பங்களிப்புடன் மேற்கொள்ளப்படும் நிலையில், மாநில அரசின் பங்களிப்புத் தொகை மற்றும் கூடுதலாக தேவைப்படும் விவசாயிகளின் பங்களிப்புத் தொகை ஆகியவற்றினை கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டத்திலிருந்து செலவினம் மேற்கொள்ள அனுமதி வழங்குமாறும்,

xvii. வேளாண்மைப் பொறியியல் துறையின் இனங்களில் நிதி சேமிப்பு ஏற்படுமாயின் அத்தொகையினை அரசின் அனுமதி பெற்று அடுத்த ஆண்டில் இத்திட்டப்பணிகளுக்காக செலவிட அனுமதி வழங்குமாறும்,

xviii. விசை உழுவை இயந்திரங்கள் மானியத்தில் வழங்குதல் இனங்களில் மொத்தம் 3500 விசை உழுவை இயந்திரங்களை மானியத்தில் வழங்கி, மானியத்தில் சேமிப்புத்தொகை ஏற்பட்டால், மீதமுள்ள சேமிப்புத்தொகைக்கு கூடுதல் எண்கள் விசை உழுவை இயந்திரங்கள் வழங்க தலைமைப் பொறியாளர்(வேபொ), வேளாண்மைப் பொறியியல் துறை அவர்களுக்கு அனுமதி வழங்குமாறும்,

xix. வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை மூலம் செயல்படுத்தப்பட உள்ள திட்டங்களுக்கான ரூ.14.87 கோடி நிதியினை, வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை இயக்குநர் அவர்கள் செலவினம் மேற்கொள்ள அனுமதி வழங்குமாறும், இச்செலவினத்திற்காக ரூ.14.87 கோடி நிதியினை தலைமைப் பொறியாளர் (வே.பொ) அவர்கள் வேளாண்மைப் பொறியியல் துறையின் கணக்குத் தலைப்பின் கீழ்உள்ள உப கணக்குத் தலைப்பில் உள்ள குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித்தொகையில் இருந்து பெற்று இயக்குநர், வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை அவர்களுக்கு வழங்கிட அனுமதி வழங்குமாறும், இத்திட்டத்தின் கீழ் அமைக்கப்படவுள்ள பல்நோக்கு உலர்களம் அமைக்கும் பணிகளை தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரிய பொறியியல்

பிரிவின் மூலம் மேற்கொள்ளவும், வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறைக்கு ஒதுக்கப்படும் நிதியினை தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரிய வைப்பு நிதியில் (TNSAMB – PD Account) வைத்து நிர்வகிக்க அனுமதி வழங்குமாறும்,

xx. சர்க்கரைத்துறை மூலம் செயல்படுத்தப்பட உள்ள திட்டங்களுக்கான ரூ.1.26 கோடி நிதியினை, சர்க்கரைத்துறை ஆணையர் அவர்கள் செலவினம் மேற்கொள்ள அனுமதி வழங்குமாறும், இச்செலவினத்திற்காக ரூ.1.26 கோடி நிதியினை தலைமைப் பொறியாளர் (வே.பொ) அவர்கள் வேளாண்மைப் பொறியியல் துறையின் கணக்குத் தலைப்பின் கீழ் உள்ள உப கணக்குத் தலைப்பில் உள்ள குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித்தொகையில் இருந்து பெற்று இயக்குநர், சர்க்கரைத்துறை அவர்களுக்கு வழங்கிட அனுமதி வழங்குமாறும், மேலும் இத்துறைக்காக ஒதுக்கப்படும் நிதியினை நிர்வகிக்க புதிய வங்கி கணக்கு துவங்கிட அனுமதி வழங்குமாறும்,

xxi. வேளாண்மை - உழவர் நலத்துறையின் கீழ் செயல்படும் வேளாண்மை மற்றும் சகோதரத்துறைகளின் திட்டங்களை ஒருங்கிணைத்து செயல்படுத்துவது தொடர்பான அனைத்து துறைகளுக்கான பொதுவான திட்டசெயலாக்க வழிமுறைகள் மற்றும் வேளாண்மை மற்றும் சகோதரத் துறைவாரியாக மேற்கொள்ள வேண்டிய பணிகளுக்கான வழிகாட்டு நெறிமுறைகள் இணைப்பு (II)-இல் உள்ளவாறும், தரிசுநிலத் தொகுப்புகளுக்கான மேம்பாடு மற்றும் திட்ட செயலாக்க வழிமுறைகளை இணைப்பு (III) இல் உள்ளவாறும், துறைவாரியான மற்றும் இனம் வாரியான வழிகாட்டு நெறிமுறைகளை இணைப்பு (IV) -இல் உள்ளவாறும் கடைபிடித்திட அனுமதி வழங்குமாறும்,

xxii. வேளாண்மை - உழவர் நலத்துறையின் மூலம் ஒன்றிய, மாநில நிதி பங்களிப்புடன் செயல்படுத்தப்படும் இதர திட்டங்களை ஒருங்கிணைத்து செயல்படுத்திட (Dovetailing of Schemes) அனுமதி வழங்குமாறும், அவ்வாறு ஒருங்கிணைந்து செயல்படுத்தப்படும் திட்டங்களில் 80 சதவீத திட்ட ஒதுக்கீடு (விதை, நாற்றுகள், நடவு பொருட்கள், உரங்கள், உயிர் உரங்கள், அங்கக உரங்கள், நுண்ணூட்டக்கலவை, உயிரி கட்டுப்பாட்டு காரணிகள் மற்றும் பயிர் பாதுகாப்பு மருந்துகள் உள்ளிட்ட அத்தியாவசிய இனங்கள் நீங்கலாக) தேர்வு செய்யப்பட்ட கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்ட கிராமப் பஞ்சாயத்துக்களில் செயல்படுத்திட அனுமதியும், மேலும், ஒருங்கிணைத்து செயல்படுத்தப்படும் திட்டங்களுக்கான வழிகாட்டு நெறிமுறைகள்

அந்தந்த திட்டங்களுக்காக கூறப்பட்ட நெறிமுறைகளையே கடைபிடித்திடவும் அனுமதி வழங்குமாறும்,

xxiii. உழவர் நலன் சார்ந்த இதர துறைகளான 1) வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, 2) கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, 3) கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை, 4) ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, 5) நீர்வள ஆதாரத் துறை, 6) எரிசக்தி துறை, 7) கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை ஆகிய துறைகள் மூலம் செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங்களை, கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம் செயல்படுத்தப்படும் கிராமப் பஞ்சாயத்துகளில் ஒருங்கிணைத்து செயல்படுத்துவதற்காக இணைப்பு (V) இன்படி இத்திட்டம் குறித்த துறைவாரியான விவரங்களை அங்கீகரித்து ஆணை வழங்குமாறும்,

xxiv. தேர்வு செய்யப்பட்ட 3,204 கிராம ஊராட்சிகளில் விவசாயிகள் நலன் சார்ந்த அனைத்துத் துறை திட்டங்களையும் ஒருங்கிணைத்து வெற்றிகரமாக செயல்படுத்துவதற்கு, வேளாண்மை அலுவலர் / தோட்டக்கலை அலுவலர் / துணை வேளாண்மை அலுவலர் / துணை தோட்டக்கலை அலுவலரைத் தலைவராகவும், உதவி வேளாண்மை அலுவலர் / உதவி தோட்டக்கலை அலுவலர் / உதவி விதை அலுவலர் / உதவி வேளாண்மை அலுவலர் (வேளாண் வணிகம்) அவர்களை கிராம அளவிலான திட்ட பொறுப்பு அலுவலராகவும் (Nodal Officer), இதர துறைஅலுவலர்களை உறுப்பினர்களாகவும் கொண்டு கிராம திட்ட செயலாக்கக் குழு ஒன்று இணைப்பு (VI) இன்படி அமைத்திட அனுமதி வழங்குமாறும்,

xxv. மாவட்ட அளவில் அனைத்துத் துறை திட்டங்களையும் ஒருங்கிணைத்து, கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித்திட்டத்தினை கண்காணித்திட, மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களைத் தலைவராகவும், வேளாண்மை இணை இயக்குநர் அவர்களை உறுப்பினர் செயலாளராகவும், இதரதுறை அலுவலர்களை உறுப்பினர்களாகவும் கொண்ட மாவட்ட கண்காணிப்புக் குழு ஒன்று இணைப்பு (VII) இன்படி அமைத்திட அனுமதி வழங்குமாறும்,

xxvi. மாநில அளவில், இத்திட்டத்தினை கண்காணித்திட அரசாணை (டி) எண்.176, வேளாண்மை - உழவர் நலத் (வே.உ.2) துறை, நாள்.29.10.2021 மற்றும் அரசாணை (டி) எண்.13, வேளாண்மை - உழவர் நலத் (வே.உ.2) துறை, நாள்.27.01.2022-இல் அரசு தலைமைச் செயலாளர் அவர்களின்

தலைமையில் ஏற்கனவே அமைக்கப்பட்ட மாநில அளவிலான உயர்நிலைக்குழு மூலம் கண்காணிக்க அனுமதி வழங்குமாறும்,

xxvii. விரிவான கிராம வேளாண் வளர்ச்சித் திட்ட அறிக்கையினை (Detailed Project Report) மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையின்படி வழங்கப்பட்ட படிவங்களில் தயாரிக்க அனுமதி வழங்குமாறும், மேலும் வழங்கப்பட்ட படிவங்களில் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு வேளாண்மை இயக்குநர் அவர்களுக்கு அதிகாரம் வழங்குமாறும்,

xxviii. இத்திட்டத்தில் உள்ள இனங்களை செயல்படுத்தும் போது கள நிலவரத்திற்கு ஏற்றவாறு வழிகாட்டு நெறிமுறைகளில் மாற்றங்கள் செய்து கொள்ள சம்பந்தப்பட்ட துறைத் தலைவர்களுக்கு அதிகாரம் வழங்குமாறும் வேளாண்மை இயக்குநர் அரசினை கேட்டுக் கொண்டுள்ளார்.

4. மேற்காணும் வேளாண்மை இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமாக பரிசீலித்து, பின்வரும் இனங்களின் மீது கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடுகிறது:-

I. 2021-2022 ஆம் ஆண்டில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறையின் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தினை செயல்படுத்த தேர்வு செய்யப்பட்ட 2657 கிராமப் பஞ்சாயத்துகளில், மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையின்படி அனுமதியளிக்கப்பட்ட 1,997 கிராமப் பஞ்சாயத்துக்கள் போக, எஞ்சிய 660 கிராமப் பஞ்சாயத்துகளுடன் நடப்பு 2022-2023 ஆம் நிதி ஆண்டில் "கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டத்தினை செயல்படுத்திட தேர்வு செய்யப்பட்ட 2,544 கிராமப் பஞ்சாயத்துகளுடன் சேர்த்து மொத்தமாக 3,204 கிராமப் பஞ்சாயத்துகளில் ஒருங்கிணைத்து இத்திட்டத்தினை செயல்படுத்த அனுமதியும்,

II. 2022-2023-இல் மாண்புமிகு வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டத்தினை, ஒருங்கிணைந்து செயல்படுத்திட வேளாண்மைத்துறைக்கு ரூ.24.2167 கோடியும், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறைக்கு ரூ.28.81256 கோடியும், வேளாண்மைப் பொறியியல் துறைக்கு ரூ.166.245 கோடியும், வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறைக்கு ரூ.14.175 கோடியும் மற்றும் சர்க்கரைத்துறைக்கு ரூ.0.78 கோடியும் ஆக மொத்தம் ரூ.234,22,92,600/- (ரூபாய் இருநூற்று முப்பத்து நான்கு கோடியே

இருபத்து இரண்டு இலட்சத்து தொண்ணூற்று இரண்டு ஆயிரத்து அறுநூறு மட்டும்) மாநில நிதியிலிருந்து நிதிஒப்பளிப்பு வழங்கியும்,

III. வேளாண்மைத்துறை மூலமாக இத்திட்டத்தினை செயல்படுத்திட ரூ.24.2167 கோடியினை வேளாண்மை இயக்குநர் அவர்கள் இணைப்பு –I இல் உள்ள அட்டவணை (அ) வின்படி செலவினம் மேற்கொள்ள அனுமதி வழங்கியும், திட்ட செயலாக்கத்தின் போது கள நிலவரத்தின் அடிப்படையில், இனங்களின் நிதி இலக்கிற்கு மிகாமல் பொருள் இலக்கினை மாற்றி அமைத்துக்கொள்ள வேளாண்மை இயக்குநருக்கு அனுமதி அளித்து அது தொடர்பான செயல்பாட்டு வழிமுறைகளை (Excecutive Guidelines) வேளாண்மை இயக்குநர் அவர்களே மாற்றி அமைத்துக்கொள்ளஅனுமதி வழங்கியும்,

IV. 2022-2023 ஆம் ஆண்டில் இத்திட்டம் செயல்படுத்தப்படும் 3,204 கிராமப் பஞ்சாயத்துக்களில், வழங்கப்பட்ட வழிகாட்டுதல்களின்படி விவசாயிகளுக்கு திட்ட இனங்களை செயல்படுத்த, போதிய எண்ணிக்கையில் பயனாளிகள் இல்லாத பட்சத்தில் அக்கிராமங்களுக்கென வழங்கப்பட்ட இலக்கினை, நடப்பு ஆண்டில் அதே வட்டாரத்தில் கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் தேர்வு செய்யப்பட்ட பிற கிராமப் பஞ்சாயத்துக்களில், இலக்கினை மாற்றி அமைத்து திட்டத்தினை செயல்படுத்திட சம்பந்தப்பட்ட வட்டார வேளாண்மை-உழவர்நலத்துறை அலுவலர்களுக்கு அதிகாரம் வழங்க அனுமதி வழங்கியும்,

V. மேலும், அந்த வட்டாரத்திற்குள்ளும் போதிய விவசாயிகள் இல்லாத பட்சத்தில் அந்த மாவட்டத்திற்குள் கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டத்தின்கீழ் தேர்வு செய்யப்பட்ட பிற கிராமப் பஞ்சாயத்துக்களில் அவ்வினங்களை மாற்றி அமைத்துக்கொள்ள சம்பந்தப்பட்ட மாவட்ட வேளாண்மை-உழவர்நலத்துறை அலுவலர்களுக்கு அதிகாரம் வழங்க அனுமதி வழங்கியும்,

VI. அதற்கும் மேலாக அவ்வினத்தின் இலக்கினை மாவட்டத்திற்குள் செயல்படுத்த இயலாத நிலை ஏற்படும்போது அவ்விலக்கினை மாநிலத்திற்குள் கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டம் செயல்படுத்தப்படும் வேறு சில மாவட்டத்தில் உள்ள கிராமப் பஞ்சாயத்துக்களுக்கு மாற்றம் செய்துகொள்ள வேளாண்மைத்துறை இயக்குநருக்கு / தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநருக்கு / தலைமை பொறியாளருக்கு (வே.பொ) / சர்க்கரைத்துறை

இயக்குநருக்கு மற்றும் வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை இயக்குநருக்கும் அதிகாரம் வழங்கியும், ,

VII. நீலகிரி மாவட்டம், திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள கொடைக்கானல் வட்டாரம் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் உள்ள வெள்ளிமலை வட்டாரம் ஆகிய பகுதிகளில் வேளாண்மைத் துறைக்கான அலுவலகங்கள் இல்லாததால் அப்பகுதிக்கு ஒதுக்கப்பட்ட வேளாண்மைத் துறையின் திட்டங்களின் இலக்குகள், சம்பந்தப்பட்ட தோட்டக்கலைத் துறையின் மூலம் செயல்படுத்திட அனுமதியும், இப்பகுதிக்கு தேவையான இடுபொருட்கள் கொள்முதல் பணிகள், நிதி செலவினத்தை, நீலகிரி மாவட்டத்திற்காக வேளாண்மை இணை இயக்குநர், கோயம்புத்தூர் அவர்களும், கொடைக்கானல் வட்டாரத்திற்காக வேளாண்மை இணை இயக்குநர், திண்டுக்கல் அவர்களும் வெள்ளிமலை வட்டாரத்திற்காக வேளாண்மை இணை இயக்குநர், கள்ளக்குறிச்சி அவர்களும் மேற்கொள்ள அனுமதியும், பயனாளிகள் தேர்வு மற்றும் விவசாயிகளுக்கு விநியோகம் செய்யும் பணிகள் தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை மூலமாக மேற்கொள்ள அனுமதி வழங்கியும்,

VIII. வேளாண்மைத்துறை மூலம் செயல்படுத்தப்படும் "தென்னங்கன்றுகள் விநியோகம்" இனத்திற்கு தேவைப்படும் 19.164 இலட்சம் நெட்டை தென்னங்கன்றுகளில் வேளாண்மைத்துறையின் கட்டுப்பாட்டிலுள்ள அரசு தென்னை நாற்றுப் பண்ணைகள் மூலமாக 10.00 இலட்சம் தென்னங்கன்றுகளும், தோட்டக்கலைத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள அரசு தோட்டக்கலைப் பண்ணைகள் மூலமாக 9.164 இலட்சம் கன்றுகளும், கன்று ஒன்றுக்கு ரூ.60/- வீதம் உற்பத்தி செய்து விநியோகம் செய்யப்பட உள்ளதால் விதைநெற்று கொள்முதல் மற்றும் உற்பத்தி செலவினங்களை மேற்கொள்ளும் பொருட்டு வேளாண்மைத் துறை மூலம் உற்பத்தி செய்யப்பட உள்ள 10 இலட்சம் தென்னங்கன்றுகளுக்கான முழுத் தொகை ரூ. 6.00 கோடியினை துணைத் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு விதை மேம்பாட்டு முகமை அவர்களுக்கும், தோட்டக்கலைத் துறை மூலம் உற்பத்தி செய்யப்படும் 9.164 இலட்சம் தென்னங் கன்றுகளுக்கான முழுத் தொகை ரூ.5.4984 கோடியினை மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு தோட்டக்கலை வளர்ச்சி முகமை அவர்களுக்கும் பெற்று வழங்கிட வேளாண்மை இயக்குநருக்கு அனுமதி வழங்கியும்,

IX. தரிசு நிலங்களை பதிவு செய்வதற்கான செலவினம் மேற்கொள்ள தேவையான நிதி வேளாண்மைத் துறைக்கு மட்டுமே திட்டத்தில் ஒதுக்கீடு செய்ய கோரப்பட்டுள்ள நிலையில், கிராமப் பஞ்சாயத்துக்களில் தரிசு நிலத் தொகுப்புகளை அமைக்கும் பணிகளை தோட்டக்கலைத் துறை, வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறையின் மூலம் நியமிக்கப்பட்ட பொறுப்பு அலுவலர்கள் (Nodal Officers) மேற்கொள்ளும் போது, தரிசு நிலத் தொகுப்புகளை பதிவு செய்வதற்கான செலவினங்களை அந்தந்தத் துறையின் பொறுப்பு அலுவலர்களே மேற்கொள்ளவும் அவ்வாறான செலவினத் தொகையினை உரிய ஆவணங்களை சமர்ப்பித்து சம்பந்தப்பட்ட வட்டார வேளாண்மை உதவி இயக்குநரிடமிருந்து மீள பெற்றுக் கொள்ள அனுமதி வழங்கியும்,

X. தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை மூலம் செயல்படுத்தப்பட உள்ள திட்டங்களுக்கான ரூ.28.81256 கோடி நிதியினை, தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் அவர்கள் இணைப்பு-I இல் உள்ள அட்டவணை (ஆ) வின்படி செலவினம் மேற்கொள்ள அனுமதியும், திட்ட செயலாக்கத்தின் போது கள நிலவரத்தின் அடிப்படையில் இனங்களின் நிதி இலக்கினை மிகாமல் பொருள் இலக்கினை மாற்றி அமைத்துக்கொள்ள தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநருக்கு அனுமதி அளித்தும் அது தொடர்பான செயல்பாட்டு வழிமுறைகளை (Excecutive Guidelines) தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறையின் இயக்குநர் அவர்களே மாற்றி அமைத்துக்கொள்ள அனுமதி வழங்கியும்,

XI. வேளாண்மைப் பொறியியல் துறை மூலம் செயல்படுத்தப்பட உள்ள திட்டங்களுக்கான ரூ.166.245 கோடி நிதியினை, தலைமைப் பொறியாளர்(வே.பொ), வேளாண்மைப் பொறியியல் துறை அவர்கள் இணைப்பு –I இல் உள்ள அட்டவணை (இ) இன்படி செலவினம் மேற்கொள்ள அனுமதி வழங்கியும்,

XII. மேலும், இத்திட்டம் செயல்படுத்தப்படும்போது, கிணறுகள் அமைக்கும் பணியில் உள்ள உப இனங்களில் (ஆழ்துளைக் கிணறு / குழாய்க் கிணறு) நிலநீர் ஆய்வு அறிக்கை அடிப்படையில் கிடைக்கக்கூடிய நீரின் அளவினைப் பொறுத்து (Well yield) ஆழ்துளை / குழாய்க் கிணறுகளின் தேவை அடிப்படையில் கிணறுகளின் எண்ணிக்கை மற்றும் அளவுகளில் மாற்றம் செய்துகொள்ள தலைமைப் பொறியாளர் (வே.பொ), வேளாண்மைப் பொறியியல் துறை அவர்களுக்கு அனுமதி வழங்கியும்,

XIII. கிணறுகளின் வகையும், ஆழமும், மோட்டாரின் குதிரைத் திறனும் (HP), அதற்கான நிதி தேவையும், ஒவ்வொரு தொகுப்பு நிலங்களின் நிலநீர் ஆய்வு அறிக்கையின் அடிப்படையில் மாறுபடும் நிலையில், முதற்கட்ட நில நீர் ஆய்வின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்ட 3,204 கிராமப் பஞ்சாயத்துகளில் அமையவுள்ள ஆழ்துளைக் கிணறுகளும் குழாய் கிணறுகளும், அரசாணை எண். 142, பொதுப்பணி (ஆர் 2) துறை, தேதி.23.07.2014-இல் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை தளர்வு செய்து மித அபாயகரமான நுகர்வு (Semi Criticial) அபாயகரமான நுகர்வு (Critical) மற்றும் அதி நுகர்வு (Over Exploited) குறுவட்டங்களில் தலைமைப் பொறியாளர் (மாநில நில மற்றும் மேற்பரப்பு நீர்வள ஆதார விவரக் குறிப்பு மையம்) அவர்களின் குறிப்புரையின்படி கிணறுகளுக்கான இடைவெளி விதிமுறைகள் பின்பற்றுதல், தேவையான நீர்செறிவூட்டும் கட்டமைப்புகள் ஏற்படுத்துதல் மற்றும் கண்காணிப்பு கிணறுகள் அமைத்தல் போன்றவற்றை தவறாமல் பின்பற்ற வேண்டுமென்ற நிபந்தனையின் அடிப்படையில் இதனை சிறப்பு நிகழ்வாகக் கருதி பாதுகாப்பான குறுவட்டங்களைத் தவிர்த்து இதர குறுவட்டங்களில் கிணறுகள் அமைக்க சிறப்பு அனுமதி வழங்கியும்,

XIV. நீர் ஆதாரங்கள் ஏற்படுத்தும் பொருட்டு நிலநீர் ஆய்வின் அடிப்படையில் கண்டறியப்படும் திறந்தவெளி கிணறுகள் அமைக்கும் பணிகள் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை மூலமாக ஒருங்கிணைத்து செயல்படுத்திடவும், பணிகள் முடிக்கப்பட்ட பின் நீரிறைக்கும் அமைப்பு (மின் / சூரியசக்தி) மற்றும் இதர பணிகளை வேளாண்மைப் பொறியியல் துறை மூலமாக கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் மேற்கொள்ள அனுமதி வழங்கியும்,

XV. பாதுகாப்பான குறுவட்டங்களில் உள்ள கிணறுகளில் சூரிய சக்தி மூலம் செயல்படும் பம்புசெட்டுகள் அமைக்கும் பணிகளுக்கு பிரதம மந்திரி விவசாயிகள் ஆற்றல் பாதுகாப்பு மற்றும் மேம்பாட்டு திட்ட (PM-KUSUM) நிதியிலிருந்தும், இதர குறுவட்டங்களில் அமைக்கப்படும் கிணறுகளில் சூரிய சக்தி மூலம் செயல்படும் பம்புசெட்டுகள் அமைக்கும் பணிகளுக்கு கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்ட நிதியிலிருந்தும் செயல்படுத்திட அனுமதி வழங்கியும்,

XVI. ஆழ்துளை / குழாய் / திறந்தவெளி கிணறுகளுக்கு, நீர் விநியோக குழாய்கள், பிரதம மந்திரியின் நுண்ணீர் பாசனத்திட்டத்தின் துணைநிலை நீர் மேலாண்மை செயல்பாடுகள் (PMKSY-SWMA) நிதியிலிருந்து ஒன்றிய அரசின் பங்களிப்புடன் மேற்கொள்ளப்படும்

நிலையில், மாநில அரசின் பங்களிப்புத் தொகை மற்றும் கூடுதலாக தேவைப்படும் விவசாயிகளின் பங்களிப்புத் தொகை ஆகியவற்றினை கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டத்திலிருந்து செலவினம் மேற்கொள்ள அனுமதி வழங்கியும்,

XVII. வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை மூலம் செயல்படுத்தப்பட உள்ள திட்டங்களுக்கான ரூ.14.175 கோடி நிதியினை, வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை இயக்குநர் அவர்கள் இணைப்பு –I இல் உள்ள அட்டவணை (ஈ) இன்படி செலவினம் மேற்கொள்ள அனுமதி வழங்கியும், இத்திட்டத்தின் கீழ் அமைக்கப்படவுள்ள பல்நோக்கு உலர்களம் அமைக்கும் பணிகளை தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரிய பொறியியல் பிரிவின் மூலம் மேற்கொள்ளவும், வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறைக்கு ஒதுக்கப்படும் நிதியினை தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரிய வைப்பு நிதியில் (TNSAMB – PD Account) வைத்து நிர்வகிக்க அனுமதி வழங்கியும்,

XVIII. சர்க்கரைத்துறை மூலம் செயல்படுத்தப்பட உள்ள திட்டங்களுக்கான ரூ.0.78 கோடி நிதியினை, சர்க்கரைத்துறை ஆணையர் அவர்கள் இணைப்பு –I இல் உள்ள அட்டவணை (உ) இன்படி செலவினம் மேற்கொள்ள அனுமதி வழங்கியும், மேலும் இத்துறைக்காக ஒதுக்கப்படும் நிதியினை நிர்வகிக்க புதிய வங்கி கணக்கு துவங்கிட அனுமதி வழங்கியும்,

XIX. வேளாண்மை-உழவர் நலத்துறையின் கீழ் செயல்படும் வேளாண்மை மற்றும் சகோதரத்துறைகளின் திட்டங்களை ஒருங்கிணைத்து செயல்படுத்துவது தொடர்பான அனைத்து துறைகளுக்கான பொதுவான திட்டசெயலாக்க வழிமுறைகள் மற்றும் வேளாண்மை மற்றும் சகோதரத் துறைவாரியாக மேற்கொள்ள வேண்டிய பணிகளுக்கான வழிகாட்டு நெறிமுறைகளை இணைப்பு (II)-இல் உள்ளவாறும், தரிசு நிலத் தொகுப்புகளுக்கான மேம்பாடு மற்றும் திட்ட செயலாக்க வழிமுறைகளை இணைப்பு (III) இல் உள்ளவாறும், துறைவாரியான மற்றும் இனம் வாரியான வழிகாட்டு நெறிமுறைகளை இணைப்பு (IV) -இல் உள்ளவாறு அங்கீகரித்தும்,

XX. வேளாண்மை - உழவர் நலத்துறையின் மூலம் ஒன்றிய, மாநில நிதி பங்களிப்புடன் செயல்படுத்தப்படும் இதர திட்டங்களை ஒருங்கிணைத்து செயல்படுத்திட (Dovetailing of Schemes) அனுமதி வழங்கியும், அவ்வாறு ஒருங்கிணைந்து செயல்படுத்தப்படும் திட்டங்களில் 80 சதவீத திட்ட ஒதுக்கீடு (விதை, நாற்றுகள், நடவு

பொருட்கள், உரங்கள், உயிர் உரங்கள், நுண்ணூட்டக்கலவை, அங்கக உரங்கள், உயிரி கட்டுப்பாட்டு காரணிகள் மற்றும் பயிர் பாதுகாப்பு மருந்துகள் உள்ளிட்ட அத்தியாவசிய இனங்கள் நீங்கலாக) தேர்வு செய்யப்பட்ட கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்ட கிராமப் பஞ்சாயத்துக்களில் செயல்படுத்திட அனுமதி வழங்கியும், மேலும், ஒருங்கிணைத்து செயல்படுத்தப்படும் திட்டங்களுக்கான வழிகாட்டு நெறிமுறைகள் அந்தந்த திட்டங்களுக்காக கூறப்பட்ட நெறிமுறைகளையே கடைப்பிடித்திட அனுமதி வழங்கியும்,

XXI. இத்திட்டத்தின்கீழ் ஒதுக்கீடு செய்யப்படும் நிதியில், தனிப்பட்ட விவசாயிகளுக்கான கூறுகளைப் பொருத்தவரையில் விகிதாச்சார அடிப்படையில் பொது (80%), ஆதிதிராவிடர் (19%) மற்றும் பழங்குடியினர் (1%) என்ற கணக்கீட்டின்படி விவசாயிகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்து வழங்கவும்.

XXII. தேர்வு செய்யப்பட்ட 3,204 கிராம ஊராட்சிகளில் விவசாயிகள் நலன் சார்ந்த அனைத்துத் துறை திட்டங்களையும் ஒருங்கிணைத்து வெற்றிகரமாக செயல்படுத்துவதற்கு, வேளாண்மை அலுவலர் / தோட்டக்கலை அலுவலர் / துணை வேளாண்மை அலுவலர் / துணை தோட்டக்கலை அலுவலரைத் தலைவராகவும், உதவி வேளாண்மை அலுவலர் / உதவி தோட்டக்கலை அலுவலர் / உதவி விதை அலுவலர் / உதவி வேளாண்மை அலுவலர் (வேளாண் வணிகம்) அவர்களை கிராம அளவிலான திட்ட பொறுப்பு அலுவலராகவும் (Nodal Officer), இதரதுறை அலுவலர்களை உறுப்பினர்களாகவும் கொண்டு கிராம திட்ட செயலாக்கக் குழு ஒன்று இணைப்பு (V) இன்படி அமைத்திட அனுமதி வழங்கியும்,

XXIII. மாவட்ட அளவில் அனைத்துத் துறை திட்டங்களையும் ஒருங்கிணைத்து, கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித்திட்டத்தினை கண்காணித்திட, மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களைத் தலைவராகவும், வேளாண்மை இணை இயக்குநர் அவர்களை உறுப்பினர் செயலாளராகவும், இதரத்துறை அலுவலர்களை உறுப்பினர்களாகவும் கொண்ட மாவட்ட கண்காணிப்புக் குழு ஒன்று இணைப்பு (VI) இன்படி அமைத்திட அனுமதி வழங்கியும்,

XXIV. மாநில அளவில், இத்திட்டத்தினை கண்காணித்திட அரசாணை (டி) எண்.176, வேளாண்மை - உழவர் நலத் (வே.உ.2) துறை, நாள்.29.10.2021 மற்றும் அரசாணை (டி) எண்.13, வேளாண்மை - உழவர் நலத் (வே.உ.2) துறை, நாள்.27.01.2022-இல் அரசு தலைமைச் செயலாளர் அவர்களின் தலைமையில் ஏற்கனவே

அமைக்கப்பட்ட மாநில அளவிலான உயர்நிலைக்குழு மூலம் கண்காணிக்க அனுமதி வழங்கியும்,

XXV. விரிவான கிராம வேளாண் வளர்ச்சித் திட்ட அறிக்கையினை (Detailed Project Report) மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையின்படி வழங்கப்பட்ட படிவங்களில் தயாரிக்க அனுமதி வழங்கியும், மேலும் வழங்கப்பட்ட படிவங்களில் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு வேளாண்மை இயக்குநர் அவர்களுக்கு அனுமதி வழங்கியும்,

XXVI. இத்திட்டத்தில் உள்ள இனங்களை செயல்படுத்தும் போது கள நிலவரத்திற்கு ஏற்றவாறு வழிகாட்டு நெறிமுறைகளில் மாற்றங்கள் செய்து கொள்ள சம்பந்தப்பட்ட துறைத் தலைவர்களுக்கு அனுமதி வழங்கியும்,

XXVII. இத்திட்டத்தில் ஒப்பளிப்பு செய்யப்படும் தொகையில், நிதி சேமிப்பு ஏற்படுமாயின் இந்நிதியாண்டின் இறுதியில் உரிய அரசு கணக்கில் செலுத்த துறைத்தலைவர்களை அறிவுறுத்தியும் அரசு ஆணைவெளியிடுகிறது.

5. மேலும், 2022-2023 ஆம் ஆண்டில் உழவர் நலன் சார்ந்த இதர துறைகளான 1) வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, 2) கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, 3) கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை, 4) ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, 5) நீர்வள ஆதாரத் துறை, 6) எரிசக்தி துறை, 7) கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை ஆகிய துறைகள் மூலம் செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங்களை ஒருங்கிணைத்து செயல்படுத்துதல் குறித்து இதர துறைவாரியான விவரங்கள் மற்றும் வழிகாட்டு நெறிமுறைகள் பின்னர் தனியே வெளியிடப்படும்.

6. மேலே பத்தி 4(ii)-இல் ஒப்பளிக்கப்பட்ட தொகை ரூ.234,22,92,600/-ஐ கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பில் பற்று வைக்கப்படவேண்டும்:-

2401 00 பயிர் வளர்ப்பு 104 வேளாண்மைப் பண்ணைகள்- மாநிலச் செலவினங்கள் AG கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம்

"305 அலுவலகச் செலவுகள் 02 ஏனைய சில்லறைச் செலவுகள்"
(த.தொ.கு 2401 00 104 AG 30502) ரூ. 154,33,000/-

"311 மானியங்கள் 01 தனித்திட்ட மானியம்"
(த.தொ.கு 2401 00 104 AG 31101) ரூ. 22,67,34,000/-

2401 00 பயிர் வளர்ப்பு 119 தோட்டக் கலையும் காய்கறிப் பயிர் வளர்ப்பும் – மாநிலச் செலவினங்கள் BI கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம்

"305 அலுவலகச் செலவுகள் 02 ஏனைய சில்லறைச் செலவுகள்"
(த.தொ.கு2401 00 119 BI 30502) ரூ.100,000/-

"311 மானியங்கள் 01 தனித்திட்ட மானியம்"
(த.தொ.கு2401 00 119 BI 31101) ரூ. 28,80,25,600/-

2401 00 பயிர் வளர்ப்பு 113 வேளாண்மைப் பொறியியல் மாநிலச் செலவினங்கள் AK கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம்

"305 அலுவலகச் செலவுகள் 02 ஏனைய சில்லறைச் செலவுகள்"
(த.தொ.கு2401 00 113 AK 30502) ரூ.100,000/-

"309 உதவித் தொகை 03 குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித்தொகை"
(த.தொ.கு2401 00 113 AK 30903) ரூ. 181,19,00,000/-

7. மேலே பத்தி 4(ii)- இல் அனைத்து திட்டங்களுக்காக ஒப்பளிக்கப்படும் மானியங்களை அந்தந்த இனங்கங்களின் வழிகாட்டு நெறிமுறைகளில் குறிப்பிட்டபடி கொள்முதல் செய்து விநியோகம் செய்திட அனுமதி வழங்கியும், மேலே பத்தி 4(ii)-இல் வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறைக்கு ஒப்பளிப்பு செய்யப்பட்ட ரூ.14.175 கோடி நிதியினை இயக்குநர், வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை அவர்களுக்கும், சர்க்கரைத்துறைக்கு ஒப்பளிப்பு செய்யப்பட்ட ரூ.0.78 கோடி நிதியினை ஆணையர், சர்க்கரைத்துறை அவர்களுக்கும் தலைமைப் பொறியாளர் (வே.பொ) அவர்கள் வேளாண்மைப் பொறியியல் துறையின் கணக்குத் தலைப்பின்கீழ் உள்ள 2401-00-113- AK- 30903 - குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித்தொகை என்ற உப கணக்குத் தலைப்பில் இருந்து பெற்று வழங்கிடவும் அரசு ஆணையிடுகிறது.

8. மேலே பத்தி 4(ii)-இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்திற்கான கூடுதல் நிதியொதுக்கம் ரூ.23,08,92,600/- ஐ "2401 00 113 AK 30903 குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித்தொகை" என்ற கணக்கு தலைப்பிலிருந்து கீழ்க்கண்டவாறு மறுநிதியொதுக்கம் மூலம் வழங்கப்படும்.

(ரூபாய் ஆயிரத்தில்)

| வ.எண். | கணக்குத் தலைப்பு | வரவு செலவு திட்ட மதிப்பீடு | தற்போது மறுநிதியொதுக்கம் செய்யப்படும் தொகை | மறுநிதியொதுக்கத்திற்கு பிறகு |
|---|---|---|---|---|
| 1. | 2401 00 104 AG 30502 | 1,43,05 | 11,28 | 1,54,33 |
| 2. | 2401 00 104 AG 31101 | 20,24,95 | 2,42,39 | 22,67,34 |
| 3. | 2401 00 119 BI 31101 | 8,25,00 | 20,55,25.6 | 28,80,25.6 |
| 4. | 2401 00 113 AK 30903 | 270,00,00 | (-)23,08,92.6 | 246,91,07.4 |
| | **மொத்தம்** | **299,93,00** | **-** | **299,93,00** |

9. 2022-2023 ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடு/இறுதித் திருத்த நிதியொதுக்கத்திற்கான கருத்துருவை உரிய நேரத்தில் நிதித் (வ.செ.பொ.1/வேளாண்மை) துறைக்கு அனுப்புமாறு தலைமைப்பொறியாளர் (வேளாண்மை பொறியியல்) துறை அறிவுறுத்தப்படுகிறார்.

10. இவ்வரசாணை நிதித்துறையின் அ.சா.எண். 579/ADS(GKT)/2022, நாள் 16.12.2022 மற்றும் கூடுதல் நிதியொதுக்கப் பேரேட்டு எண். 2052- இன்படி ஒப்புதலைப் பெற்று வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**சி. சமயமூர்த்தி**
**வேளாண்மை உற்பத்தி ஆணையர்**
**மற்றும் அரசு செயலாளர்**

**<u>பெறுநர்</u>**

வேளாண்மை இயக்குநர், சென்னை-5.
ஆணையர் / முதன்மைச் செயலாளர், சர்க்கரைத்துறை, , சென்னை -35.
இயக்குநர், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை, சென்னை-5.
இயக்குநர், வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகம், சென்னை-32.
தலைமைப் பொறியாளர் (வே.பொ), வேளாண்மை பொறியியல் துறை, அண்ணாசாலை, சென்னை-35.
துணைத் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு விதை மேம்பாட்டு முகமை, சென்னை-5.

மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு தோட்டக்கலை வளர்ச்சி மேம்பாட்டு முகமை, சென்னை-5.
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், நீர்வளத்துறை, தலைமைச் செயலகம், சென்னை -9.
அரசு முதன்மைச்செயலாளர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, தலைமைச் செயலகம், சென்னை -9.
பதிவாளர், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம், கோயம்புத்தூர்-3.
இயக்குநர், விதைச்சான்று துறை, கோயம்புத்தூர்-3
முதன்மை மாநில கணக்காயர் (G&SSA), சென்னை-18.
முதன்மை மாநில கணக்காயர் (E&SSA), சென்னை-18.
மாநில கணக்காயர் (தணிக்கை), சென்னை-18.
உறைவிட தணிக்கை அலுவலர், முதன்மை மாநில கணக்காயர் அலுவலகம், சென்னை -9.
சம்பள கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை-8.

<u>நகல்</u>

மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், தலைமைச் செயலகம், சென்னை-9.
மாண்புமிகு நீர்வளத்துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், தலைமைச் செயலகம், சென்னை -9.
மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை அமைச்சர்அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை -9.
மாண்புமிகு நிதி மற்றும் மனித வள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், தலைமைச் செயலகம், சென்னை -9.
தலைமைச் செயலாளர் அவர்களின் முதுநிலை தனிச் செயலர், தலைமைச் செயலகம், சென்னை -9.
வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு செயலாளர் அவர்களின் முதுநிலை தனிச் செயலாளர், வேளாண்மை – உழவர் நலத் துறை, தலைமைச் செயலகம், சென்னை-9.
நிதித் ( வேளாண்-உ ந/வ.செ (செலவினம்.I /II) /வ.வ.நி) துறை, சென்னை-9.
வேளாண்மை – உழவர் நலத் (அனைத்து திட்டப்பிரிவுகள்) துறை, சென்னை -9,
உதவி நிரலர், வேளாண்மை – உழவர் நலத் துறை, சென்னை-9.
சம்மந்தப்பட்ட கோப்பு எண்.11373/வஇபதி/2022.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர். 14/12/22
16/12/22

அரசாணை (நிலை) எண். 298, வேளாண்மை-உழவர்நலத் (வஇபதி) துறை, நாள் 16.12.2022.

# இணைப்பு – I

## கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம் 2022-2023

**துறை வாரியான மற்றும் இன வாரியான திட்டப் பணிகள் குறித்த விவரங்கள்**

**அட்டவணை-அ**

### வேளாண்மைத்துறை

| வ. எண் | பணியின் விபரம் | ஒரு அலகு தொகை ரூபாய் | அலகு | பொருள் அலகுகள் | நிதி (ரூ. கோடி) |
|---|---|---|---|---|---|
| 1 | தென்னங்கன்று விநியோகம் | நெட்டை தென்னங்கன்று ஒன்றுக்கு ரூ.60 வீதம் (2 கன்றுகள் x ரூ.60 x 300 குடும்பம் x 3194* கிராமங்கள்) – 100% மானியம் | இலட்சம் கன்றுகள் | 19.164 | 11.4984 |
| 2 | திரவ உயிர் உரங்கள் விநியோகம் | ஒரு எக்டருக்கு 50% மானியம் அல்லது ரூ.300 இதில் எது குறைவோ @ ஒரு கிராம பஞ்சாயத்திற்கு 30-35 எக்டர் வரை | எக்டர் | 1,00,000 | 3.0000 |
| 3 | விசைத்தெளிப் பான் – விநியோகம் (Power / Battery Operated) | விசைத்தெளிப்பான் ஒன்றின் விலையான ரூ.6,000/-ல் மானியம் ரூ.3,000/- அல்லது 50 சதவீத மானியம் இதில் எது குறைவோ @ ஒரு கிராம பஞ்சாயத்திற்கு 8-9 எண்கள். | எண்கள் | 27,250 | 8.175 |
| | மொத்தம் | | | | 22.6734 |

| வ. எ ண் | பணியின் விபரம் | ஒரு அலகு தொகை ரூபாய் | அலகு | பொருள் அலகு கள் | நிதி (ரூ. கோடி) |
|---|---|---|---|---|---|
| 4 | தரிசு நில தொகுப்புகளை பதிவுசெய்தல் | ஒரு தொகுப்பிற்கு ரூ.5100/- மற்றும்ஆவணங்களுக்கான செலவு ரூ.1900/- மொத்தம் ரூ.7,000/- | எண்கள் | 900 | 0.6300 |
| 5 | தகவல், கல்வி, தகவல் பரிமாற்றம் (IEC) | ஒரு கிராமத்திற்கு ரூ.2000/- (3204 கிராமங்கள் ) | எண்கள் | 3,204 | 0.6408 |
| 6 | திட்ட செயலாக்கம், விளம்பரம் மற்றும் ஆவணப்படுத்து தல்-மாவட்டம் | ஒரு மாவட்டத்திற்கு ரூ.25,000/-<br>1. துண்டு பிரசுரங்கள், கையேடு தயாரித்தல், விளம்பரம் போன்றவை ரூ.5,000<br>2. விரிவான திட்ட அறிக்கை தயாரித்தல்- ரூ.5,000/-<br>3. ஆவணப்படுத்துதல்- ரூ.5,000/-<br>4. சில்லரை செலவினம்- LS ரூ.10,000/- | எண்கள் | 37 | 0.0925 |
| 7 | விரிவான திட்ட அறிக்கை மற்றும் திட்ட கையேடு தயாரித்தல் | கிராம அளவிலான விரிவான திட்ட அறிக்கை தயாரித்தல், துண்டு பிரசுரங்கள், விளம்பரம், கையேடு தயாரித்தல் போன்றவை @ ரூ.500X3204 = ரூ. 16.02 இலட்சம்<br>மாநில அளவில் திட்ட கையேடு தயாரித்தல் ரூ.0.98 இலட்சம் | | | 0.1700 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 8 | விளம்பரம், ஆவணப்படுத்து தல், கூட்ட நடவடிக்கைக் கான செலவீனங்கள் மற்றும் சில்லறை செலவீனங்கள்- மாநிலம் | மாநில அளவில் - LS | எண் | மாநிலம் | 0.010 |
| | மொத்தம் | | | | 1.5433 |
| | ஆக மொத்தம் | | | | 24.2167 |

*நீலகிரி மாவட்ட 7 கிராமப் பஞ்சாயத்துக்கள் மற்றும் திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானல் வட்டார 3 கிராமப் பஞ்சாயத்துக்கள் நீங்கலாக

## அட்டவணை-ஆ

**தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை**

| வ. எண் | திட்ட இனம் | ஒரு அலகு முழு விலை மற்றும் மானியத் தொகை | அலகு | பொருள் | நிதி (ரூ. கோடி) |
|---|---|---|---|---|---|
| 1 | சந்தைகளில் காய்கறிகள் வரத்தினை அதிகரிக்க காய்கறி சாகுபடியை ஊக்குவித்தல் | எக்டர் ஒன்றிற்கு மொத்த தொகை ரூ. 10,000/- த்தில் 75 சதவீத மானியமாக ரூ. 7,500 மதிப்பிலான காய்கறி விதைகள் மற்றும் இடுபொருட்கள் வழங்கப்படும். | எக்டர் | 8,180.48 | 6.13536 |
| 2 | ஊட்டச்சத்து தன்னிறைவை மேம்படுத்த பழச்செடி தொகுப்புகள் வழங்குதல் (போக்குவரத்து செலவு உட்பட) | ரூ. 160/- மதிப்பிலான 5 பழச்செடிகள் அடங்கிய தொகுப்பிற்கு 75 சதவீத மானியமாக ரூ. 120 / தொகுப்பு என்ற வீதத்தில் வழங்கப்படும் | எண்கள் | 2,25,500 | 2.7060 |

| வ. எண் | திட்ட இனம் | ஒரு அலகு முழு விலை மற்றும் மானியத் தொகை | அலகு | பொருள் | நிதி (ரூ. கோடி) |
|---|---|---|---|---|---|
| 3 | காய்கறி விதைத் தளைகள் விநியோகம் | ரூ.40/- மதிப்பிலான 8 வகையான காய்கறி விதைகள் அடங்கிய தொகுப்பிற்கு 75 சதவீத மானியமாக ரூ. 30 / தளை என்ற வீதத்தில் வழங்கப்படும். | எண்கள் | 3,20,400 | 0.96120 |
| 4 | பல்லாண்டு தோட்டக்கலைப் பயிர்களின் பரப்பு விரிவாக்கம் (மா, கொய்யா, சப்போட்டா, கொடுக்காப்புளி, நாவல், சீத்தா, எலுமிச்சை, புளி, போன்றவை) | ரூ.60,000 மொத்த செலவினத்தில், 50 சதவீத மொத்தத் தொகையில், முதலாமாண்டில் 60 சதவீத மானியமாக எக்டர் ஒன்றிற்கு ரூ. 18,000/- வழங்கப்படும். | எக்டர் | 10,000 | 18.0000 |
| 5 | காளான் வளர்ப்புக்கூடம் அமைத்தல் | மொத்த செலவினம் ரூ.2,00,000-த்தில் 50 சதவீத மானியமாக அலகு ஒன்றிற்கு ரூ.1,00,000/- வழங்கப்படும். | எண்கள் | 100 | 1.0000 |
| | **மொத்தம்** | | | | 28.80256 |
| 6 | திட்ட செயலாக்கம் மற்றும் ஆவணப்படுத்து தல் | | | | 0.0100 |
| | | | | **மொத்தம்** | 0.0100 |
| | | | | **ஆக மொத்தம்** | 28.81256 |

அட்டவணை-இ

வேளாண்மைப் பொறியியல் துறை

| வ. எண் | இனங்களின் விபரம் | அலகு | பொருள் | நிதி (ரூ.கோடி) |
|---|---|---|---|---|
| 1 | தொகுப்பிலுள்ள விவசாய குழுக்களுக்கு நீர் ஆதாரங்களை உருவாக்குதல் | எண்கள் | 750 | 82.50 |
| 2 | தனிப்பட்ட ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின விவசாயிகளுக்கு கிணறுகள் (ஆழ்துளை அல்லது குழாய்க் கிணறுகள்) அமைத்தல் | எண்கள் | 600 | 42.00 |
| 3 | பண்ணைக் குட்டை அமைத்தல் | எண்கள் | 750 | 10.50 |
| 4 | ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறையின் கட்டுப்பாட்டில் உள்ள சிறுபாசன குளங்கள், ஊரணிகள், குளங்கள், வரத்து கால்வாய்கள் மற்றும் இதர நீர் சேகரிப்பு கட்டுமானங்களை தூர்வாரி மேம்படுத்துதல் | எண்கள் | 4,200 | 25.00 |
| 5 | வேளாண் இயந்திரங்கள், கருவிகள் மற்றும் உபகரணங்களை வேளாண்மைப் பொறியியல் துறைக்கு கொள்முதல் செய்தல் மற்றும் பராமரித்தல் | | | |
| i. | டிராக்டரால் இயங்கக்கூடிய நிலம் சமன் செய்யும் கருவி (Tractor Operated Laser Leveller) - ஒரு இயந்திரத்திற்கு ரூ.4.50 இலட்சம் | எண்கள் | 20 | 0.90 |
| ii. | ரோட்டவேட்டர் (Rotavator) - ஒரு இயந்திரத்திற்கு ரூ.1.75இலட்சம் | எண்கள் | 50 | 0.875 |
| iii. | ஐந்து கொத்துக் கலப்பை (5 Tyne Duck Foot Cultivator) - ஒரு இயந்திரத்திற்கு ரூ.0.60 இலட்சம் | எண்கள் | 20 | 0.12 |

| | | | | |
|---|---|---|---|---|
| iv. | டிராக் வகை நெல் அறுவடை இயந்திரம் (Track Type Paddy Combine Harvester) - ஒரு இயந்திரத்திற்கு ரூ.32.00 இலட்சம் | எண்கள் | 7 | 2.24 |
| v. | மண்தள்ளும் இயந்திரத்தை சுமந்து செல்லும் கனரக வாகனம் (Multi Axle Carrier for Bull Dozer) - ஒரு இயந்திரத்திற்கு ரூ.45.00 இலட்சம் | எண்கள் | 3 | 1.35 |
| vi. | நிலநீர் ஆய்வுக் கருவி தொகுப்பு (Geo physical Surveying Instruments) - ஒரு இயந்திரத்திற்கு ரூ.5.00 இலட்சம் | எண்கள் | 15 | 0.75 |
| | மொத்தம் | | | 166.235 |
| 6. | ஆவணப்படுத்துதல், விளம்பரம், நிர்வாக செலவு மற்றும் இதர செலவினங்கள் | | | 0.01 |
| | ஆக மொத்தம் | | | 166.245 |

<u>அட்டவணை-ஈ</u>

## வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை

| வ. எண் | பணியின் விபரம் | மானியவிபரம் | மொத்த அலகுகள் (எண்கள்) | நிதி (ரூ.கோடி) |
|---|---|---|---|---|
| 1 | பல்நோக்கு உலர்களங்கள் (Multipurpose Drying Yard) | 100 சதவீத மானியம், ஒரு உலர்களத்திற்கு ரூ.10.50 இலட்சம். (10.50 X 135 = 14.175) | 135 | 14.175 |
| | மொத்தம் | | | 14.175 |

<u>அட்டவணை - உ</u>

சர்க்கரைத்துறை

| வ. எண் | பணியின் விபரம் | மானியவிபரம் | மொத்த அலகுகள் | நிதி (ரூ.கோடி) |
|---|---|---|---|---|
| 1 | பருசீவல் நாற்றுக்கள் விநியோகம் | 50 சதவீத மானியமாக எக்டர் ஒன்றிற்கு ரூ. 12,500/- (தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்ட வழிகாட்டு நெறிமுறை) | 500 எக்டர் | 0.630 |
| 2 | ஒருபரு விதைக்கரும்பு விநியோகம் | 50 சதவீத மானியமாக எக்டர் ஒன்றிற்கு ரூ. 3,750/- (தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்ட வழிகாட்டு நெறிமுறை) | 400 எக்டர் | 0.150 |
| | மொத்தம் | | | 0.78 |
| | பெருமொத்தம் | | | 234.22926 |

சி. சமயமூர்த்தி
வேளாண்மை உற்பத்தி ஆணையர்
மற்றும் அரசு செயலாளர்

//உண்மை நகல்//

பிரிவு அலுவலர். 4/12/22

16/12/22

அரசாணை (நிலை) எண். 298, வேளாண்மை-உழவர்நலத் (வஇபதி) துறை, நாள் 16.12.2022.

# இணைப்பு – II

## கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம் 2022-2023

### அ. அனைத்து துறைகளுக்கான பொதுவான திட்ட செயலாக்க வழிமுறைகள்

1. கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம், அனைத்து கிராமங்களும் ஒட்டுமொத்த வேளாண் வளர்ச்சி மற்றும் தன்னிறைவு அடைந்திடும் நோக்கத்துடன் செயல்படுத்தப்படுகிறது.
   i. வேளாண்மை - உழவர் நலத்துறைதிட்டங்களுடன், உழவர் நலன் சார்ந்த இதர துறைகளான வருவாய்-பேரிடர் மேலாண்மைத்துறை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை, கூட்டுறவு, உணவு மற்றும் பொது விநியோகத்துறை, எரிசக்தித்துறை, நீர்வள ஆதாரத்துறை, கால்நடை பராமரிப்பு, பால் வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை, கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்துறை ஆகிய பிற துறை திட்டங்களும் கிராமப் பஞ்சாயத்துகளில் ஒருங்கிணைந்து செயல்படுத்தப்படும்.
   ii. "கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம்" செயல்படுத்தப்பட்ட கிராமங்கள் முன்மாதிரி கிராமங்களாக அமையும்.
2. திட்டத்தின் நோக்கங்கள்
   i. கிராமத்தில் உள்ள தரிசு நிலங்களை சாகுபடிக்கு கொண்டு வருதல்
   ii. நீர்வள ஆதாரங்களை பெருக்குதல்.
   iii. சூரியசக்தி பம்புசெட்டுகள் அமைத்தல்.
   iv. வேளாண் விளைபொருட்களை மதிப்புக் கூட்டி சந்தைப்படுத்துதல்.
   v. நுண்ணீர்ப் பாசன முறையை பின்பற்றுதல்.
   vi. கால்நடைகளின் நலன்காத்துபால் உற்பத்தியை பெருக்குதல்.
   vii. வருவாய்த்துறையின் மூலம் புதிய பட்டா / பட்டா மாறுதல் வழங்குதல்.
   viii. கூட்டுறவு சங்கங்கள் மூலம் அதிக அளவு பயிர்கடன்கள் வழங்குதல்.
   ix. கால்வாய் பாசனநீர் வழித்தடங்களை தூர்வாருதல்.

நடப்பு 2022-23 ஆம் ஆண்டில் "கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம்" ரூ.234.36926 கோடி செலவில் மாநில நிதி உதவியுடன் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறையினால் செயல்படுத்தப்படவுள்ள அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்திற்காக தேர்வு செய்யப்பட்ட 3,204 கிராமப் பஞ்சாயத்துகளில் ஒருங்கிணைத்து செயல்படுத்தப்படும். மேலும் இத்திட்டம் 37 மாவட்டங்களில் செயல்படுத்தப்படும். நீலகிரி மாவட்டம், திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள கொடைக்கானல் வட்டாரம் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் உள்ள வெள்ளிமலை வட்டாரங்களைப் பொருத்தமட்டில் தரிசு நில தொகுப்புகளை அமைத்தல், பதிவு செய்தல், விரிவான

திட்ட அறிக்கை தயாரித்தல் மற்றும் இத்திட்டம் தொடர்பான அனைத்து திட்டப்பணிகளும் தோட்டக்கலைத் துறை மூலம் மேற்கொள்ளப்படும்.

**3. திட்ட செயல்பாட்டு வழிகாட்டு நெறிமுறைகள்**

**அ) திட்டம் செயல்படுத்த ஆலோசனை கூட்டம் நடத்துதல்:**

மாவட்ட ஆட்சியர் தலைமையில், வேளாண்மைத்துறை, தோட்டக்கலைத்துறை, வேளாண்மைப் பொறியியல் துறை, வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை உள்ளிட்ட மாவட்ட கண்காணிப்பு குழு உறுப்பினர்களை கொண்டு மாவட்ட அளவிலான ஆலோசனைக்கூட்டம் நடத்தவேண்டும். கிராமப் பஞ்சாயத்துகளில் துறைவாரியாக செயல்படுத்தும் திட்டங்கள் குறித்து விவாதிக்க வேண்டும்.

**ஆ) கிராமப் பஞ்சாயத்து தேர்வு**

i. இவ்வாண்டில், தேர்வு செய்யப்பட்ட 3,204 கிராமப் பஞ்சாயத்துகளில் (கடந்த 2021-2022 ஆம் ஆண்டிற்கான 660 கிராமப் பஞ்சாயத்துகள் + நடப்பு 2022-23 ஆம்ஆண்டிற்கான 2,544 கிராம பஞ்சாயத்துகள்) இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

ii. ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒரு பொறுப்பு அலுவலராக உதவி வேளாண்மை அலுவலர் / உதவி தோட்டக்கலை அலுவலர் / உதவி வேளாண்மை அலுவலர் (வேளாண் வணிகம்)/ உதவி விதை அலுவலர்கள் (Nodal Officer) நியமிக்கப்பட வேண்டும்.

**4. கிராம திட்ட செயலாக்கக்குழு அமைத்தல்**

தேர்வு செய்யப்பட்ட கிராமப் பஞ்சாயத்துகளில் திட்டங்களை ஒருங்கிணைத்து செயல்படுத்த கிராம திட்ட செயலாக்கக்குழு இணைப்பு- V இன்படி அமைக்கப்பட வேண்டும்.

**கிராம திட்ட செயலாக்கக்குழுக்கான பணிகள்**

i. கிராம திட்டசெயலாக்கக்குழு விரிவான கிராம வேளாண் வளர்ச்சித் திட்ட அறிக்கையினை படிவம் IIIன் படி **(அரசாணை(நிலை) எண்.59, நாள். 09.03.2022- யில் உள்ள இணைப்பு படிவங்களைக் காணவும்)** தயாரிக்க வேண்டும். கிராமங்களின் தேவையை பூர்த்தி செய்யும் வகையில், கிராம திட்ட செயலாக்கக் குழுவால், இனம் வாரியாக தயாரிக்கப்பட்ட விரிவான திட்ட அறிக்கையை கிராம அளவிலான திட்ட செயலாக்க் குழு உறுப்பினர்களால் கையொப்பமிடப்பட்டு, கிராம திட்ட செயலாக்க குழுவின் தலைவர் அவர்களால் மேலொப்பம் இடப்பட்டு தொடர்புடைய வேளாண்மை உதவி இயக்குநர் மூலம் வேளாண்மை இணை இயக்குநருக்கு அனுப்பிட வேண்டும். வேளாண்மை இணை இயக்குநர் பெறப்பட்ட கிராம திட்ட செயலாக்க விரிவான திட்ட அறிக்கைகளை தொகுத்து மாவட்ட விரிவான திட்ட அறிக்கையினை தயாரித்து மாவட்ட

ஆட்சியருக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும். மாவட்ட ஆட்சியர், தொடர்புடைய துறைகளின் மாவட்ட அலுவலருக்கு, அவர்கள் தொடர்புடைய இனங்களை அனுப்பி அத்துறைகளின் மூலம் திட்டம் செயல்படுத்திட நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும். திட்டம் முடிவுற்ற பின் அந்நிதியாண்டின் இறுதி அறிக்கையையும் அனுப்பி வைக்க வேண்டும்.

ii. பொறுப்பு அலுவலர்கள் வாரத்தில் இரு முறை கிராமப் பஞ்சாயத்துகளில் முகாமிட்டு திட்ட செயல்பாட்டை மேற்கொள்ளவேண்டும்.

iii. வேளாண்மை அலுவலர் / தோட்டக்கலை அலுவலர்கள் வாரத்திற்கு குறைந்தபட்சம் ஒருமுறை கிராமப் பஞ்சாயத்துகளில் திட்டசெயல்பாட்டை ஆய்வு செய்யவேண்டும்.

iv. வேளாண்மை உதவி இயக்குநர் / தோட்டக்கலை உதவி இயக்குநர் மாதத்திற்கு குறைந்தபட்சம் இரு முறை திட்ட செயல்பாட்டை ஆய்வு செய்யவேண்டும்.

v. திட்ட செயல்பாட்டில் ஏற்படும் இடர்பாடுகளுக்கு, ஆய்வு அலுவலர்கள் உரிய தீர்வினை விரைந்து வழங்கி திட்டத்தினை வெற்றிகரமாக செயல்படுத்த வேண்டும்.

vi. திட்டத்தினை கண்காணிக்க மண்டல அலுவலர்களாக (Zonal Officers) வேளாண்மை துணை இயக்குநர் /தோட்டக்கலை துணை இயக்குநர் / செயற்பொறியாளர் (வே.பொ) /உதவி செயற்பொறியாளர் (வே.பொ) சம்பந்தப்பட்ட மாவட்ட வேளாண்மை இணை இயக்குநரால் நியமனம் செய்ய வேண்டும்.

**5. தரிசு நில தொகுப்பு விவசாயிகளை தேர்வு செய்தல்**

i. தரிசுநிலத் தொகுப்பிற்குள் அடங்கும் தேர்வு செய்யப்பட்ட விவசாயிகளின் விபரம் முறையாக சேகரிப்பட வேண்டும்.

ii. தேர்வு செய்யப்படும் விவசாயிகள் கிராம எல்லைக்குள் / அருகில் குடியிருப்பவராக இருக்க வேண்டும்.

iii. ஆதிதிராவிடர், பழங்குடியின விவசாயிகள், சிறு / குறு விவசாயிகள் மற்றும் பெண் விவசாயிகளுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும்.

**6. தரிசு நில தொகுப்புகளை கண்டறியும் வழிமுறைகள் மற்றும் பதிவுசெய்தல்**

i. **கிராம திட்ட செயலாக்கக்குழு**, ஊராட்சிக்குட்பட்ட தரிசு நிலம் உள்ள கிராமம்/குக்கிராமங்களை கண்டறியவேண்டும்.

ii. 10 முதல் 15 ஏக்கர் தரிசு நிலத் தொகுப்புகளை தொடர்ச்சியாக கண்டறிய வேண்டும். அவ்வாறு கண்டறியும் போது தரிசு நிலத் தொகுப்புகள் தொடர்ச்சியாக அமையாத போது (Non contiguous) இடையில் உள்ள 2 முதல் 3 ஏக்கர் வரை சாகுபடி நிலங்களையும் தொகுப்புக்குள் கொண்டு வந்து தொடர்ச்சியான தரிசு நிலத் தொகுப்பாக அமைத்து கொள்ளலாம்.

iii. தரிசு நிலத்தொகுப்பில் உள்ள விவசாயி ஒருவருக்கு அதிக பட்சமாக 2 ஏக்கர் வரை திட்டப்பலன்கள் வழங்கப்படும்.

iv. ஒவ்வொரு தரிசுநில தொகுப்பும் குறைந்தபட்சம் எட்டு விவசாயிகள் கொண்டதாக இருக்க வேண்டும்.

v. அவ்வாறு அமைக்கப்பட்ட தரிசு நில தொகுப்புகள் 1975ம் வருட தமிழ்நாடு சங்கங்களின் பதிவுச் சட்டத்தின் கீழ் சங்கங்களாக வேளாண்மைத்துறை / தோட்டக்கலைத்துறை / வேளாண்மை விற்பனை துறைகள் மூலம் பதிவு செய்யப்பட வேண்டும். அவ்வாறு பதிவு செய்யப்பட்ட தரிசு நிலத் தொகுப்பு குழுக்களே சங்கங்களின் அனைத்து விதமான செயல்பாடுகளுக்கு பொறுப்பேற்க வேண்டும்.

vi. தரிசு நில தொகுப்பு உரிமையாளர், விவசாயிகள் விவரம் படிவம் – I மற்றும் படிவம் – I (அ), இதர திட்ட பயனாளிகள் விவரம் (படிவம்-II மற்றும் படிவம்-IIஅ) படிவங்களில் சேகரிக்க வேண்டும் (அரசாணை(நிலை) எண்.59, நாள். 09.03.2022- யில் உள்ள இணைப்பு படிவங்களைக் காணவும்).

7. தரிசு நில தொகுப்புகளை பயிர் சாகுபடிக்கு கொண்டுவருவதற்கான வழிமுறைகள்

i. கிராம திட்ட செயலாக்க குழு - தரிசு நிலத்திற்கு உட்பட்ட விவசாயிகளுடன் ஆலோசனைக் கூட்டம் நடத்த வேண்டும்.

ii. தரிசு நிலத்தில் மண் ஆய்வு, நிலத்தடி நீர் ஆய்வு மற்றும் விவசாயிகளோடு ஆலோசனை செய்து பயிரிடத் தகுந்த பழ / மரக்கன்றுகளைத் தேர்வு செய்யவேண்டும்.

iii. ஆழ்துளை / குழாய் / திறந்தவெளி கிணறு அமைக்கப்பட்ட தொகுப்பு நிலங்களில் நீர் சேமிப்பு / நீர் செறிவூட்டும் அமைப்புகள் ஏற்படுத்த வேண்டும்.

iv. ஆழ்துளைக்கிணறு / குழாய்க்கிணறு பொதுவாக அரசுபுறம் போக்கில் அமைக்க வேண்டும்.

v. மேற்படி கிணறு அமைப்பதற்கு அரசு புறம்போக்கு நிலம் கிடைக்கவில்லை என்றால், ஏற்படுத்தப்பட்ட விவசாய சங்கங்களே நிலங்களை பெற்றுத்தருவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். இதற்கான வழிகாட்டுதல் மற்றும் நடவடிக்கைகள் கிராம திட்ட செயலாக்க குழுவினால் மேற்கொள்ளப்பட வேண்டும். தரிசு நில தொகுப்பில் நிலத்தை வைத்திருக்கும் தனிநபர் (குழுவில் உள்ள விவசாயிகளில் ஒருவர்) பட்டா நிலத்தை அரசுக்கு தானமாக எழுதி கொடுக்க ஒப்புதல் அளிக்க வேண்டும். இந்த ஒப்பந்தம் ஆழ்துளைக் கிணறு/குழாய்க் கிணறு அமைக்கும் பகுதியிலுள்ள நில உரிமையாளரால் மின் சக்தியால் இயங்கும் பம்பு செட் அமைப்பதற்கு 100சதுர அடியும் (10அடி x 10அடி) அல்லது சூரிய சக்தியால் இயங்கும் பம்பு செட்

அமைப்பதற்கு 900 சதுர அடியும் (30அடி x 30அடி) நிலப்பரப்பினை தானமாக வழங்கிட வேண்டும். ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை மூலம் ஏற்படுத்தப்படும் திறந்த வெளி கிணறுகள், பட்டா நிலத்தில் அமையும் பட்சத்தில் உரிய நபர் (குழுவில் உள்ள விவசாயிகளில் ஒருவர்), அக்கிணற்றினை அமைப்பதற்கும் மின் சக்தியால் இயங்கும் பம்பு செட் அல்லது சூரிய சக்தியால் இயங்கும் பம்பு செட் அமைப்பதற்கும் தேவையான நிலப்பரப்பினை கள நிலவரத்தின் அடிப்படையிலும் மற்றும் வடிவத்தின் அடிப்படையிலும் கணக்கிடப்படும் நிலப்பரப்பினை அரசுக்கு தானமாக வழங்கிட வேண்டும்.

vi. தொகுப்பு நிலத்தில் ஆழ்துளைக்கிணறு / குழாய்க் கிணறு அமைப்பது, நீர்இறைப்பதற்கு மின் இணைப்பு அல்லது சூரியசக்தி பம்புசெட் அமைப்பது ஆகியன வேளாண்மைப் பொறியியல் துறையின் மூலம் செய்யப்படவேண்டும்.

vii. குறைந்த நீர்த் தேவையுடைய பயிர்கள் மட்டுமே சாகுபடி செய்யப்பட வேண்டும். குறிப்பாக தோட்டக்கலை பயிர்கள் சாகுபடி மேற்கொள்ள ஊக்குவிக்க வேண்டும். நீர் அதிகம் தேவைப்படும் நெல்; கரும்பு உள்ளிட்ட பயிர்கள் பயிரிட அனுமதிக்கக் கூடாது.

viii. திறந்த கால்வாய்ப் பாசனத்திற்கு அனுமதி இல்லை.

ix. பலன் தரும் மரப்பயிர் மற்றும் பழமரங்கள் சாகுபடி செய்திட ஊக்குவித்திடலாம்.

தரிசு நிலத்தொகுப்பு மேம்பாடு திட்ட செயலாக்க வழிமுறைகள் இணைப்பு III-இல் கண்ட படி கடைப்பிடித்திட அனுமதி வழங்குமாறு வேண்டப்படுகிறது.

## 8. திட்ட கண்காணிப்பு

### மாவட்ட கண்காணிப்புக்குழு

i. மாவட்ட ஆட்சியர் தலைமையில் மாவட்ட கண்காணிப்புக் குழு **இணைப்பு -VI இன்படி** அமைக்கப்பட வேண்டும்.

ii. மாவட்ட கண்காணிப்புக்குழு மாதம் இருமுறை திட்ட செயல்பாட்டை ஆய்வு செய்யும்.

iii. மாவட்டத்தில் செயல்படுத்தப்படும் உழவர் நலன் தொடர்புடைய சகோதர துறைகளின் மூலம் செயல்படுத்தப்படும் ஒருங்கிணைப்பு திட்டங்களுக்கு (Dovetailed Scheme) அந்தந்த மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) அவர்கள் ஒருங்கிணைப்பு அலுவலராக (Co-ordinating Officer) செயல்பட வேண்டும்.

9. மாநில கண்காணிப்புக் குழு

கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம் உள்ளிட்ட வேளாண்மை -உழவர் நலத்துறையின் முக்கிய திட்டங்களையும் இதர தொடர்புடைய துறைகளின் மூலம் ஒருங்கிணைத்து செயல்படுத்தப்படும் திட்டங்களையும் ஆய்வு செய்திட அரசு தலைமைச் செயலாளர் அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்ட மாநில உயர்நிலைக்குழு மாதமொருமுறை அல்லது தேவைக்கேற்ப திட்ட செயல்பாட்டை ஆய்வு செய்யும்.

10. **தகவல், கல்விமற்றும்தகவல்பரிமாற்றம் (IEC)**

வேளாண்மை இணை இயக்குநர்கள் கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்ட பணிகள் குறித்த பத்திரிகைச் செய்திகள், சுவர் விளம்பரங்கள், விளம்பரப் பலகைகள், துண்டு பிரசுரங்கள், தொலைக்காட்சி, வானொலி, சமூக வலைதளம் மூலம் தகவல் மற்றும் தகவல் பரிமாற்ற செய்திகளை வழங்குவார்கள்.

11. **ஆவணப்படுத்துதல்**

i. கிராம அளவில் கிராம வரைபடம், வட்டார வரைபடம், கிராம குறிப்புரை மற்றும் கிராம அளவிலான திட்ட பொறுப்பு அலுவலர் விவரங்களுடன், திட்டத்திற்கு முன்பாகவும், பின்பாகவும் விரிவான கிராம வேளாண் வளர்ச்சித் திட்ட அறிக்கையினை தயாரிக்க வேண்டும்.

ii. திட்டம் குறித்து கிராம, மாவட்ட அளவில் விளம்பரங்கள்செய்ய வேண்டும்.

iii. மாவட்ட அளவில் திட்டம் செயல்படுத்தப்படும் அனைத்து கிராமங்களுக்கான விரிவான கிராம வேளாண் வளர்ச்சித் திட்ட அறிக்கையினை ஒருங்கிணைத்து மாவட்ட அளவில் ஒட்டுமொத்த அறிக்கையினை தயாரிக்கவேண்டும்.

மாவட்ட ஆட்சித் தலைவரின் வழிகாட்டுதலின்படி கிராமப் பஞ்சாயத்துகளில் செயல்படுத்தப்படும் கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் ஆரம்பக்கட்ட ஆய்வு, பயிற்சிகள், செயல் விளக்கங்கள், விவசாயிகளின் வெற்றிக்கதைகள் ஆகியவற்றை வேளாண்மை இணை இயக்குநர்கள் ஆவணப்படுத்திட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

12. **வாராந்திர / மாதாந்திர / ஆண்டு - திட்ட முன்னேற்ற அறிக்கை சமர்ப்பித்தல்.**

i. கலைஞரின்அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ், நேரடியாக செயல்படுத்தப்படும் திட்டங்களுக்கு, அந்தந்த துறைத் தலைவர்களே முன்னேற்ற அறிக்கைகளை சமர்ப்பிக்க வேண்டும்.

ii. வேளாண்மை – உழவர்நலத்துறையின் கீழ் செயல்படுத்தப்படும் ஒருங்கிணைப்பு திட்டங்களுக்கு (Dovetailed Schemes) அந்தந்த துறைத் தலைவர்களே முன்னேற்ற அறிக்கைகளை சமர்ப்பிக்க வேண்டும்.

iii. வேளாண் துறை அல்லாத பிற துறைகளின் (இத்திட்டத்தின் கீழ் ஒருங்கிணைத்து செயல்படுத்தப்படும் திட்டங்களுக்கான) முன்னேற்ற அறிக்கைகளை அந்தந்த மாவட்டத்தின் மாவட்ட ஆட்சித்தலைவரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) அவர்கள் மாவட்ட ஆட்சியர் வாயிலாக சமர்ப்பிக்க வேண்டும்.

iv. மேலே கூறப்பட்ட துறைகள் தொடர்புடைய முன்னேற்ற அறிக்கைகளை கண்காணித்து ஆய்வு செய்து, அவ்வறிக்கைகள் உரிய காலத்தில் அனுப்பப்படுவதை அந்தந்த மாவட்ட ஆட்சித்தலைவர்கள் உறுதி செய்யவேண்டும்.

13. திட்டமதிப்பீட்டுஆய்வு

மாவட்ட ஆட்சித் தலைவர்கள் இத்திட்டம் குறித்து மாதம்தோறும் ஆய்வுக்கூட்டம் நடத்தி திட்ட முன்னேற்றம் குறித்து அரசுக்கு ஒவ்வொருமாதம் 10ஆம்தேதிக்குள் அறிக்கை அனுப்ப வேண்டும்.

ஆ.வேளாண்மை மற்றும் சகோதரத் துறை வாரியாக மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள்- வழிகாட்டு நெறிமுறைகள்

**1. வேளாண்மைத்துறை - பொது வழிகாட்டு நெறிமுறைகள்**

i. கிராம திட்ட செயலாக்கக்குழு கண்டறிந்த தரிசுநிலத் தொகுப்புகளில் மண் பரிசோதனை செய்ய வேண்டும்.

ii. தரிசுநிலத் தொகுப்புகளில் பயிரிடக்கூடிய பலன் தரும் மர மற்றும் பழ மரக்கன்றுகளை விவசாயிகளுடன் கலந்து ஆலோசித்து தேர்வு செய்ய வேண்டும்.

iii. தரிசுநிலத் தொகுப்புகளில் உள்ள சிறு, குறு முட்புதர்களை அகற்றி சாகுபடி நிலமாகக் கொண்டு வரத் தேவையான ஏற்பாடுகளை செய்ய விவசாயிகளுக்கு உரிய ஆலோசனைகள் வழங்கவேண்டும்.

iv. அடர்ந்த முட்புதர்கள் உள்ள தரிசுநிலத் தொகுப்புகளில் தேசிய வேளாண் வளர்ச்சித்திட்ட தரிசு நில மேம்பாட்டு திட்டத்தினை விவசாயிகள் பங்களிப்புடன் மேற்கொள்ளுதல் வேண்டும்.

v. நுண்ணீர்ப்பாசன முறைகளை பிரதம மந்திரி நுண்ணீர் பாசன திட்டக்கூறின் படி அமைத்திட வேண்டும்.

vi. தேர்வு செய்யப்பட்ட கிராம ஊராட்சியில் தரிசு நிலத் தொகுப்பு அல்லாத இதர விவசாயிகளுக்கு தேவையான அனைத்துத் திட்டங்களையும் ஒருங்கிணைத்து செயல்படுத்துவதோடு இதர திட்ட பயனாளிகளின் விவரம் சேகரிக்க வேண்டும்.

vii. தேவையான இடுபொருட்களை உரிய நேரத்தில் கிராமக் கூட்டங்கள் வாயிலாக பயனாளிகளுக்கு வழங்க வேண்டும்.

viii. அறுவடை மற்றும் சந்தைப்படுத்தும் வரை விவசாயிகளுடன் ஒருங்கிணைந்து திட்டத்தை செயல்படுத்த வேண்டும்.

ix. இத்திட்டத்திறகு தேவையான இடுபொருட்கள் வேளாண்மை விரிவாக்க மையங்கள் மூலம் விநியோகம் செய்யப்பட வேண்டும்.

x. எதிர்பார்க்கப்படும் வேளாண் விளைபொருட்களின் மகசூல் விவரங்களை, வேளாண்மை விற்பனைத்துறைக்கு வழங்கி சந்தைப்படுத்த வழிவகை செய்ய வேண்டும்.

xi. தேர்வு செய்யப்படும் கிராம ஊராட்சி விவசாயிகள், அரசின் ஒன்றிற்கு மேற்பட்ட திட்டங்களில் பயன்பெறலாம்.

xii. தொழில்முனைவோருக்கு அக்ரிகிளினிக் அமைத்தல். உரம், பூச்சிமருந்து, இடுபொருள் விற்பனை உரிமம் வழங்குதல் போன்ற பணிகளுக்கு ஆலோசனை வழங்க வேண்டும்.

xiii. அட்மா திட்டத்தில் செயல்படும் "உழவர் நண்பர்களை" இத்திட்டத்தில் பங்குபெறச் செய்து அக்கிராம பஞ்சாயத்தில் உள்ள விவசாயிகளுக்கு இத்திட்டத்தின் செயல்பாடுகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும்.

xiv. அட்மா திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்பட்டு வரும் பண்ணைப் பள்ளி, பயிற்சி, கண்டுணர்வு சுற்றுலா, செயல்விளக்கங்கள் போன்ற செயல்பாடுகளை இத்திட்டத்தில் தேர்வு செய்யப்பட்ட கிராமங்களில் செயல்படுத்திடல் வேண்டும்.

xv. கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண்வளர்ச்சித் திட்டத்தின் மொத்தக் கூறுகளையும் ஒருங்கிணைத்து செவ்வனே செய்திடல் வேண்டும்.

xvi. வேளாண்மை உதவி இயக்குநர் பெயரில் தரிசு நில தொகுப்பில் மின் இணைப்பு பெற்று உரிய காலத்தில் மின் நுகர்வு கட்டணம் செலுத்திட வேண்டும்.

xvii. தரிசு நில தொகுப்பு நிலங்களை சாகுபடிக்கு கொண்டு வந்து தொடர்ந்து விளைநிலங்களாக பராமரித்திட உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

**2. தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை - பொது வழிகாட்டு நெறிமுறைகள்:**

i. கிராம திட்ட செயலாக்கக் குழுவினால் கண்டறியப்பட்ட தரிசு நிலத் தொகுப்பு நிலங்களில் தோட்டக்கலைப் பயிர்கள் சாகுபடி செய்வதற்கு ஆய்வு செய்து, வழிவகை செய்ய வேண்டும்.

ii. கிராம திட்ட செயலாக்கக்குழு கண்டறிந்த தரிசு தொகுப்பு நிலங்களில் மண் பரிசோதனை செய்ய வேண்டும்.

iii. தரிசுநிலத் தொகுப்புகளில் உள்ள சிறு, குறு முட்புதர்களை அகற்றி சாகுபடி நிலமாகக் கொண்டு வரத் தேவையான ஏற்பாடுகளை செய்ய விவசாயிகளுக்கு உரிய ஆலோசனைகள் வழுங்கவேண்டும்.

iv. அடர்ந்த முட்புதர்கள் உள்ள தரிசுநிலத் தொகுப்புகளில் தேசிய வேளாண் வளர்ச்சித்திட்ட தரிசு நில மேம்பாட்டு திட்டத்தினை விவசாயிகள் பங்களிப்புடன் மேற்கொள்ளுதல் வேண்டும்.

v. தரிசுநிலத் தொகுப்புகளில் பயிரிடக்கூடிய தோட்டக்கலைப் பயிர்களை விவசாயிகளுடன் கலந்து ஆலோசித்து தேர்வு செய்து, சாகுபடி மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும்.

vi. நுண்ணீர்ப்பாசன முறைகளை பிரதம மந்திரி நுண்ணீர் பாசன திட்டக்கூறின் படி அமைத்திட வேண்டும்.

vii. தேர்வு செய்யப்பட்ட கிராம ஊராட்சியில் தரிசு நில தொகுப்பு அல்லாத இதர விவசாயிகளுக்கு தேவையான திட்டங்களை செயல்படுத்துதல் மற்றும் இதர திட்ட பயனாளிகளின் விவரம் சேகரிக்க வேண்டும்.

viii. தேவையான இடுபொருட்களை உரிய நேரத்தில் கிராமக் கூட்டங்கள் வாயிலாக பயனாளிகளுக்கு வழங்க வேண்டும்.

ix. அட்மா திட்டத்தில் செயல்படும் "உழவர் நண்பர்களை" இத்திட்டத்தில் பங்குபெறச் செய்து அக்கிராம பஞ்சாயத்தில் உள்ள விவசாயிகளுக்கு இத்திட்டத்தின் செயல்பாடுகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும்.

x. அட்மா திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்பட்டு வரும் பண்ணைப் பள்ளி, பயிற்சி, கண்டுணர்வு சுற்றுலா, செயல்விளக்கங்கள் போன்ற செயல்பாடுகளை இத்திட்டத்தில் தேர்வு செய்யப்பட்ட கிராமங்களில் செயல்படுத்திடல் வேண்டும்.

xi. எதிர்பார்க்கப்படும் தோட்டக்கலை விளைபொருட்களின் மகசூல் விவரங்களை, வேளாண்மை விற்பனைத் துறைக்கு வழங்கி உழவர் சந்தை மூலம் சந்தைப்படுத்த வழிவகை செய்ய வேண்டும்.

xii. அறுவடை மற்றும் சந்தைப்படுத்தும் வரை விவசாயிகளுடன் ஒருங்கிணைந்து திட்டத்தை செயல்படுத்த வேண்டும்.

xiii. தேர்வு செய்யப்படும் கிராம ஊராட்சி விவசாயிகள், அரசின் ஒன்றிற்கு மேற்பட்ட திட்டங்களில் பயன்பெறலாம்.

xiv. கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண்வளர்ச்சித் திட்டத்தின் மொத்தக் கூறுகளையும் ஒருங்கிணைத்து செவ்வனே செய்திடல் வேண்டும்.

xv. தோட்டக்கலை உதவி இயக்குநர் பெயரில் தரிசு நில தொகுப்பில் மின் இணைப்பு பெற்று உரிய காலத்தில் மின் நுகர்வு கட்டணம் செலுத்திட வேண்டும்.

xvi. தரிசு நிலத் தொகுப்புகளை சாகுபடிக்கு கொண்டு வந்து தொடர்ந்து விளைநிலங்களாக பராமரித்திட உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

3. **வேளாண் பொறியியல் துறை - பொது வழிகாட்டு நெறிமுறைகள்:**

i. **கிராம திட்ட செயலாக்கக் குழு கண்டறிந்த தரிசு நிலத்தொகுப்பு விவசாயிகளுடன் ஆலோசனை செய்ய வேண்டும்.**

ii. **தரிசு தொகுப்பு நிலங்களில் நீர்வள ஆதாரம் கண்டறிந்து, திட்ட மதிப்பீடு தயாரிக்க வேண்டும்.**

iii. **தொகுப்பு தரிசு நிலத்திற்கு உட்பட்ட பகுதிகளில் நீர்வள ஆதாரம் இருப்பின் ஆழ்துளைக் கிணறு/குழாய்க் கிணறு அமைத்து சூரியசக்தி / மின்சார வசதி ஏற்படுத்தி பம்பு செட்டுக்களுடன் தேவையான கட்டமைப்புகளை ஏற்படுத்த வேண்டும்.**

iv. **நிலத்தடி நீர் இல்லாத நிகழ்வுகளில் நீர்சேமிப்பு கட்டமைப்புகளான பண்ணைகுட்டைகள் அமைக்க வேண்டும்.**

v. **பாசன நீர் ஆதாரங்களை உருவாக்கும் பணிகள் மற்றும் பண்ணைக்குட்டைகள் அமைத்தல் ஆகிய திட்டப்பணிகளுக்கான மதிப்பீடுகள் கள ஆய்வின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டு ,தொழில்நுட்ப ரீதியில் உபகோட்ட அளவில் சரிபார்க்கப்பட்டு, உதவி செயற்பொறியாளர் / செயற்பொறியாளர் / கண்காணிப்புப் பொறியாளர் (வே.பொ)களால் உரிய அங்கீகாரம் வழங்கப்பட வேண்டும்.**

vi. **மேற்படி பணிகள் உரிய அலுவலர்களால் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு (Tamil Nadu Transparency In Tenders Act, 1998 & Rule 2000, 2012-ன் படி) பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.**

vii. **அனைத்து பணிகளும் நடைபெறும்பொழுது பல்வேறு நிலைகளில் உதவிசெயற்பொறியாளர் / செயற்பொறியாளர் / கண்காணிப்புப் பொறியாளர் (வே.பொ.) ஆகியோர்களால் அவற்றின் தரம் மற்றும் முன்னேற்றம் குறித்து கண்காணிக்கப்பட வேண்டும்.**

viii. **பணிகளின் அனைத்து நிலைகளிலும் புகைப்படம் மற்றும் வீடியோ ஆவணப்படுத்துதல் மேற்கொள்ளப்படவேண்டும்.**

ix. **வேளாண்மைப் பொறியியல் துறைக்கும், வேளாண்மைத் துறை / தோட்டக்கலைத் துறையால் உருவாக்கப்படும் தரிசுநில தொகுப்பு குழுக்களில் உள்ள விவசாயிகளுக்கும் இடையிலேயான கூட்டு ஒப்பந்தம், சம்பந்தப்பட்ட உதவி செயற்பொறியாளர் (வே.பொ) அலுவலகத்தில் பராமரிக்கப்பட வேண்டும்.**

x. **ஒவ்வொரு தொகுப்பிலும் மேற்கொள்ளப்படும் பணி குறித்த விவரங்கள் உதவிசெயற்பொறியாளர்(வே.பொ) அலுவலகத்தில் தனியாக ஒரு பதிவேட்டில் பராமரிக்கப்பட வேண்டும்.**

xi. வேளாண்மைத் துறை / தோட்டக்கலைத் துறையினரால் உருவாக்கப்படும் தொகுப்பில் உள்ள விவசாயிகளின் நிலப்பரப்பிற்கு ஏற்றவாறு நீர்பங்கீடு செய்வதற்கு ஏதுவாக தரிசு நிலத்தொகுப்பு குழுவிற்கு சம்பந்தப்பட்ட உதவி செயற்பொறியாளர் (வே.பொ)களால் உரிய அறிவுரைகள் வழங்கப்பட வேண்டும்.

xii. திட்ட செயலாக்கத்தின் போது திட்ட வழிகாட்டு நெறிமுறைகளை தவறாது பின்பற்ற வேண்டும்.

**4. வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை - பொது வழிகாட்டு நெறிமுறைகள்:**

i. உணவு பதப்படுத்தும் சிறு நிறுவனங்கள் அமைத்தல்

ii. உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் உருவாக்குதல்

iii. உலர் களங்கள் அமைக்கப்பட்ட பின் உதவி வேளாண்மை அலுவலரிடம் (வேளாண் வணிகம்) ஒப்படைக்கப்படும். மேற்கண்ட உலர்களங்களை தொடர்ந்து நன்கு பராமரித்திட வேண்டும். சிறு பழுதுகள் ஏற்பட்டால் சரி செய்திட வேண்டும்.

**5. விதைச்சான்று மற்றும் அங்ககச் சான்றுத்துறை - பொது வழிகாட்டு நெறிமுறைகள்:**

i. கிராமப் பஞ்சாயத்துகளில் அமைக்கப்பட்டுள்ள விதைபண்ணைகளுக்கு விதைச்சான்றளிப்புப்பணி மேற்கொண்டு விதைச்சான்று அளித்தல்.

ii. விதைப்பண்ணை விவசாயிகளுக்கு வேளாண்மைத்துறையுடன் இணைந்து தரமான விதை உற்பத்தி குறித்து பயிற்சி அளித்தல்.

iii. கிராமப் பஞ்சாயத்துகளில் உள்ள விதை விற்பனை நிலையங்களை தீவிர கண்காணிப்புப்பணி மேற்கொண்டு தரமான விதைகள் கிடைப்பதை உறுதி செய்தல்.

iv. அங்கக வேளாண்மை செய்யும் விவசாயிகள் மற்றும் விவசாய குழுக்களுக்கு அங்ககச் சான்றளிப்புப் பயிற்சி வழங்கி அங்கக சான்றளிப்பில் பதிவு செய்து அங்ககச்சான்றிதழ் வழங்க நடவடிக்கை எடுத்தல்.

**6. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் - பொது வழிகாட்டு நெறிமுறைகள்:**

i. வேளாண் அறிவியல் நிலைய தொழில் நுட்ப வல்லுநர்களைக் கொண்டு தேர்வு செய்யப்பட்ட கிராமங்களில், வேளாண்மை, தோட்டக்கலை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் விற்பனை மற்றும் சர்க்கரைத்துறையுடன் ஒருங்கிணைத்து விவசாயிகளுக்கு தொழில்நுட்ப பயிற்சி, விழிப்புணர்வு முகாம்களில் பங்கேற்று தொழில்நுட்ப ஆலோசனைகள் வழங்க வேண்டும்.

ii. திட்டம் செயல்படுத்தப்படும் கிராமங்களுக்கு, வயல்வெளி பயிற்சி பெற இளங்கலை வேளாண்மை நான்காம் ஆண்டு பயிலும் மாணவர்களை அனுப்பிடவேண்டும்.

iii. 3,204 கிராமப் பஞ்சாயத்துகளில் வேளாண் / தோட்டக்கலை / வேளாண்மை பொறியியல் இளங்கலை இறுதி ஆண்டு மாணவர்களை கொண்டு (கிராமப் புற பயிற்சி) ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மேலாண்மை, ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை, விதை நேர்த்தி, விதை கடினப்படுத்துதல், இயற்கை வேளாண்மை, அங்கக வேளாண்மை தொடர்பாக பயிற்சி பட்டறை / பயிலரங்கம் நடத்தி விவசாயிகளை நல்வழிபடுத்த வேண்டும்.

சி. சமயமூர்த்தி
வேளாண்மை உற்பத்தி ஆணையர்
மற்றும் அரசு செயலாளர்

//உண்மை நகல்//

பிரிவு அலுவலர். 14/12/22

16/12/22

அரசாணை (நிலை) எண். 298, வேளாண்மை-உழவர்நலத் (வஇபதி) துறை, நாள் 16.12.2022.

# இணைப்பு - III

## கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்ட தரிசு நில த்தொகுப்பு மேம்பாடு திட்ட செயலாக்க வழிமுறைகள் 2022-23

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தொலைநோக்கு திட்டங்களில் ஒன்றான கூடுதலாக 11.75 இலட்சம் எக்டர் நிலங்களை சாகுபடிக்கு கொண்டுவருதல் அதாவது தற்போதைய பயிர் சாகுபடி பரப்பை 60 சதவீதத்திலிருந்து 75 சதவீதமாக அதிகரித்தல் என்ற நோக்கத்தை அடையும் ஒரு திட்டமாக "கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டம்" செயல்படுத்தப்படுகிறது.

தமிழ்நாட்டில் உள்ள 12,525 கிராம ஊராட்சிகளில் 5 ஆண்டுகளில் ஒட்டுமொத்த வேளாண் வளர்ச்சி மற்றும் தன்னிறைவு அடைந்திட இத்திட்டம் ஊரக வளர்ச்சித்துறையின் மூலம் செயல்படுத்தப்படுகின்ற அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்ட கிராமங்களில் ஒருங்கிணைத்து செயல்படுத்தப்படுகிறது.

இத்திட்டத்தில் உழவர் நலன் சார்ந்த திட்டங்கள் அனைத்தையும் ஒருங்கிணைத்து செயல்படுத்துவதன் மூலம் வளர்ச்சியும், கிராம அடிப்படை தேவைக்கான நீர் ஆதாரங்களை சீர் செய்து உருவாக்குதல் மற்றும் இதர கட்டுமான பணிகள் ஊரக வளர்ச்சி துறை போன்ற இதர துறைகளுடன் ஒருங்கிணைத்து செயல்படுத்தப்படுவதன் மூலம் தன்னிறைவு பெற்ற கிராமங்களாகவும் உருவாக்கப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் ஓர் முக்கிய அம்சமாக தரிசு நிலங்களை கண்டறிந்து, 10 ஏக்கருக்கு மேல் தொடர்ச்சியாக இருப்பின் அதனை தரிசு நில தொகுப்பாகவும், 10 ஏக்கருக்கு குறைவாக இருப்பின் அவற்றை தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் மூலம் தரிசு நிலங்களில் உள்ள புதர்களை நீக்கி, உழவு செய்யப்பட்டு பயறு,சிறுதானியம் மற்றும் எண்ணெய்வித்து போன்ற மானாவாரி பயிர்கள் சாகுபடி செய்திட இடுபொருட்கள் வழங்கப்பட்டு சாகுபடி மேற்கொள்ளப்படுகிறது. இதன் மூலம் கிராமங்களின் நிகர சாகுபடி பரப்பு அதிகரிக்கப்பட்டு வருகிறது.

**திட்டத்தின் செயல்பாடுகள் :**

1. கிராமங்களில் பசுமை பரப்பை அதிகரித்திட மரக்கன்றுகள் வழங்குதல்.
2. தரிசு நிலங்களை தொகுப்பாக சாகுபடிக்கு கொண்டுவருதல்.

3. அத்தொகுப்புகளில் பாசன நீர் ஆதாரங்களை உருவாக்குதல் (ஆழ்துளை / குழாய்க் கிணறுகள் அமைத்தல் மற்றும் நீர் செறிவூட்டும் அமைப்புகளை ஏற்படுத்துதல்).
4. சூரிய சக்தி (Solar) / மின் சக்தி (EB Connection) மோட்டார்களை தொகுப்பு நிலங்களில் அரசு முழு மானியத்தில் அமைத்தல்.
5. அவற்றில் சொட்டு நீர் பாசனம் அமைத்து பலன் தரும் மரக்கன்றுகள், தண்ணீர் குறைவாக தேவைப்படும் வேளாண் மற்றும் தோட்டக்கலை பயிர்களை சாகுபடி செய்தல்.
6. திட்ட கிராமங்களில் ஏரி / குளம் / வரத்து கால்வாய்கள் தூர்வாருதல் மற்றும் பண்ணைக்குட்டைகள் அமைத்தல்.
7. ஆதிதிராவிட/பழங்குடியின விவசாயிகளுக்கு இலவசமாக / முழு மானியத்தில் ஆழ்துளைக் கிணறு/குழாய் கிணறு அமைத்து மின் இணைப்பு பெற்று வழங்குதல்.
8. வேளாண் பொருட்களை மதிப்பு கூட்டி விற்பனை செய்தல்
9. கால்நடை நலன்காத்து பால் உற்பத்தியை பெருக்குதல்.
10. வருவாய்த்துறை மூலம் புதிய பட்டா/ பட்டா மாறுதல் வழங்குதல்
11. கூட்டுறவு சங்கங்கள் மூலம் அதிகளவு பயிர்க்கடன்கள் வழங்குதல்
12. வேளாண்மை - உழவர் நலத்துறையின் திட்ட இனங்களை ஒருங்கிணைத்து செயல்படுத்துதல் (Dovetailed Schemes)

**திட்டத்தில் பங்கேற்கும் துறைகள்:**

வேளாண்மை - உழவர் நலத்துறையில் உள்ள வேளாண்மை, தோட்டக்கலை, வேளாண் பொறியியல், வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகம், விதைச்சான்றுத்துறை, தமிழ்நாடு வேள்ாண்மைப் பல்கலைக்கழகம் மற்றும் உழவர் நலன் தொடர்புடைய இதர துறைகளான ஊரக வளர்ச்சித்துறை, வருவாய்த்துறை, கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை, கூட்டுறவுத்துறை, நீர்வள ஆதாரத்துறை, எரிசக்தி துறை, கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர் துறை உள்ளிட்ட துறைகளின் திட்டங்கள் ஒருங்கிணைத்து செயல்படுத்தப்படுகிறது.

அ. தரிசு நிலத் தொகுப்புகள் அமைக்கும் முன் மேற்கொள்ள வேண்டிய பணிகள்

1. **கிராம திட்ட செயலாக்க குழு அமைத்தல்:**

- இத்திட்டம் சிறப்புற செயல்படுத்திட தேர்வு செய்யப்பட்ட கிராமப் பஞ்சாயத்தில் பணிபுரியும் வேளாண்மை மற்றும் வேளாண்மை

தொடர்புடைய துறைகளின் அலுவலர்களைக் கொண்டு கிராம திட்ட செயலாக்க குழு அமைக்கப்பட்டுள்ளது.

- அச்செயலாக்கக் குழுவிற்கு வேளாண்மை அலுவலர் / தோட்டக்கலை அலுவலர் / துணை வேளாண்மை அலுவலர் / துணை தோட்டக்கலை அலுவலர் தலைவராக செயல்படுவார்.
- தேர்வு செய்யப்பட்ட ஒவ்வொரு கிராம பஞ்சாயத்திற்கும் உதவி வேளாண்மை அலுவலர் / உதவி தோட்டக்கலை அலுவலர் / உதவி விதை அலுவலர் / உதவி வேளாண்மை அலுவலர் (வேளாண் வணிகம்) இவர்களில் ஒருவரை கிராம அளவிலான திட்ட பொறுப்பு அலுவலராக (Nodal Officer) நியமிக்கப்பட்டுள்ளனர்.

2. **கிராம திட்ட செயலாக்கக் குழுவின் கூட்டம் நடத்துதல்:**

- குழுவின் தலைவர் கிராம திட்ட செயலாக்கக் குழுவை கூட்டி, தேர்வு செய்யப்பட்ட கிராம பஞ்சாயத்தில் இத்திட்டத்தின் நோக்கம், முக்கிய அம்சங்கள், திட்ட செயல்பாடுகள், அனைத்துத் துறைகளின் பங்கேற்பின் மூலம் கிராமத் தன்னிறைவு போன்ற திட்ட விபரங்களை எடுத்துரைக்க வேண்டும்.
- பின்னர், அக்கிராமப் பஞ்சாயத்தில் தரிசு நில தொகுப்பு அமைக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து விவாதிக்க வேண்டும்.

3. **அடிப்படை புள்ளி விபரங்கள் சேகரித்தல்:**

- திட்டத்தில் கிராமப் பஞ்சாயத்துகள் தேர்வு செய்யப்பட்டவுடன், சம்பந்தப்பட்ட கிராம நிர்வாக அலுவலர் / அலுவலர்களிடம் இருந்து கிராம வரைபடத்தையும், "அ" பதிவேட்டையும் பெற்று, இதர தரிசு (other fallow) என்ற பிரிவின் கீழ், இரண்டு முதல் ஐந்து ஆண்டுகள் வரை சாகுபடி செய்யப்படாமல் உள்ள நிலங்களையும், சாகுபடிக்கு லாயக்கான தரிசு (Cultivable waste) என்ற பிரிவின் கீழ், ஐந்து ஆண்டுகள் மற்றும் அதற்கு மேலான ஆண்டுகள் சாகுபடி செய்யப்படாத நிலங்களையும் சர்வே எண் வாரியாகவும், விவசாயிகள் வாரியாகவும் சேகரிக்க வேண்டும்.
- கிராமப் பஞ்சாயத்துக்களில் கீழ் உள்ள வருவாய் கிராமங்கள் மற்றும் குக்கிராமங்களில் உள்ள தரிசு நில ஆய்விற்கு, அந்தக் கிராமங்களில் வசித்துவரும் ஓய்வு பெற்ற கிராமமுனுசீப், கிராம கணக்காளர், கிராம உதவியாளர் மற்றும் முன்னோடி விவசாயிகளின் உதவியை நாடலாம்.
- கிராமப் பஞ்சாயத்துகளில் உள்ள அனைத்து தரிசு நிலங்களையும் பொறுப்பு அலுவலர்கள் நேரிடையாக ஆய்விட வேண்டும். அவ்வாறு ஆய்வு செய்யும்போது, சிறு மலைக்குன்றுகள் இருந்தால் மலை குன்றுகளுக்கு இடையில் உள்ள தரிசுநிலங்களையும் விடுபடாமல் கணக்கில் எடுத்துக்கொண்டு, தொகுப்பினை அமைக்க வேண்டும். எக்காரணம் கொண்டும், கிராமப் பஞ்சாயத்துக்களில் உள்ள தரிசு தொகுப்பு நிலங்கள் விடுபட்டுவிடக்கூடாது.

➢ பெறப்பட்ட புள்ளிவிவரங்கள் அடிப்படையிலும் கிராம செயலாக்கக் குழு கூட்டத்தில் பெறப்பட்ட ஆலோசனையின் அடிப்படையிலும் பொறுப்பு அலுவலர் கிராம பஞ்சாயத்தில் உள்ள தரிசு நிலங்களை சம்பந்தப்பட்ட விவசாயிகளுடன் நேரில் பார்வையிட வேண்டும்.

➢ பெறப்பட்ட புள்ளி விபரங்களின் அடிப்படையில் 10 லிருந்து 15 ஏக்கர் வரை தொகுப்பாக உள்ள தரிசு நிலங்களையும் 10 ஏக்கருக்குக் குறைவான பரப்பு கொண்ட தரிசு நிலங்களையும் தனித்தனியாக பிரிக்க வேண்டும்.

➢ 10 லிருந்து 15 ஏக்கர் வரை தரிசு நிலங்களை தொகுப்புகளாக அமைக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

➢ 10 ஏக்கருக்கு குறைவாக ஒரு இடத்தில் தரிசு நிலங்கள் இருப்பின் அதனை தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் மூலம் முட்புதர்களை அகற்றி சாகுபடிக்கு கொண்டு வர வேண்டும்.

4. தரிசு நிலத் தொகுப்புகளுக்கான தகுதிகள்:

➢ தரிசு நிலங்கள் 10 முதல் 15 ஏக்கர் வரை தொடர்ச்சியாக இருக்க வேண்டும்.

➢ தரிசு நிலங்கள் தொடர்ச்சியாக ஒரே இடத்தில் இல்லாத பட்சத்தில், இடையில் உள்ள 2 முதல் 3 ஏக்கர் வரையிலான விளை நிலங்கள் இருந்தால், அதையும் சேர்த்து, தரிசு நிலத் தொகுப்போடு கணக்கிட்டுக் கொள்ளலாம்.

➢ 10 ஏக்கருக்கும் குறைவாகவே உள்ள தரிசு நிலங்கள் கிராமங்களில் அதிக அளவில் இருப்பதாக தெரிய வரும் நிலையில், கிராம நிர்வாக அலுவலர் அல்லது அலுவலர்களிடம் இருந்து 10 லிருந்து 15 ஏக்கர் வரை தரிசு நிலத் தொகுப்புகள் ஏதும் இக்கிராமங்களில் ஒரே இடத்தில் அமையவில்லை என்பதற்கான சான்றினை உரிய படிவத்தில் பெற்று பராமரிக்க வேண்டும்.

➢ ஒவ்வொரு தரிசு நில தொகுப்பும் குறைந்தபட்சம் 8 விவசாயிகள் கொண்டதாக இருக்க வேண்டும்.

➢ தரிசு நில தொகுப்பு விவசாயிகள் பட்டியல் தயாரிக்கப்பட வேண்டும்.

| வ.எண் | தொகுப்பு நிலத்திற்குள் அடங்கும் விவசாயி பெயர் மற்றும் தகப்பனார் பெயர் | சிறு / குறு / இதர விவசாயி | ஆதிதிராவிடர் / பழங்குடியினர் / மிகவும் பிற்படுத்தப்பட்டோர் / சிறுபான்மையினர் | தொகுப்பு நிலத்திற்கு உட்பட்ட புல எண்கள் | பரப்பு (ஏக்கர்) | நில வகைப்பாடு (நஞ்சை/ புஞ்சை/ மானாவாரி) | நில உரிமையாளர் பெயர் (நடப்பு கணினி - அ பதிவேடு படி) |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | |
| மொத்தம் | | | | | | | |

- தரிசு நிலத்தொகுப்பில் உள்ள ஒரு விவசாயி இத்திட்டத்தின் கீழ் அதிகபட்சமாக 2 ஏக்கர் வரை மட்டுமே பயன் பெற இயலும்.
- தரிசுநில தொகுப்பு அமைப்பதில் ஆதிதிராவிடர், பழங்குடியினர், மிகவும் பிற்பட்ட வகுப்பினர், பிற்பட்ட வகுப்பினர் மற்றும் சிறுபான்மையினருக்கு முன்னுரிமை வழங்க வேண்டும்.
- அத்தரிசு நிலத் தொகுப்பில் உள்ள முட்புதர்களை சம்பந்தப்பட்ட நில உரிமையாளர்கள் தங்களது சொந்த செலவில் அகற்ற வேண்டும். இதற்காக தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் மூலம் செயல்படுத்தப்படும் தரிசு நில மேம்பாட்டு திட்ட உதவியையும் ஒருங்கிணைத்துக் கொள்ளலாம்.
- தரிசு நிலத் தொகுப்புகளில் உள்ள மண் வளத்தினை அறிய, மண் பரிசோதனை வேளாண் துறையால் மேற்கொள்ளப்படும்.

5. **நிலத்தடி நீர் ஆய்வு (Geo-Physical Survey):**

- தரிசு நில தொகுப்புகள் ஏற்படுத்தப்பட்ட பின் அத்தொகுப்பு தொடர்பான விபரங்களை (விவசாயியின் பெயர் வாரியாக, பரப்பு மற்றும் சர்வே எண், அமைந்துள்ள குக்கிராமம்) சம்மந்தப்பட்ட உதவி செயற் பொறியாளர் (வேளாண் பொறியியல்) அவர்களிடம் அளித்து நிலத்தடி நீர் ஆய்வு மேற்கொள்ள கேட்டுக்கொள்ள வேண்டும்.
- வேளாண்மை பொறியியல் துறை மூலம் நிலத்தடி நீர் ஆய்வு உடனடியாக மேற்கொள்ளப்படும்.
- ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு அதன் அடிப்படையில் பெறப்பட்ட அறிக்கையினை சம்பந்தப்பட்ட வேளாண்மை உதவி இயக்குனர் / தோட்டக்கலை உதவி இயக்குனருக்கு வழங்கிட வேண்டும்.
- அறிக்கையின் அடிப்படையில் அத்தொகுப்பினை சங்கங்களாக பதிவு செய்திட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

6. **தரிசு நில சங்கங்கள் பதிவு செய்தல் மற்றும் செயல்பாடுகள்:**

**பதிவு செய்தல் :**

- தகுதிவாய்ந்த தரிசு நில தொகுப்புகள் 1975-ஆம் ஆண்டின் தமிழ்நாடு சங்கங்களின் பதிவுச் சட்டத்தின் கீழ் சங்கங்களாக சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட வேண்டும்.
- தரிசு நிலத் தொகுப்பினை பதிவு செய்வதற்கு கீழ்கண்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.
    - ஆழ்துளை/குழாய்க் கிணறு / திறந்தவெளி கிணறு அமையவுள்ள தரிசு நிலத் தொகுப்புகளில் உள்ள விவசாயிகளிடம் ஆதார் அடையாள அட்டை, நிரந்தர கணக்கெண் (PAN Card) போன்ற ஆவண நகலினை பெற வேண்டும்.
    - தரிசு நிலத் தொகுப்பிற்கு ------------(கிராமப் பஞ்சாயத்து பெயர் சேர்த்து ) தரிசு நிலத்தொகுப்பு குழு என்று பெயரிடப்பட வேண்டும்.

- தரிசு நில தொகுப்பு குழுவில் உள்ள விவசாயிகள் அனைவரும் கூடி, தலைவர், செயலாளர் மற்றும் பொருளாளரை தேர்ந்தெடுக்க வேண்டும்.
- தரிசு நிலத் தொகுப்பின் பெயரில் தலைவர், செயலாளர் மற்றும் பொருளாளரை கொண்டு அருகில் உள்ள வங்கியில் ஒரு கூட்டு வங்கிக்கணக்கு (நடப்பு / சேமிப்பு) தொடங்க வேண்டும்.
- பதிவு விண்ணப்பத்தில் சாட்சி கையொப்பம் இட இரண்டு நபர்களை தேர்வு செய்து அவர்களின் அடையாளத்திற்கான அட்டை நகலினையும் பெற வேண்டும்.
- அவ்வாறு பதிவு செய்யப்பட்ட தரிசுநில தொகுப்பு குழு உறுப்பினர்கள் அனைவரும் சங்கத்தின் அனைத்துவிதமான செயல்பாடுகளில் தவறாது பங்கேற்க வேண்டும்.
- பதிவு செய்யப்பட்ட சங்கங்களின் பதிவுச்சான்று நகலினை சம்மந்தப்பட்ட உதவி செயற்பொறியாளர் (வேபொ) அவர்களிடம் அளிக்கவேண்டும்.

**செயல்பாடுகள் :**

- ஒவ்வொரு குழு உறுப்பினரும் மாதம் ஒன்றுக்கு குறைந்த பட்சம் ரூ.100/- என்ற அளவில் வங்கிக்கணக்கில் செலுத்தி சேமித்திட வேண்டும் (பின்னர் இத்தொகை பராமரிப்பு செலவிற்கு பயன்படுத்தப்படும்).
- மாதம் ஒரு முறை, தரிசு நில சங்க உறுப்பினர்களை அழைத்து, கூட்டத்தினை நடத்த வேண்டும். அக்கூட்டத்தில் தரிசு நில சங்க நிர்வாகம் தொடர்பான அனைத்து விபரங்களையும் விவாதித்து, கூட்ட நடவடிக்கைகளையும், நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களையும் கூட்ட நடவடிக்கை பதிவேட்டில் பதிவிட வேண்டும்.
- ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரம் மாதம் 1-ஆம் தேதி கணக்குகள் துவங்கப்பட்டு அடுத்த ஆண்டு மார்ச் 31-ஆம் தேதியில் முடிக்கப்பட வேண்டும்.
- சங்கத்தின் ஒவ்வொரு நிதியாண்டு முடிந்ததும் அந்த நிதியாண்டின் கணக்குகள் தணிக்கை செய்யப்பட வேண்டும்.
- மேலும், சங்கத்தினை வருடத்திற்கு ஒருமுறை புதுப்பித்தல் போன்ற அனைத்து நிபந்தனைகளையும் குழு பின்பற்ற வேண்டும்.

7. பாசன நீர் பங்கீட்டு முறை
   - தரிசு நிலத்தொகுப்பில் திறந்தவெளி பாசனம் அனுமதிக்கப்படுவதில்லை. நுண்ணீர் பாசனத்தின் மூலம் மட்டுமே பாசனம் செய்யப்பட வேண்டும்.

- நீர் அதிகமாக தேவைப்படும் நெல், கரும்பு, வாழை, தென்னை, எண்ணெய்ப்பனை உள்ளிட்ட பயிர்களை சாகுபடி செய்ய அனுமதிக்க கூடாது.
- நீர் பங்கீட்டு முறையை செயல்படுத்துவதற்காக பொறுப்பு அலுவலர் (Nodal Officer), உதவி பொறியாளர் (வேளாண் பொறியியல் துறை) உள்ளிட்ட அலுவலர்கள் மற்றும் விவசாயிகளை கொண்டு உருவாக்கப்பட்ட குழுவானது, தங்களுக்குள் பாசனத்திற்கான நீரை பயன்படுத்துவது தொடர்பாக கூடி முடிவெடுக்க வேண்டும். கிணற்றிலிருந்து கிடைக்கும் நீர் இருப்பின் அளவைப்பொருத்தும், மண்ணின் தன்மைக்கு ஏற்பவும், தட்பவெப்ப சீதோஷ்ண நிலைக்கு ஏற்பவும் மற்றும் ஒரு நாளுக்கு கிடைக்கும் மின் விநியோக நேரத்திற்கு ஏற்பவும் நீர் பங்கீட்டுமுறை கணக்கிடப்பட வேண்டும்.
- பாசனம் மேற்கொள்ளும் போது, சொட்டு நீர் பாசன கருவிகள், சூரிய ஒளி தகடுகள், மின் இணைப்பு மற்றும் மோட்டார்களில் ஏற்படும் குறைபாடுகளுக்கு சம்பந்தப்பட்ட நிறுவனங்களை தொடர்பு கொண்டு உத்திரவாத காலத்திற்குள் இருப்பின், நிவர்த்தி செய்வதற்கு குழு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.
- சொட்டு நீர் பாசனம் அமைத்து, சாகுபடி செய்யப்படும் மர/பழ மரங்களின் நீர் தேவைக்கு ஏற்றவாறும், விவசாயிகளின் பாசன பரப்பிற்கு ஏற்றவாறும் நீர் பங்கீடு செய்யப்பட வேண்டும்.
- கிணற்றிலிருந்து கிடைக்கும் நீரின் அளவைப்பொருத்து தொகுப்பிலுள்ள அனைத்து விவசாயிகளுக்கும் பாசன நீர் கிடைக்கும் பொருட்டு, சுழற்சி (Rotation) முறையை கடைப்பிடித்து பாசன நீர் வழங்கலாம். அவ்வாறு சுழற்சி முறையைக் கடைபிடிக்கும் போது ஆழ்துளை / குழாய் கிணறு அமைந்துள்ள இடத்திலிருந்து தொலைவில் உள்ள விவசாயிகளின் நிலங்களுக்கு முன்னுரிமை கொடுத்து பாசன நீர் வழங்கப்பட வேண்டும்.
- மேலும் சிறுதானியங்கள், பயறுவகை பயிர்கள், எண்ணெய்வித்துப் பயிர்கள் உள்ளிட்ட குறுகிய கால மற்றும் மானாவாரி பயிர்களை ஊடுபயிராக சாகுபடி மேற்கொள்ளப்பட வேண்டும். அத்தகைய பயிர்களுக்கு கிணற்றில் இருந்து கிடைக்கும் நீரின் அளவினை பொருத்து பாசன நீர் வழங்கப்பட வேண்டும்.
- பருவ மழைக் காலங்களில் மழைநீரை முறையாக சேகரித்து, அவற்றின் மூலம் ஊடுபயிராக மானாவாரி பயிர்களை சாகுபடி மேற்கொள்ளப்பட வேண்டும்.
- மேலே கூறப்பட்டுள்ள நீர் பங்கீட்டு முறைகளில், ஒவ்வொரு தரிசுநிலத் தொகுப்பு நிலங்களில் நிலவும் கள சூழ்நிலைக்கு ஏற்றவாறு சிறு மாற்றங்கள் செய்து பாசன நீரை பங்கீட்டு வழங்கலாம். சுருங்கக்கூறின் நீர் பங்கீட்டு விநியோகம் தொகுப்பில் உள்ள அனைத்து நிலங்களுக்கும்

சம நிலை பங்கீட்டு முறையில் (Equity distribution) பாசன நீர் வழங்கப்பட வேண்டும். மேலும், சமநிலை பங்கீட்டு முறையில் பாசனம் மேற்கொள்வதற்கான கால அட்டவணை (Irrigaion Time Schedule) தயாரித்து, ஒப்பந்தம் மேற்கொண்டு அதனை தவறாது பின்பற்ற வேண்டும்.

8. <u>மின் இணைப்பு மற்றும் பராமரிப்பிற்கான வழிமுறைகள் :</u>

- மின் இணைப்புகள் வேளாண்மை உதவி இயக்குநர் / தோட்டக்கலை உதவி இயக்குநர் பெயரில் பெற வேண்டும்.
- மின் இணைப்புகளுக்கு மின் அளவீட்டுக் கருவி பொறுத்தப்பட்டு மின் நுகர்வு கணக்கிடப்படும்.
- அத்தகைய மின் நுகர்விற்கான கட்டணத்தினை உரிய கணக்குத் தலைப்பில் வேளாண்மை உதவி இயக்குநர் / தோட்டக்கலை உதவி இயக்குநர் அலுவலர்களுக்கு உரிய நிதி வழங்கப்படும்.
- மின் கட்டணத்தினை உரிய தேதியில் தவறாது செலுத்தப்பட வேண்டும்.

9. <u>அறுவடை மற்றும் சந்தைப்படுத்துதலுக்கான வழிமுறைகள் :</u>

- அறுவடைக்கு தேவையான இயந்திரங்களை உரிய நேரத்தில் ஏற்பாடு செய்து தர வேண்டும்.
- அறுவடையான வேளாண் விளைபொருட்களுக்கு உரிய விலை கிடைத்திடும் பொருட்டு ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் அல்லது உழவர் சந்தையில் விற்பனை மேற்கொள்ள தரிசு நில சங்க குழு ஊக்குவிக்கப்பட வேண்டும்.
- மதிப்பு கூட்ட வாய்ப்புள்ள வேளாண் விளைபொருட்களுக்கு மதிப்பு கூட்டி விற்பனை மேற்கொள்ள வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை மூலம் உரிய ஏற்பாடுகள் செய்து தர வேண்டும்.

**சி. சமயமூர்த்தி**
**வேளாண்மை உற்பத்தி ஆணையர்**
**மற்றும் அரசு செயலாளர்**

//உண்மை நகல்//

பிரிவு அலுவலர்
10/12/22

அரசாணை (நிலை) எண். 298, வேளாண்மை-உழவர்நலத் (வஇபதி) துறை, நாள் 16.12.2022.

# இணைப்பு – IV

## துறை வாரியான மற்றும் இனம் வாரியான வழிகாட்டு நெறிமுறைகள்

### I) வேளாண்மைத் துறை திட்டத்தின் இனவாரியான வழிகாட்டு நெறிமுறைகள்

1. **தென்னங்கன்று விநியோகம்**

   i. நெட்டை தென்னங்கன்றுகள் விநியோகத்தில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின விவசாயிகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் தென்னங்கன்றுகள் விநியோகம் செய்யப்பட வேண்டும்.

   ii. விநியோகத்தின் போது அதிக அளவில் குறு / சிறு விவசாயிகள் பயனடைதல் வேண்டும்.

   iii. ஒரு குடும்பத்திற்கு, அதிகபட்சம் 2 நெட்டை தென்னங்கன்றுகள் மட்டுமே வழங்கப்படுதல் வேண்டும்.

   iv. நெட்டை தென்னங்கன்று ஒன்றுக்கு அதிகபட்ச மானியம் ரூ.60/- மட்டும் 100 சதவிகித மானியத்தில் வழங்கப்பட வேண்டும்.

   v. இத்திட்டத்திற்கு தேவையான அனைத்து நெட்டை தென்னங்கன்றுகள் வேளாண்மைத்துறையில் உள்ள அரசு தென்னை நாற்றுப்பண்ணை மற்றும் தோட்டக்கலைத் துறை உள்ள அரசு தோட்டக்கலைப் பண்ணை மூலம் உற்பத்தி செய்து வழங்கப்பட வேண்டும். இதற்காக போக்குவரத்து கட்டணம் உட்பட கன்று ஒன்றுக்கு ரூ.60/- வீதம் இத்துறைகளுக்கு வழங்கப்படும்.

2. **திரவ உயிர் உரங்கள் விநியோகம்**

   i. சாகுபடி செய்யப்பட்டுளள பயிரினைப் பொருத்து, திரவ உயிர் உரங்களான அசோஸ்பைரில்லம், பாஸ்போ பேக்டீரியம், அசோபாஸ், பொட்டாஷ் பாக்டீரியா போன்றவற்றை பரிந்துரை செய்யப்பட்ட அளவிற்கு ஏற்றவாறு தேவையின் அடிப்படையில் விநியோகம் மேற்கொள்ளலாம்.

   ii. திரவ உயிர் உரங்கள் ஒரு எக்டருக்கு 50% மானியம் அல்லது ரூ.300/-, இவற்றில் எது குறைவோ அந்த அளவு மட்டுமே மானியமாக வழங்கப்பட வேண்டும்.

   iii. தனி நபர் விவசாயி ஒருவருக்கு அதிகபட்சமாக இரண்டு எக்டருக்கு மட்டுமே மானியம் வழங்கப்பட வேண்டும்.

   iv. திட்டத்திற்கு தேவையான திரவ உயிர் உரங்கள் துறையின் உயிர் உரங்கள், உற்பத்தி மையம் மூலம் உற்பத்தி செய்து வழங்கப்பட வேண்டும்.

   v. நிதி செலவினத்தில் மீதம் ஏதும் ஏற்படின், மொத்த நிதி ஒதுக்கீட்டிற்கு மிகாமல் பொருள் இலக்கினை அதிகரித்துக் கொள்ளலாம்.

3. **விசைத்தெளிப்பான் விநியோகம் (Power / Battery Operated)**

   i. இவ்வினத்தின் கீழ் மானியமாக ஒரு விசைத் தெளிப்பானுக்கு ரூ.3,000/- அல்லது 50 சதவீதம் மானியம் இதில் எது குறைவோ அந்த தொகை மட்டும் மானியமாக வழங்கப்பட வேண்டும்.

ii. தேர்வு செய்யப்பட்ட கிராமங்களில் ஒதுக்கீடு செய்யப்படும் விசைத் தெளிப்பான்கள் ஒரு விவசாய குடும்பத்திற்கு அதிகபட்சமாக ஒரு விசைத் தெளிப்பான் மட்டும் வழங்கப்பட வேண்டும். (ஒரு கிராம பஞ்சாயத்திற்கு 8 -9 எண்கள்)

iii. சிறு / குறு விவசாயிகள் / ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின விவசாயிகளுக்கு விசைத் தெளிப்பான் விநியோகத்தில் முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும்,

iv. விசைத் தெளிப்பான்கள் வேளாண்மை பொறியியல் துறை மூலம் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களில் இருந்து கொள்முதல் செய்து விவசாயிகளுக்கு வழங்கப்பட வேண்டும்.

v. இவ்வினத்தின் கீழ் வழங்கப்படும் தெளிப்பான்களுக்கு சரக்கு மற்றும் சேவை வரி செலவுகளை பயனாளிகளே ஏற்க வேண்டும்.

vi. நிதி செலவினத்தில் மீதம் ஏதும் ஏற்படின், மொத்த நிதி ஒதுக்கீட்டிற்கு மிகாமல் பொருள் இலக்கினை அதிகரித்துக் கொள்ளலாம்.

4. **தரிசு நில தொகுப்புகளை பதிவு செய்தல்**

i. கண்டறியப்பட்ட தரிசு நிலத் தொகுப்புகளை அந்தந்த மாவட்டத்தில் உள்ள சங்கங்களின் மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் தமிழ்நாடு சங்கங்களின் பதிவு சட்டம் 1975ன் படி பதிவு செய்தல் வேண்டும்.

ii. பதிவு செய்த பின் பெறப்படும் பதிவு சான்றிதழினை சம்பந்தப்பட்ட வேளாண்மை பொறியியல் துறை அலுவலகத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.

iii. சங்கமாக குழுவினை பதிவு செய்வதற்கான பதிவுக் கட்டணம் ஒரு குழுவிற்கு ரூ.5,100/- மற்றும் ஆவண செலவிற்காக ரூ.1,900/-வரை இவ்வினத்தின் கீழ் செலவு மேற்கொள்ளலாம்.

5. **தகவல், கல்வி மற்றும் தகவல் பரிமாற்றம் (IEC)**

i. திட்ட செயலாக்கம் தொடர்பான தகவல், கல்வி, தகவல் பரிமாற்றம் தொடர்பான பணிகளுக்காக கிராமம் ஒன்றிற்கு ரூ.2,000/- வரை இவ்வினத்தின் கீழ் செலவினம் மேற்கொள்ளலாம்.

6. **திட்ட செயலாக்கம், விளம்பரம் மற்றும் ஆவணப்படுத்துதல் – மாவட்டம்**

i. இவ்வினத்தின் கீழ் மாவட்ட அளவில் திட்ட செயலாக்கம் தொடர்பான பணிகள் மற்றும் ஆவணப்படுத்தலுக்காக மாவட்டம் ஒன்றிற்கு மொத்தம் ரூ.25,000/- வழங்கப்பட்டுள்ளது.

ii. மாவட்டம் ஒன்றிற்கு துண்டு பிரசுரங்கள், கையேடு தயாரித்தல், விளம்பரம் போன்ற பணிகளுக்கு ரூ.5,000/- வரை செலவினம் மேற்கொள்ளலாம்.

iii. விரிவான திட்ட அறிக்கை தயாரித்தல் ரூ.5,000 வரை செலவினம் மேற்கொள்ளலாம்.

iv. மாவட்டம் ஒன்றிற்கு ஆவணப்படுத்தலுக்கு ரூ.5,000 மற்றும் சில்லரை செலவினமாக (Lumpsum) ரூ.10,000 செலவினம் மேற்கொள்ளலாம்.

7. **விரிவான திட்ட அறிக்கை மற்றும் திட்ட கையேடு தயாரித்தல்**
   i. கிராம அளவிலான விரிவான திட்ட அறிக்கை தயாரித்தல், துண்டு பிரசுரங்கள், விளம்பரம், கையேடு தயாரித்தல் போன்ற பணிகளுக்கும் மாநில அளவிலான திட்ட கையேடு தயாரித்தலுக்கும் இவ்வினத்தின் கீழ் செலவினம் மேற்கொள்ளலாம்.
8. **விளம்பரம், ஆவணப்படுத்துதல், கூட்ட நடவடிக்கைக்கான செலவினங்கள் மற்றும் சில்லரை செலவினங்கள்- மாநிலம்**

   மாநில அளவில் திட்ட செயலாக்கத்திற்காக, ரூ.1,00,000/-னை ஆவணப்படுத்துதல், ஆய்வுக் கூட்டங்கள் நடத்துவதற்கான செலவினங்கள், உணவு வழங்குதல், திட்ட கையேடு அச்சிடுதல், எழுது பொருட்கள் கொள்முதல், பயணம் மேற்கொள்ளுவதற்கான வண்டி வாடகை வழங்குதல், கணினி மற்றும் உதிரி பாகங்கள் வாங்குதல், எழுதுபொருட்கள் மற்றும் சில்லரை செலவினம் மேற்கொள்ளலாம்.

<u>II) தோட்டக்கலை -மலைப்பயிர்கள் துறை இனம் வாரியான வழிகாட்டு நெறிமுறைகள்</u>

**i. சந்தைகளில் காய்கறிகள் வரத்தினை அதிகரிக்க காய்கறி சாகுபடியை ஊக்குவித்தல்**

காய்கறி சாகுபடியை ஊக்குவித்தல் இனத்தின் கீழ் 8180.48 எக்டர் பரப்பிற்கு, ரூ.6.13536 கோடி நிதியில் காய்கறி விதைகள் மற்றும் இடுபொருட்கள் வழங்கப்படும்.

i. சந்தைகளில் காய்கறிகள் வரத்தினை அதிகரிக்க காய்கறி சாகுபடியை ஊக்குவிக்கும் பொருட்டு காய்கறி விதைகள் மற்றும் இடுபொருட்கள் மானியத்தில் வழங்கப்படும்.
ii. எக்டர் ஒன்றிற்கான மொத்தச் செலவினம் - ரூ.10,000/-
iii. மானியம் - மொத்த செலவினத்தில் 75 சதவீத மானியமாக எக்டர் ஒன்றிற்கு ரூ.7,500/- வழங்கப்படும்.
iv. விவசாயியின் பங்குத்தொகை ரூ. 2500/எக்டர்.
v. இத்திட்டம் செயல்படுத்துவதற்கு தேவையான தரமான விதைகள் மற்றும் இடுபொருட்கள் ஒப்பந்தப்புள்ளிகள் மூலம் கொள்முதல் செய்யப்படும்.
vi. சிறு, குறு, பெண், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின விவசாயிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
vii. தேர்ந்தெடுக்கப்பட்ட அனைத்து கிராமங்களிலும் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

2. **ஊட்டச்சத்து தன்னிறைவை மேம்படுத்த பழச்செடி தொகுப்புகள் வழங்குதல்**

   கொய்யா (பதியன்), நெல்லி (ஒட்டு), சீத்தா (விதைக்கன்று), எலுமிச்சை (விதைக்கன்று) மற்றும் பலா (ஒட்டு)/ மா(ஒட்டு) போன்ற பழச்செடிகள் ரூ.2.706 கோடி நிதியில் வழங்கப்படும்.

   i. கொய்யா, நெல்லி, பலா/மா, சீத்தா, எலுமிச்சை போன்ற 5 வகையான பழச்செடிகள் அடங்கிய தொகுப்பு வழங்கப்படும்.

ii. தொகுப்பு ஒன்றின் மொத்த விலை - ரூ.160/-

iii. மானியம் – 75 சதவீதம் (தொகுப்பு ஒன்றிற்கு - ரூ.120/-)

iv. ஒரு தொகுப்பிற்கு பயனாளியின் பங்குத் தொகை ரூ.40/-

v. போக்குவரத்து செலவு உட்பட மானியம் வழங்கப்படும்.

vi. ஒரு குடும்பத்திற்கு அதிகபட்சமாக ஒரு பழச்செடி தொகுப்பு மட்டுமே வழங்கப்படும்.

vii. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின குடும்பங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்

viii. இத்திட்டம் செயல்படுத்துவதற்கு தேவையான பழச்செடிகள் அனைத்தும் அரசு தோட்டக்கலைப் பண்ணையில் உற்பத்தி செய்யப்பட்டு வழங்கப்படும்

ix. தரமான பழச்செடிகள் உற்பத்தியினை பண்ணை மேலாளர்கள் (தோட்டக்கலை அலுவலர்கள்) உறுதி செய்ய வேண்டும்.

x. தேர்ந்தெடுக்கப்பட்ட அனைத்து கிராமங்களிலும், தொகுப்புகள், முறையே வழங்குவதை வட்டர அலுவலர்கள் உறுதி செய்ய வேண்டும்.

3. **காய்கறி விதைத் தளைகள் விநியோகம்**

கத்தரி, வெண்டை, தக்காளி, கீரைகள், அவரை, மிளகாய், கொத்தவரை, முருங்கை, சின்னவெங்காயம், முள்ளங்கி, பந்தல் காய்கறிகள் போன்ற எட்டு வகையான காய்கறி விதைகள் அடங்கிய தளைகள் ரூ. 0.9612 கோடி நிதியில் வழங்கப்படும்.

i. பஞ்சாயத்து கிராமம் ஒன்றிற்கு 100 தொகுப்புகள் வீதம் 3,20,400 குடும்பங்களுக்கு வழங்கப்படும்.

ii. தளை ஒன்றின் மொத்த விலை - ரூ.40/-

iii. மானியம் – 75 சதவீதம் (தளை ஒன்றிற்கு - ரூ.30/-)

iv. ஒரு தளை ஒன்றிற்கு பயனாளியின் பங்குத் தொகை ரூ.10/-

v. சின்னவெங்காயம், முள்ளங்கி விதைகள் தவிர இதர காய்கறி விதைகள் அரசு தோட்டக்கலை பண்ணைகளில் உற்பத்தி செய்து விநியோகிக்கப்படும். சின்னவெங்காயம், முள்ளங்கி விதைகள் அரசு சார் நிறுவனங்களில் கொள்முதல் செய்து வழங்கப்படும்.

vi. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின குடும்பங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்

vii. தேர்ந்தெடுக்கப்பட்ட அனைத்து கிராமங்களிலும் தளைகள் முறையே வழங்குவதை வட்டார அலுவலர்கள் உறுதி செய்திட வேண்டும்.

4. பல்லாண்டு தோட்டக்கலை பயிர்களின் பரப்பு விரிவாக்கம்

பல்லாண்டு தோட்டக்கலை பயிர்களின் பரப்பு விரிவாக்க இனத்தின் கீழ் 10,000 எக்டர் பரப்பிற்கு, ரூ.18.00 கோடி நிதியில் நடவுச் செடிகள் மற்றும் இதர இடுபொருட்கள் வழங்கப்படும்.

i. இவ்வினத்தின் கீழ் மா, கொய்யா, சப்போட்டா, கொடுக்காபுளி, நாவல், சீத்தா, எலுமிச்சை, புளி போன்ற தோட்டக்கலைப் பயிர்களின் பரப்பினை அதிகரிப்பதற்கு தேவையான நடவுச் செடிகள் மற்றும் இதர இடுபொருட்கள் வழங்கப்படும்.
ii. தேசிய தோட்டக்கலை இயக்கத் திட்டத்தின் வழிகாட்டு நெறிமுறைகளின்படி செயல்படுத்தப்படும்.
iii. எக்டர் ஒன்றிற்கான மொத்தச் செலவினம் - ரூ.60,000/-
iv. மானியம் - 50 சதவீத மொத்த செலவினத்தில் முதலாமாண்டு, 60 சதவீத மானியமாக ரூ.18,000/ எக்டர் வழங்கப்படும்.
v. இவ்வினத்தின் கீழ் தரிசு நில தொகுப்பில் உள்ள விவசாயிகளும், தேர்ந்தெடுக்கப்பட்ட கிராமப் பஞ்சாயத்துகளில் உள்ள விவசாயிகளும் பயன் பெறலாம்.
vi. ஒரு பயனாளி அதிகபட்சமாக 4 எக்டர் வரை பயன்பெறலாம்.
vii. சிறு / குறு, பெண், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின விவசாயிகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் வழங்கப்பட வேண்டும்.

5. காளான் வளர்ப்புக்கூடம் அமைத்தல்

தேர்ந்தெடுக்கப்பட்ட கிராமப் பஞ்சாயத்துகளில் 100 காளான் வளர்ப்புக் கூடங்கள் ரூ.1.00 கோடி நிதியில் அமைக்கப்படும்.

i. காளான் வளர்ப்புக்கூடத்தின் அளவு – 600 சதுர அடி.
ii. ஒரு காளான் வளர்ப்புக்கூடம் அமைப்பதற்கு ஆகும் மொத்த செலவினம் - ரூ. 2.00 இலட்சம்.
iii. மானியம் – 50 சதவீத மானியமாக அலகு ஒன்றிற்கு ரூ.1.00 இலட்சம் வழங்கப்படும்.
iv. ஒரு பயனாளி அதிகபட்சமாக ஒரு அலகிற்கு மட்டுமே மானியம் பெற இயலும்.
v. பெண்கள், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் வழங்கப்படும்,
vi. சம்பந்தப்பட்ட மாவட்ட தோட்டக்கலை இணை / துணை இயக்குநர், அருகிலுள்ள வட்டார தோட்டக்கலை உதவி இயக்குநர், உதவிப் பொறியாளர் (வேளாண் பொறியியல் துறை), தோட்டக்கலை அலுவலர் ஆகியோர்களின் கூட்டாய்வு அறிக்கையின் அடிப்படையில் 50 சத்வீத மானியத் தொகையான ரூ.1.00 இலட்சம் பயனாளிக்கு பின்னேற்பு மானியமாக விடுவிக்கப்படும்.

6. திட்ட செயலாக்கம் மற்றும் ஆவணப்படுத்துதல்

i. அனைத்து இனங்களும் முறையாக ஆவணப்படுத்திடவேண்டும்,

ii. இனவாரியாக, புவி குறியிடப்பட்ட புகைப்படங்களை வட்டார அலுவலர்கள் தங்கள் அதிகார எல்லைக்குட்பட்ட கிராமங்களில் ஆவணப்படுத்திட வேண்டும்.

iii. பயனாளிகளின் கருத்து கேட்பு பதிவேடு சீரான இடைவெளியில் பதிவு செய்யப்பட்டு, வட்டார அலுவலகத்தில் பராமரித்தல் வேண்டும்.

## III) வேளாண்மைப் பொறியியல் துறைத் திட்டத்தின் இனவாரியான வழிகாட்டு நெறிமுறைகள்

**1. தொகுப்பிலுள்ள விவசாய குழுக்களுக்கு நீர் ஆதாரங்களை உருவாக்குதல் :**

i. வேளாண்மைத் துறை / தோட்டக்கலைத் துறைகள் மூலம் உருவாக்கப்படும் தொகுப்புகளில் நீர் ஆதாரத்தை ஏற்படுத்துதல்.

ii. வேளாண்மைத் துறை / தோட்டக்கலைத் துறையினரால் உருவாக்கப்படும் தொகுப்புகளில் நிலநீர் ஆய்வின்படி ஆழ்துளைக் கிணறு / குழாய்க் கிணறு அமைத்தல், மின் சக்தி / சூரிய சக்தி மூலம் இயங்கும் பம்பு செட்டுகள் அமைத்தல் மற்றும் அருகில் உள்ள மின் கம்பத்திலிருந்து பம்பு செட் வரை மின் விநியோக இணைப்பு வழங்குதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படும்.

**நிலநீர் ஆய்வு:**

i. நிலத்தடி நீர்வளம் உள்ள சரியான இடத்தினை தேர்வு செய்வதற்காக வேளாண்மைப் பொறியியல் துறையின் உதவி புவியியலாளர்கள்/ தமிழ்நாடு குடிநீர் மற்றும் வடிகால் வாரியத்தின் புவியியலாளர்கள்/ மாநில நில மற்றும் மேற்பரப்பு நீர்வள ஆதார விவரக் குறிப்பு மையம், நீர்வளத்துறையின் புவியியலாளர்கள் அல்லது தனியார் நிறுவனம் மூலம் நிலநீர் ஆய்வு மேற்கொள்ளப்படும்.

ii. நிலநீர் ஆய்வின் அடிப்படையில் மண்ணின் தன்மைக்கு ஏற்ப ஆழ்துளைக் கிணறு/குழாய்க் கிணறு / திறந்தவெளிக் கிணறு அமைத்தல் முடிவு செய்யப்படும்.

**ஆழ்துளைக் கிணறு/குழாய்க் கிணறு அமைத்தல்**

i. நிலநீர் ஆய்வின்படி ஆழ்துளைக் கிணறு/குழாய்க் கிணறு அமைக்கப்படும்.

ii. சமுதாய நிலங்களுக்கான புறம்போக்கு அல்லது மேய்ச்சல் புறம்போக்கில் ஆழ்துளைக் கிணறு/ குழாய்க் கிணறு அமைப்பதற்கும் பம்பு செட் நிறுவுவதற்கும் வருவாய்த் துறையிடம் தேவையான அனுமதி பெறவேண்டும்.

iii. கிணறு அமைப்பதற்கு சமுதாய நிலம் கிடைக்கவில்லை என்றால், விவசாய குழுக்களே நிலங்களை பெற்றுத்தருவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். இதற்கான வழிகாட்டுதல் மற்றும் நடவடிக்கைகள் கிராம திட்ட செயலாக்க குழுவினால் மேற்கொள்ளப்பட வேண்டும். ஒரு குறிப்பிட்ட ஒப்பந்தத்தில் நிலத்தை வைத்திருக்கும் தனிநபர் (குழுவில் உள்ள விவசாயிகளில் ஒருவர்) பட்டா நிலத்தை அரசுக்கு தானமாக எழுதி கொடுக்க ஒப்புதல் அளிக்க வேண்டும். இந்த ஒப்பந்தம் ஆழ்துளைக் கிணறு/குழாய்க் கிணறு அமைக்கும் பகுதியிலுள்ள நில உரிமையாளரால் மின் சக்தியால் இயங்கும் பம்பு செட் அமைப்பதற்கு 100 சதுர அடியும் (10 அடி x 10 அடி), சூரிய சக்தியால் இயங்கும் பம்பு செட் அமைப்பதற்கு 900 சதுர அடியும் (30 அடி x 30 அடி) நிலப்பரப்பினை தானமாக வழங்கிட வேண்டும்.

iv. இத்திட்டத்தின் மூலம் கிணறுகள் அமைத்து மின் இணைப்பை பெறுவதற்கு வேளாண்மைத்துறையால் கண்டறியப்பட்டு ஏற்படுத்தப்பட்ட தொகுப்புகளுக்கு உதவி வேளாண் இயக்குநர் பதவியின் பெயரிலும், தோட்டக்கலைத்துறையால் கண்டறியப்பட்டு ஏற்படுத்தப்பட்ட தொகுப்புகளுக்கு உதவி தோட்டக்கலை இயக்குநர் பதவியின் பெயரிலும் விண்ணப்பித்து, அவர்களின் பதவியின் பெயரில், மின் இணைப்பு பெற வேண்டும். இதன்பொருட்டு, வேளாண்மைத் துறை / தோட்டக்கலைத் துறையினரால் உருவாக்கப்படும் தொகுப்புகளில் கிணறு அமைக்கும் இடத்திற்கு உரிய அனுமதியினை வருவாய்த் துறையிடமிருந்து தரிசு நில தொகுப்பு குழுக்கள் பெறுவதற்கு வேளாண்மைப்பொறியியல் துறை அலுவலர்களால் உரிய வழிகாட்டுதல்கள் வழங்கப்பட வேண்டும்.

v. ஆழ்துளைக் கிணறு/குழாய்க் கிணறு பகுதிக்கு அணுகு சாலைக்காக நிலத்தை விட்டுக்கொடுப்பதற்கு சம்பந்தப்பட்ட அனைத்து நில உரிமையாளர்களும் (தொகுப்பில் உள்ள விவசாய குழுக்கள்) சம்மதம் தெரிவித்து ஒப்பந்தம் மேற்கொள்ள வேண்டும். இதற்கான வழிகாட்டுதல் மற்றும் நடவடிக்கைகள் கிராம திட்ட செயலாக்க குழுவினால் மேற்கொள்ளப்பட வேண்டும்.

vi. தரிசு நில தொகுப்பில் உள்ள உறுப்பினர்களிடையே (நிலத்தின் அளவைப் பொறுத்து) தண்ணீரைப் பகிர்ந்து கொள்வதற்கான ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட வேண்டும்.

vii. உருவாக்கப்பட்ட நீர் ஆதாரம் அதாவது, ஆழ்துளைக் கிணறு/குழாய்க் கிணறுகளிலிருந்து நிலத்தடி நீர் குழுவில் உள்ள அனைத்து தனிப்பட்ட விவசாயிகளுக்கும் நிலத்தின் அடியில் புதைக்கப்பட்ட பிவிசி குழாய் மூலம் இணைக்கப்பட்டு பயன்படுத்தப்படும்.

viii. விவசாயம் மற்றும் தோட்டக்கலை பயன்பாட்டிற்காக நிலத்தடி நீரை எடுப்பதற்கும் கொண்டு செல்வதற்கும் தடையில்லாச் சான்றிதழைப்

பெறுவதிலிருந்து 'விலக்கு' அளிக்கப்பட்டுள்ளது. இருப்பினும் கால்வாயிலிருந்து 50 மீட்டர் மற்றும் ஆற்றுப்படுகை மற்றும் நீர் நிலைகளில் இருந்து 200 மீட்டர் என தற்போதுள்ள இடைவெளி விதிமுறைகள் குறித்த வழிகாட்டுதல்களுக்கு அரசாணை எண்.142, பொதுப்பணி (R2) துறை, நாள்.23.07.2014 மற்றும் கிணறுகளுக்குள்ளான இடைவெளி குறித்த வழிகாட்டுதல்களுக்கு அரசாணை எண்.113,பொதுப்பணி (R2) துறை, நாள்.09.06.2016ன் இணைப்பு -2 இல் குறிப்பிட்டுள்ளவாறு பின்பற்ற வேண்டும்.

ix. நிலத்தடி நீர் ஆதாரம் உருவாக்குவதற்கு, கடினப்பாறை பகுதிகளில் ஆழ்துளைக் கிணறுகளும் வண்டல் மண் பகுதிகளில் குழாய்க் கிணறுகளும் மின் சக்தி / சூரிய சக்தி இணைப்புடன் அமைக்கப்படும்.

x. ஆழ்துளைக் கிணறு /குழாய்க் கிணறு ஆகியவற்றிலிருந்து கிடைக்கப்பெற்ற தண்ணீரின் அளவு மற்றும் தன்மையின் அடிப்படையிலும், மண் பரிசோதனை மற்றும் தரிசு நில தொகுப்பு விவசாயிகளின் விருப்பத்திற்கேற்றவாறும் சாகுபடிக்கு ஏற்ற பழ / மரக்கன்றுகள் வேளாண்மை மற்றும் தோட்டக்கலைத் துறைகளின் மூலம் பரிந்துரை செய்யப்படும்.

xi. பொதுவாக 10 முதல் 15 ஏக்கர் வரை கொண்ட தொகுப்புகளுக்கு ஒரு சமுதாய கிணறு அமைக்கப்படும்.

xii. இத்திட்டத்தின் அனைத்து பணிகளும் ஜியோ டேக்கிங் (Geo tagging) மூலம் பதிவேற்றம் செய்யப்படும்.

xiii. இத்திட்டத்தின்கீழ் உருவாக்கப்பட்ட அனைத்து கட்டமைப்புகளும் வேளாண்மைத் துறை / தோட்டக்கலைத் துறையினரால் உருவாக்கப்படும் தொகுப்புகளில் உள்ள விவசாய குழுக்களிடம் ஒப்படைக்கப்படும். அந்த குழுக்களில் உள்ள விவசாயிகளே அவர்களின் சொந்த செலவில் மேற்கண்ட கட்டமைப்புகளின் பராமரிப்பினை மேற்கொள்ள வேண்டும்.

xiv. இத்திட்டத்தில் உருவாக்கப்பட்ட கட்டமைப்புகளின் கூட்டுப் பயன்பாட்டிற்கும், பராமரித்தலுக்கும், உரிய விவசாயிகளின் பங்கேற்பினை விவசாயிகளுக்கிடையேயான ஒப்பந்தத்தின் மூலம் இத்திட்டத்தின் செயல்பாட்டின்போதே ஏற்படுத்தப்படும்.

xv. ஒவ்வொரு கிணறும் (ஆழ்துளை/ குழாய் ) அமைந்துள்ள இடத்தினை சுற்றி நீர் செறிவூட்டும் மண்டலத்திற்குள் கட்டாயமாக ஒரு நீர் சேகரிப்பு கட்டமைப்பை உருவாக்க வேண்டும். வயல்களில் வரப்பு அமைத்தல், தடுப்பணைகள் கட்டுதல், கற்களால் ஆன தடுப்பணைகள், நீர் செறிவூட்டும் கட்டமைப்பு மற்றும் பண்ணைக் குட்டைகள் முதலிய அமைப்புகளை ஊரக வளர்ச்சித் துறை மூலம் முன்னுரிமை அடிப்படையில் நீர் செறிவூட்டும் கட்டுமான அமைப்புகளை அமைக்க தகுதியான இடத்தின் விபரங்களை, வேளாண்மை இணை

இயக்குநருடன் ஒருங்கிணைந்து மாவட்ட ஆட்சியரிடம் பகிரப்பட வேண்டும்.

xvi. பாதுகாப்பான குறுவட்டங்களில் அமைக்க உள்ள அனைத்து கிணறுகளுக்கும் கிணறு அமைக்க ஆகும் மொத்த செலவில் ஒரு கிணறுக்கு ரூ.25,000/- தொகை வீதம் பிரதம மந்திரி நீர் பாசனத் திட்டம் – ஒரு துளி நீரில் அதிக பயிர் – இதர செயல்பாடுகள் - துணை நிலை நீர் மேலாண்மைத் திட்டம் வாயிலாகவும், மீதத் தொகை மாநில அரசு நிதி மூலமும் செயல்படுத்தப்பட வேண்டும்.

xvii. திறந்தவெளி கிணறுகள் அமைய உள்ள இடங்களில் ஊரக வளர்ச்சி துறையால் செயல்படுத்தப்படும் திட்டங்களின் கீழ் திறந்தவெளி கிணறுகள் அமைத்திட நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

xviii. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை மூலமாக திறந்தவெளிக் கிணறுகள் அமைக்கும் பணிகள் முடிக்கப்பட்ட பின் நீரிறைக்கும் அமைப்பு (மின் / சூரிய சக்தி) மற்றும் இதர பணிகள் வேளாண்மைப் பொறியியல் துறையின் மூலம் செயல்படுத்தப்படும்.

xix. கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட கிணறுகளில் (ஆழ்துளை /குழாய்க் கிணறு) கிடைக்கப்பெற்ற தண்ணீர், பாசனத்திற்கு போதுமான பாசன நீர் வழங்க முடியாத சூழலில், இத்தகைய கிணறுகளில் தொடர்ந்து மின் அல்லது சூரிய சக்தி மூலம் பாசன அமைப்பு ஏற்படுத்தி செலவு மேற்கொள்ளுதல் பயனுள்ளதாக இருக்காது, மேலும், கூடுதல் தலைமைச் செயலர், நீர்வளத்துறை, சென்னை அவர்களுக்கு முகவரியிட்ட மாநில நிலத்தடி மற்றும் மேற்பரப்பு நீர் ஆதாரங்கள் தரவு மையம், தரமணி, நீர்வளத்துறையின் கடித எண்.OT9/AG-V/scheme/2022. நாள் 15.02.2022-இல் அனைத்து இடங்களிலும் ஆழ்துளைக் கிணறுகள் அமைக்க அனுமதி வழங்கும்போது அளித்துள்ள குறிப்புரையில் கண்காணிப்பு கிணறுகளை (Monitoring wells) அமைத்துத்தர கோரியுள்ளார்கள். எனவே, பயனுராத / வெற்றியடையாத ஆழ்துளைக் கிணறுகள் உருவாகும்பட்சத்தில் அந்தக் கிணறுகளையும் கண்காணிப்பு கிணறுகளாக நீர்வளத்துறைக்கு ஒப்படைத்திடவும், அப்பணிகளுக்குரிய செலவினத்தை வேளாண்மைப் பொறியியல் துறையின் திட்டப்பணிகளில் உள்ள இனம்-1-ன்கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகையிலிருந்து மேற்கொள்ள வேண்டும்.

### நீர் இறைக்கும் அமைப்பு

அமைக்கப்படும் கிணறுகளிலிருந்து நீர் இறைப்பதற்கு சூரிய சக்தி அல்லது மின் சக்தி இணைப்பு வழங்கப்படும். நில நீர் ஆய்வின் அடிப்படையில் நிலத்தடி நீரின் மட்டம் 500 அடி ஆழம் வரை இருக்கும்பொழுது ஆழ்துளைக் கிணறு/குழாய்க் கிணறு சூரிய சக்தியால் இயங்கும் பம்பு செட்டுகளுடன் அமைக்கப்படும். ஏனெனில், 10 எச்பி (HP) திறன் கொண்ட சூரிய சக்தியால்

இயங்கும் பம்புசெட் 500 அடி ஆழம் வரை மட்டுமே திறம்பட செயல்படும். 500 அடி ஆழத்திற்கு மேல் அமைக்கப்படும் ஆழ்துளைக் கிணறு /குழாய்க் கிணறுகளுக்கு, மின் இணைப்பு பம்புசெட் வழங்கப்படும்.

**அ) சூரிய சக்தியால் இயங்கும் பம்புசெட் அமைப்பு**

i. 10 குதிரைத் திறன் வரையிலான குறைந்த மின்னழுத்த பேனல்களை கொண்ட சூரிய சக்தியால் இயங்கும் பம்பு செட்டுகள் 500 அடி ஆழம் வரை உள்ள ஆழ்துளைக் கிணறு / குழாய் / திறந்த வெளி கிணறுகளுக்கு வழங்கப்படும். இத்திட்டத்தின்கீழ் பாதுகாப்பான குறுவட்டங்களில் உருவாக்கப்படும் ஆழ்துளைக் கிணறு / குழாய் / திறந்த வெளி கிணறுகளில் சூரிய சக்தியால் இயங்கும் பம்புசெட்டுகள் அமைத்திட முதலமைச்சரின் சூரிய சக்தி பம்புசெட்டுகள் திட்டத்திலிருந்து புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகம் 10 குதிரைத் திறன் வரையிலான சூரிய சக்தி பம்புசெட்டுகளுக்கு நிர்ணயித்துள்ள 30% ஒன்றிய அரசின் நிதியும், மாநில அரசின் 40% நிதியும் மீதமுள்ள 30% நிதி கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டத்திற்கான மாநில அரசு நிதியிலிருந்தும் ஒருங்கிணைந்து செயல்படுத்தப்படும். இத்திட்டத்தில் பாதுகாப்பான குறுவட்டங்கள் என மத்திய நிலத்தடி நீர் வாரியம், டைனமிக் நிலத்தடி நீர் ஆதார மதிப்பீடு, 2020 (மார்ச் 2020 நிலவரப்படி) குறிப்பிட்டுள்ள விவரங்கள் ஆதாரமாக எடுத்துக் கொள்ளப்படும்.

ii. வேளாண்மைப் பொறியியல் துறையால் செயல்படுத்தப்படும் பிரதம மந்திரி விவசாயிகள் ஆற்றல் பாதுகாப்பு மற்றும் மேம்பாட்டு (PM-KUSUM) திட்டத்தின்கீழ் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் தெரிவுசெய்யப்பட்ட சூரிய சக்தியால் இயங்கும் பம்பு செட்டுகள் உற்பத்தி நிறுவனங்களின் பம்புகளின் மாடல் மற்றும் வகை ஆகியவை இத்திட்ட செயல்பாட்டில் பயன்படுத்தப்படும்.

**ஆ) மின் சக்தியால் இயங்கும் பம்பு செட் அமைப்பு**

i. சூரிய சக்தியால் இயங்கும் பம்பு செட்டுகள் வழங்க சாத்தியக்கூறு இல்லாத இடங்களில் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தின் (TANGEDCO) மூலம் மின் இணைப்பு இத்திட்டம் மூலம் பெற்று வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

ii. மின் சக்தியால் இயங்கும் பம்பு செட்டுகள், எலக்ட்ரிக் பேனல், ஸ்டார்ட்டர் ஆகியவற்றிற்கு தேவையான பாதுகாப்பு கட்டமைப்பு வசதிகளுடன் அதிகபட்சமாக 15 HP கொண்ட மோட்டாருக்கான செலவினம் அரசால் ஏற்கப்படும்.

iii. மின்மோட்டார் பம்புசெட்டுகள் அமைக்க உள்ள அனைத்து இடங்களிலும், மின்மோட்டாருக்கு ஆகும் மொத்த செலவில் ஒரு மின்மோட்டாருக்கு தொகை ரூ.15,000/- வீதம், துணை நிலை நீர் மேலாண்மைத் திட்டம் வாயிலாகவும் மீதத் தொகை மாநில அரசு நிதியிலிருந்தும் வழங்கப்படும்.

இ) நீர் விநியோக குழாய்கள்:

இத்திட்டத்தின் மூலம் உருவாக்கப்படும் கிணறுகளுக்கு மின்/சூரிய சக்தி மூலம் நீர் இறைக்கும் அமைப்பு வேளாண்மைப் பொறியல் துறையின் மூலம் உருவாக்கப்பட்டபின், பாசன நீர் விநியோகக் குழாய்கள் அமைக்கும் பணிகள் மற்றும் சொட்டு நீர்ப்பாசன அமைப்பு நிறுவும் பணிகளுக்காக வேளாண்மை/தோட்டக்கலைத் துறையிடம் ஒப்படைக்கப்படும். இதனை தொடர்ந்து, பாசன நீர் விநியோகக் குழாய்கள் அமைக்கும் பணிகள் மற்றும் சொட்டு நீர்ப்பாசன அமைப்பு ஏற்படுத்தும் பணிகள் வேளாண்மை/தோட்டக்கலைத் துறையினரால் மேற்கொள்ளப்படும்.

ஈ) நுண்ணீர் பாசனம் அமைத்தல்:

இத்திட்டத்தின் மூலம் உருவாக்கப்படும் கிணறுகளுக்கு மின்/சூரிய சக்தி மூலம் நீர் இறைக்கும் அமைப்பு வேளாண்மைப் பொறியியல் துறையின் மூலம் உருவாக்கப்பட்டபின், சொட்டு நீர்ப்பாசன அமைப்பு ஏற்படுத்தும் பணிகள் நுண்ணீர் பாசனத்திட்ட வழிகாட்டுதலினை பின்பற்றி வேளாண்மை / தோட்டக்கலைத் துறையினரால் மேற்கொள்ளப்பட்டபின் சம்பந்தப்பட்ட தரிசு நில தொகுப்பு சங்கத்திடம் நீர் பங்கீட்டு அட்டவணை ஒப்பந்தத்துடன் வேளாண்மைப் பொறியியல் துறையினரால் ஒப்படைக்கப்பட வேண்டும்.

2. தனிப்பட்ட ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின விவசாயிகளுக்கு கிணறுகள்(ஆழ்துளை அல்லது குழாய்க் கிணறுகள்) அமைத்தல்:

i. தமிழ்நாடு முழுவதிலும் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் தனிப்பட்ட ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின விவசாயிகள் பயன்பெறும் வகையில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையினரால் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் 2022-2023-ஆம் ஆண்டு பணி மேற்கொள்ள தேர்வு செய்யப்பட்ட பஞ்சாயத்து கிராமங்களில் செயல்படுத்தப்படும்.

ii. உரிய நிலத்தடிநீர் ஆய்வு செய்து தகுதியான இடங்களில் மட்டும் அனுமதிக்கப்படவேண்டும்.

iii. பொதுப்பணித்துறையின் வழிகாட்டு நெறிமுறைகளுக்குட்பட்டு செயல்படுத்தப்படவேண்டும்.

iv. இத்திட்டத்தின் மூலம் உருவாக்கப்படும் கிணறுகளுக்கு மின்/சூரிய சக்தி மூலம் நீர் இறைக்கும் அமைப்பு வேளாண்மைப் பொறியியல் துறையின் மூலம் உருவாக்கப்பட்டபின், பாசன நீர் விநியோகக் குழாய்கள் அமைக்கும் பணிகள் மற்றும் சொட்டு நீர்ப்பாசன அமைப்பு நிறுவும் பணிகள் பிரதம மந்திரி வேளாண் நீர்ப்பாசன திட்டம் – ஒரு துளி நீரில் அதிக பயிர் – நுண்ணீர் பாசனத் திட்டம் வேளாண்மை / தோட்டக்கலைத் துறையினரால் ஏற்படுத்தப்படும்.

v. வருவாய் துறையின் மூலம் வழங்கப்பட்ட சாதிச் சான்றிதழின் அடிப்படையில் இத்திட்டத்தின் பயனாளிகள் தேர்வு செய்யப்படுவர்.

vi. சாத்தியமுள்ள இடங்களில் சூரிய சக்தி மூலம் இயக்கப்படும் பம்புசெட் (அதிகபட்சம் 10 HP வரை) அமைத்திடலாம்.

3. மழைநீரை விளைநிலங்களிலேயே சேமிக்க பண்ணைக்குட்டைகள் அமைத்தல்:

i. பண்ணைக் குட்டைகள் அமைக்க விருப்பமுள்ள விவசாயிகள், தங்கள் சொந்த விளைநிலங்களில் மட்டுமே அமைத்தல் வேண்டும்.

ii. விவசாயிகளின் எழுத்துப்பூர்வமான ஒப்புதல் பெறப்பட வேண்டும்.

iii. மாவட்ட ஆட்சியரின் குறைதீர்க்கும் நாள் கூட்டங்களில் துண்டுப் பிரசுரங்களை (Pamphlet) விநியோகித்து மாவட்ட அளவில் மாவட்ட நிர்வாகம் மூலம் இத்திட்டத்திற்கு விளம்பரம் செய்து, ஆர்வமுள்ள விவசாயிகள் கண்டறியப்பட வேண்டும்.

iv. மானாவாரி விவசாயிகள், ஆதிதிராவிட / பழங்குடியின சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும்.

v. நிலத்தின் சரிவு (Slope) மற்றும் மண்ணின் ஊடுருவக்கூடிய தன்மையின் (Soil permeability) அடிப்படையில் பண்ணைக் குட்டை அமைக்கப்படும் இடம் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்.

vi. அதிகப்படியான நீரினை சேகரிக்கவும் போதுமான நீர்பிடிப்புப்பகுதி கொண்ட விவசாயியின் நிலங்களின் தாழ்வான பகுதிகளில் பண்ணைக்குட்டைகள் அமைக்கப்பட வேண்டும்.

vii. நிலங்களின் தன்மை மற்றும் விவசாயிகளின் தேவைகளுக்கு ஏற்ப பண்ணைக் குட்டைகளின் அளவு மற்றும் ஆழம் மாறுபடும். நிலப்பரப்பின் கீழ் பாறைகள் அல்லது வளம் குன்றிய மண் இருந்தால் பண்ணைக்குட்டையின் ஆழம் குறைந்தபட்சம் 1.5 மீட்டர் முதல் 3 மீட்டர் வரை மாறுபடும்.

viii. பண்ணைக் குட்டைகளில் நிலையான நுழைவு மற்றும் நீர்வெளி செல்லும் வழி அமைக்க வேண்டும். RCC குழாய்கள் பயன்படுத்தப்பட வேண்டும் மற்றும் அவற்றின் விட்டம் 30 சென்டி மீட்டருக்கும் குறைவாக இருக்கக்கூடாது. கல் அடைப்புடன் கூடிய நுழைவு அமைக்க வேண்டும். ஆர்.சி.சி பைப்புக்குப் (RCC pipe) பதிலாக பிவிசி பைப் (PVC pipe) பயன்படுத்தக் கூடாது.

ix. நுழைவு வழியில் தலைச்சுவர்கள் (Head wall) கட்டப்பட வேண்டும் மற்றும் குட்டையின் உள்ளே குழாய் நீட்டப்பட வேண்டும்.

x. கிடைக்கப்பெறும் நீர் பண்ணைக் குட்டைகளில் தங்கு தடையின்றி உள்ளே நுழைவதற்கு நுழைவு வாயிலில் உரிய மண் சாய்வு தளம்(Ramp) ஏற்படுத்தப்பட்டு, தேவையான இடங்களில் கல் பதிக்கும்(stone pitching) பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

xi. குளத்தைச் சுற்றி வரப்புகள் 0.60 மீட்டர் முதல் 1.00 மீட்டர் உயரம் மற்றும் மேல் அகலம் 0.60 மீட்டர் மற்றும் பக்க சரிவுகள் 1:1 என மண்ணின் வகையைப் பொறுத்து, தோண்டப்பட்ட மண்ணைப் பயன்படுத்தி உருவாக்கப்பட வேண்டும்.

xii. சுற்றிலும் ஒரே மாதிரியான 1.00 மீட்டர் அகலம் (Berm width) கொண்ட வரப்புகளை பலப்படுத்தி மட்டம் அடித்து அமைக்க வேண்டும்.

xiii. குட்டையின் பக்கவாட்டு பகுதிகள் உறுதிக்காக சாய்வாக இருக்க வேண்டும்.

xiv. பண்ணைக் குட்டைகள் பொதுப்பணித் துறையின் தற்போதைய வருடத்திற்கான விலை விகித அட்டவணையின்படி அமைக்கப்பட வேண்டும். விவசாயிகளின் விருப்பத்திற்கேற்பவும், நிலத்தின் தன்மைக்கேற்பவும், பண்ணைக் குட்டைகளின் அளவினை முடிவு செய்து கொள்ளலாம். அதிகபட்சமாக 1800 கன மீட்டர் கொள்ளவிற்கு பண்ணைக் குட்டைகள் அமைக்கலாம். ஒவ்வொரு விவசாயிக்கும் அமைக்கப்படும் பண்ணைக் குட்டை அளவிற்கான மதிப்பீட்டினை, பொதுப் பணித்துறையின் தற்போதைய வருடத்திற்கான விலை விகித அட்டவணையின்படி தயார் செய்து பணிகள் மேற்கொண்டு, செலவினம் செய்யப்பட வேண்டும்.

xv. பண்ணைக் குட்டைகளின் வரப்புகளில் வேளாண்மை மற்றும் தோட்டக்கலைத் துறையினரின் உதவியுடன் பழமரச் செடிகள், காய்கறி செடிகள் போன்றவற்றை வளர்த்து, வரப்புகளை உறுதிபடுத்துவதோடு விவசாயிகள் கூடுதல் வருமானம் பெறுவதற்கு வழிவகை செய்திடல் வேண்டும்.

xvi. மீன் வளர்க்க சாத்தியக்கூறு உள்ள பண்ணைக் குட்டைகளில், மீன் வளர்ப்பதற்கு, மீன்வளத் துறையின் மூலம் ஒருங்கிணைந்து செயல்படுத்தப்பட வேண்டும்.

xvii. திட்டப் பணியின் மதிப்பின் அடிப்படையில், பணியை நிறைவேற்றுவதற்கு டெண்டர் நடைமுறை பின்பற்றப்பட வேண்டும்.

xviii. அளவைப் புத்தகத்தில் (M.Book) அளவீடுகள் சரியாகப் பதிவு செய்யப்பட்டு அதற்கேற்ப பணம் வழங்கப்பட வேண்டும்.

xix. பணித்தளத்தில் உள்ள அளவீடு, அளவைப் புத்தகத்தில் பதிவு செய்யப்பட வேண்டும். மேலும் மதிப்பீட்டுத் தொகைக்கு மிகாமல் செலவு செய்தல் வேண்டும். GPS அளவீடுகள் (தீர்க்க மற்றும் அச்ச ரேகை) எடுத்து மதிப்பீடு மற்றும் அளவைப் புத்தகத்தில் (M. Book) பதிவு செய்ய வேண்டும்.

xx. பிற திட்டங்களின்கீழ் பண்ணைக்குட்டைகள் அமைக்கப்படவில்லை என்பதை உறுதி செய்ய இத்திட்டத்தில் செயல்படுத்தப்பட்டுள்ள பண்ணைக் குட்டைகளின் விவரங்களினை, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மற்றும் திட்ட அலுவலர்/துணை இயக்குநர், மாவட்ட நீர்வடிப்பகுதி வளர்ச்சி முகமையிடம் தெரிவித்திடல் வேண்டும் .

**4. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள சிறுபாசன குளங்கள், ஊரணிகள், குளங்கள், வரத்து கால்வாய்கள் மற்றும் இதர நீர் சேகரிப்பு கட்டுமானங்கள் மற்றும் இதர துறையினால் உருவாக்கப்பட்ட நீர் சேகரிப்பு கட்டுமானங்களைத் தூர்வாரி மேம்படுத்துதல்:**

i. மேற்கண்ட பணிகளை தேர்வு செய்யும்போது, கடந்த 3 ஆண்டுகளில் இதர துறைகளினால் தூர்வாரப்படாமல் உள்ள கிராம திட்ட செயலாக்கக்குழு

கண்டறிந்த பணிகளில், தேவையின் அடிப்படையில் மாவட்ட கண்காணிப்பு குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் முன்னுரிமை அளித்து மேற்கொள்ளப்பட வேண்டும்.

ii. பணிகள் ஆரம்பிக்கும் முன்பு கரைகளின் முன் அளவீடுகள் பதிவு செய்யப்பட வேண்டும்.

iii. தூர்வாரும் மண்ணைக்கொண்டு கரைகள் பலப்படுத்தப்படும்போது கரைகளின் மேல் மட்டம் மற்றும் பக்கவாட்டு சரிவுகள் முறையாக அமைக்கப்படுவதை உறுதி செய்தல் வேண்டும்.

iv. ஊரணிகள், குளங்களை தூர்வாரும் போது கரைகளை பலப்படுத்துதலுக்கு தேவைப்படும் மண் போக மீதமிருக்கும் மண்ணினை வருவாய் துறையின் அனுமதியினை பெற்று அருகாமையில் உள்ள இடங்களில் உரிய முறையில் அப்புறப்படுத்தப்பட வேண்டும்.

v. தூர்வாரும் பணிகளை டெண்டர் முறையில் மேற்கொண்டு அளவீடு புத்தகத்தில் (M- Book) பதிவு செய்யப்பட வேண்டும்.

vi. இப்பணிகள் மேற்கொள்ளும் முன்பும், நடைபெற்றுக் கொண்டிருக்கும் போதும், முடிவுற்ற பின்பும் தேவையான புகைப்படங்கள் முழுமையாக எடுத்து ஆவணப்படுத்தல் வேண்டும்.

vii. இவ்வினத்திற்காக ஒதுக்கப்பட்ட நிதியில் சேமிப்பு ஏற்படுமாயின் அச்சேமிப்பு நிதியினை தூர்வாரும் பணிகளுக்கான பொருள் இலக்கினை அதிகப்படுத்தி பயன்படுத்திக் கொள்ளலாம்.

**5. வேளாண் இயந்திரங்கள், கருவிகள் மற்றும் உபகரணங்களை வேளாண்மைப் பொறியியல் துறைக்கு கொள்முதல் செய்தல் மற்றும் பராமரித்தல்**

i. இவ்வினத்தின்கீழ் குறிப்பிடப்பட்டுள்ள வேளாண் இயந்திரங்கள், கருவிகள் மற்றும் உபகரணங்களை தமிழ்நாடு ஒப்பந்தப் புள்ளிகளின் வெளிப்படைத் தன்மை சட்டம் 1998 (Tamil Nadu Transparency in Tenders Act 1998) மற்றும் தமிழ்நாடு ஒப்பந்தபுள்ளி வெளிப்படைத் தன்மை விதிகள், 2000 மற்றும் 2012 (Tamil Nadu Transparency in Tenders Rules 2000 & 2012)-இன்படி வேளாண்மைப் பொறியியல் துறைக்கு மின்னணு விலைப்புள்ளி (e-Tender) முறையில் கொள்முதல் செய்யப்பட வேண்டும்.

ii. டிராக் வகை நெல் அறுவடை இயந்திரங்கள் இயக்குபவர்களை வெளிமுகமை ஒப்பந்த அடிப்படையில் (Outsourcing Tender) நியமிக்கப்பட வேண்டும்.

iii. இவ்வேளாண் இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களை விவசாயிகள் இ-வாடகை எனும் கைப்பேசி செயலியின் மூலம் முன்பதிவு செய்ய வேண்டும். இவ்வியந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் முன்னுரிமை அடிப்படையில் தேவைப்படும் விவசாயிகளுக்கு அரசால் நிர்ணயிக்கப்பட்ட குறைந்த வாடகையில் வாடகைக்கு வழங்கப்பட வேண்டும்.

iv. இவ்வேளாண் இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் தேவைப்படும் விவசாயிகள் தங்களுக்கு தேவைப்படும் கால அளவிற்கு ஏற்ற வாடகைக் கட்டணத்தை இ-வாடகை கைப்பேசி செயலியின் மூலம் செலுத்த வேண்டும்.

v. நிலநீர் ஆய்வுக் கருவிகளை, வேளாண்மைப் பொறியியல் துறையில் உள்ள உதவி புவியியல் ஆய்வாளர்களால் இயக்கப்பட வேண்டும்.

vi. விவசாயிகளிடமிருந்து பெறப்படும் இவ்வேளாண் இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களுக்கான வாடகைக் கட்டணம் சம்மந்தப்பட்ட அரசு கணக்கில் செலுத்தப்பட வேண்டும்.

vii. இவ்வேளாண் இயந்திரங்கள், கருவிகள் மற்றும் உபகரணங்களுக்குத் தேவையான இயக்கச் செலவு (எரிப்பொருள் செலவு மற்றும் இயக்குபவர் சம்பளம்), பழுது பார்ப்பு மற்றும் பராமரிப்புச் செலவு முதலியன தொடர்புடைய உப கணக்குத் தலைப்பின் கீழ் அரசாங்க நிதியிலிருந்து அளிக்கப்பட வேண்டும்.

viii. இவ்வினத்தின்கீழ் கொள்முதல் செய்யப்படும் வேளாண் இயந்திரங்கள் , கருவிகள் மற்றும் உபகரணங்கள் வேளாண்மைப் பொறியியல் துறையின் கட்டுப்பாட்டில் இருக்க வேண்டும்.

**6. ஆவணப்படுத்தல், விளம்பரம், நிர்வாக செலவுகள் மற்றும் இதர செலவினங்கள்**

திட்ட செயலாக்கத்திற்கு ஏற்படும் ஆவணப்படுத்துதல், விளம்பரம் நிர்வாக செலவினங்கள் மற்றும் அவ்வப்போது ஏற்படும் சில்லரைச்செலவினங்களும் இவ்வினத்தின் கீழ் ஒதுக்கப்பட்டுள்ள நிதியில் செலவிடப்பட வேண்டும்.

## IV) வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை

**1. உலர்களங்கள் அமைத்தல்**

i. 2022 - 2023 கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்ட 3204 கிராமப் பஞ்சாயத்துகளில், மாவட்டத்திற்கு 3 அல்லது 4 உலர்களம் என்ற விகிதத்தில் கிராமப் பஞ்சாயத்துகள் தேர்வு செய்யப்பட்டு விவசாயிகளின் பயன்பாட்டிற்கு கொண்டு வர இத்திட்டம் செயல்படுத்தப்பட வேண்டும்.

ii. கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின் (KAVIADP) கீழ், ஒரு உலர்களத்திற்கு ரூ. 10.50 இலட்சம் வீதம், 135 உலர்களங்கள் மொத்தம் ரூ.14.175 கோடியில் அமைக்கப்படும். பொதுப்பணித்துறையின் விலைவிகித அடிப்படையில் (PWD Schedule of rates) உலர்களங்களின் கட்டுமானப்பணிகள் மேற்கொள்ளப்படவேண்டும்.

iii. இத்திட்டப்பணிகள் வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறையின் மூலமாக செயல்படுத்தப்பட வேண்டும் (தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரிய பொறியியல் பிரிவு மூலம்).

iv. உலர்க்களங்கள் கட்டி முடிக்கப்பட்ட பின்னர் விவசாயிகளின் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட வேண்டும்.

v. தானியங்களை உலர்த்தும் பணிகளை தவிர உலர்களங்களை பிற பயன்பாட்டிற்கு பயன்படுத்தக்கூடாது.

vi. உலர்களங்கள் அமைக்கப்பட்டபின் அதனை தொடர்ந்து நன்கு பராமரித்திட சம்மந்தப்பட்ட கிராமப் பஞ்சாயத்திடம் ஒப்படைக்கப்படும்.

**V) சர்க்கரைத்துறை**

**திட்ட இனங்களுக்கான பொதுவான வழிகாட்டு நெறிமுறைகள்**

i. 2022-2023 கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்ட 3,204 கிராமப் பஞ்சாயத்துகளில் கரும்பு சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு இத்திட்டம் செயல்படுத்தப்படவேண்டும்.

ii. கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைப்பகுதிகளில் மேலாண்மை இயக்குநர் / தலைமை நிர்வாகிகள் மூலமாகவும், தனியார் சர்க்கரை ஆலைப்பகுதிகளில் வேளாண்மைத்துறை-மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர்கள் மூலமாகவும் திட்டம் செயல்படுத்தப்பட வேண்டும். இதற்கான ஆலைவாரியான, மாவட்ட வாரியான இலக்குகள் சர்க்கரைத்துறை ஆணையரால் பிரித்தளிக்கப்பட வேண்டும்.

iii. கரும்பு பயிரிடும் ஒரு விவசாயிக்கு அதிகபட்சமாக இரண்டு எக்டருக்கு மட்டுமே மானியம் வழங்கப்பட வேண்டும்.

iv. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின விவசாயிகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் வழங்கப்பட வேண்டும்.

v. விநியோகத்தின் போது அதிக அளவில் குறு, சிறு மற்றும் பெண் விவசாயிகள் பயனடைதல் வேண்டும்.

vi. தேசிய வேளாண்மை வளர்ச்சித்திட்டத்தின் வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்றப்பட வேண்டும்.

**1. பருசீவல் நாற்றுக்கள் விநியோகம்**

i. ஒரு எக்டருக்கு 12,500 எண்கள் பருசீவல் நாற்றுக்களுக்கு 50 சதவீத மானியமாக ரூ. 12,500 வழங்கப்பட வேண்டும்

ii. கரும்பு இனப்பெருக்க நிறுவனம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கூட்டுறவு, பொதுத்துறை சர்க்கரை ஆலைகள், முன்னோடி விவசாயிகள், தனியார் நாற்று விற்பனை மையங்களிலிருந்து - புத்தாக்கம் செய்யப்பட்ட கோ 86032, கோ 11015, கோஉ 09356, கோ 0212, கோக 13339, கோகு 6, கோகு 7, -ஆகிய கரும்பு இரக பருசீவல் நாற்றுக்களை விவசாயிகள் பெற்றுக்கொள்ள வேண்டும்.

**2. ஒருபரு விதைக்கரும்பு விநியோகம்**

i. ஒரு எக்டருக்கு 2.5 மெட்ரிக் டன் ஒருபரு விதைக்கரும்பிற்கு 50 சதவீத மானியமாக ரூ. 3,750 வழங்கப்பட வேண்டும்

ii. கரும்பு இனப்பெருக்க நிறுவனம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கூட்டுறவு, பொதுத்துறை சர்க்கரை ஆலைகள், முன்னோடி விவசாயிகள், தனியார் நாற்று விற்பனை மையங்களிலிருந்து புத்தாக்கம் செய்யப்பட்ட கோ 86032, கோ 11015, கோஉ 09356, கோ 0212, கோக 13339, கோகு 6, கோகு 7, ஆகிய கரும்பு இரக ஒரு பரு விதைக்கரும்பு வாங்கிட வேண்டும்.

சி. சமயமூர்த்தி
வேளாண்மை உற்பத்தி ஆணையர்
மற்றும் அரசு செயலாளர்

//உண்மை நகல்//

பிரிவு அலுவலர் 16/12/22

## இணைப்பு – V

## கிராம திட்ட செயலாக்கக்குழு

| | | |
|---|---|---|
| 1 | வேளாண்மை அலுவலர் / தோட்டக்கலை அலுவலர் / துணை வேளாண்மை அலுவலர் / துணை தோட்டக்கலை அலுவலர் | தலைவர் |
| 2 | உதவி வேளாண்மை அலுவலர் / உதவி தோட்டக்கலை அலுவலர் / உதவி விதை அலுவலர் / உதவி வேளாண்மை அலுவலர் (வேளாண் வணிகம்) | கிராம அளவிலான திட்ட பொறுப்பு அலுவலர் (Nodal Officer) |
| 3 | உதவி பொறியாளர் – வேளாண்மைப் பொறியியல் | உறுப்பினர் |
| 4 | மீன்வளத்துறை ஆய்வாளர் | உறுப்பினர் |
| 5 | கிராம நிர்வாக அலுவலர் | உறுப்பினர் |
| 6 | கூட்டுறவு சங்க செயலாளர் | உறுப்பினர் |
| 7 | கால்நடை உதவியாளர் | உறுப்பினர் |
| 8 | பஞ்சாயத்து உதவியாளர் | உறுப்பினர் |
| 9 | ஊரக வளர்ச்சித்துறை – ஓவர்சியர் | உறுப்பினர் |
| 10 | மின்சாரத்துறை கம்பியாளர் (Foreman) | உறுப்பினர் |
| 11 | சமுதாய வள ஆர்வலர்- பண்ணை (Community Resource Person - Farm) - TNSRLM | அலுவலரல்லா உறுப்பினர்கள் |
| 12 | பஞ்சாயத்து தலைவர்,பால் சங்கத் தலைவர் மற்றும் முன்னோடி விவசாயிகள் (2-3 நபர்கள்) | அலுவலரல்லா உறுப்பினர்கள் |
| 13 | கிராம பஞ்சாயத்திற்கான அட்மா திட்ட உழவர் நண்பர்கள் | அலுவலரல்லா உறுப்பினர்கள் |

சி. சமயமூர்த்தி
வேளாண்மை உற்பத்தி ஆணையர்
மற்றும் அரசு செயலாளர்

//உண்மை நகல்//

பிரிவு அலுவலர் 16/12/22

அரசாணை (நிலை) எண். 298, வேளாண்மை-உழவர்நலத் (வஇபதி) துறை, நாள் 16.12.2022.

## இணைப்பு – VI

## மாவட்ட கண்காணிப்பு குழு

| | | |
|---|---|---|
| 1. | மாவட்ட ஆட்சித்தலைவர் | குழுத்தலைவர் |
| 2. | மாவட்ட வருவாய் அலுவலர் | உறுப்பினர் |
| 3. | திட்ட இயக்குநர் (மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை) | உறுப்பினர் |
| 4. | திட்ட அலுவலர் (TNSRLM) | உறுப்பினர் |
| 5. | வேளாண்மை இணை இயக்குநர் | உறுப்பினர் செயலாளர் |
| 6. | கூட்டுறவு இணைபதிவாளர் | உறுப்பினர் |
| 7. | இணை இயக்குநர் (கால்நடை பராமரிப்புத்துறை) | உறுப்பினர் |
| 8. | செயற்பொறியாளர் (நீர்வள ஆதாரத்துறை) | உறுப்பினர் |
| 9. | மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) | ஒருங்கிணைப்பாளர் |
| 10. | தோட்டக்கலை துணை இயக்குநர் | உறுப்பினர் |
| 11. | வேளாண்மை துணை இயக்குநர் (வேளாண் வணிகம்) | உறுப்பினர் |
| 12. | மாவட்ட செயற்பொறியாளர் (வேளாண்மைப் பொறியியல் துறை ) | உறுப்பினர் |
| 13 | செயற்பொறியாளர் (Groundwater) – (பொதுப்பணித்துறை) | உறுப்பினர் |
| 14. | மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் | உறுப்பினர் |
| 15. | மாவட்ட மின்வாரிய கண்காணிப்பு பொறியாளர் | உறுப்பினர் |
| 16. | மண்டல மேலாளர் – நுகர்பொருள் வாணிபக் கழகம் | உறுப்பினர் |
| 17. | தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் / மாவட்ட கே.வி.கே விஞ்ஞானிகள் | உறுப்பினர் |

| | | |
|---|---|---|
| 18. | ஆவின் பொது மேலாளர் | உறுப்பினர் |
| 19. | உதவி இயக்குநர் (மீன்வளத்துறை) | உறுப்பினர் |
| 20 | மாவட்ட ஆட்சியர் சிறப்பு அழைப்பாளர்கள் - முன்னோடி விவசாயிகள் (2 முதல் 3 நபர்கள்) வேளாண்மை / தோட்டக்கலை விவசாயிகள் (ஓராண்டு சுற்றில் புதிய விவசாயிகள் தேர்வு) | உறுப்பினர்கள் |

**சி. சமயமூர்த்தி**
**வேளாண்மை உற்பத்தி ஆணையர்**
**மற்றும் அரசு செயலாளர்**

**//உண்மை நகல்//**

பிரிவு அலுவலர் 16/12/22

அரசாணை (நிலை) எண். 298, வேளாண்மை-உழவர்நலத் (வஇபதி) துறை, நாள் 16.12.2022.

படிவம் I

வேளாண்மைப் பொறியியல் துறை

<u>கூட்டு ஒப்பந்தப் படிவம்</u>

**தமிழக அரசின் "கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம் – 2022-2023 இன்" பயனாளிகளிடமிருந்து பெறப்படும் கூட்டு ஒப்பந்தம்**

<u>தமிழக அரசுக்கும் (வேளாண்மைப் பொறியியல் துறை) வேளாண்மைத் துறை / தோட்டக்கலைத் துறையினரால் உருவாக்கப்படும்தரிசு நில தொகுப்பு விவசாய குழு சங்க விவசாயிகளுக்கும் இடையேயான கூட்டு ஒப்பந்தம்</u>

1) தமிழக அரசினால் **கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித்** திட்டத்தின்கீழ் உருவாக்கப்படும் நீர்ப்பாசன கட்டமைப்புகளை பயன்படுத்த, கீழ்க்கண்ட விவசாயிகளான நாங்கள் வேளாண்மைத் துறை / தோட்டக்கலைத் துறையினரால் உருவாக்கப்படும் தொகுப்புகளில் விவசாய குழு அமைப்பதற்கு ஒப்புக் கொள்கிறோம்.

(அ) பெயர் தகப்பனார் பெயர்

கிராமம் வட்டம்

மாவட்டம்

(ஆ)

(இ)

(ஈ)

2) தரிசு நிலத் தொகுப்புக் குழு உறுப்பினர்களில் ஒருவரான திரு.----------------- . ------------------- கிராமம் ------------------ வட்டம் ---------------மாவட்டத்தில் அமைந்துள்ள விவசாய நிலத்தின் உரிமையாளர் மற்றும் அந்நிலத்தினை நேரடி உடமையாக கொண்டவர் என நாங்கள் சான்றளிக்கிறோம்.

3) **கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித்** திட்டத்தின் கீழ் மேற்கூறிய நிலத்தில் பாசனத்திற்காக ஆழ்துளை / குழாய் கிணறு அமைக்க நாங்கள் விண்ணப்பிக்கின்றோம். பத்தி எண்.2ல் கூறிய தரிசு நிலத் தொகுப்புக் குழு உறுப்பினர்கள், நீர் பாசன கட்டமைப்புகளை அமைக்க தனது நிலத்தினை அரசுக்கு தானமாக கொடுப்பதுடன், கட்டமைப்புகள் இயங்கக் கூடிய விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின்படி மேலும் கூடுதல்நிபந்தனைகளுக்கும் ஒப்புக் கொள்கிறோம்.

4) எதிர்காலங்களில் மேற்கண்ட பாசன கட்டமைப்புகள் மூலம் எடுக்கப்படும் பாசனநீர் பிற விவசாயிகளின் விவசாய நிலத்திற்கு பயன்படுத்துவதற்கு தமிழக அரசுக்கு உரிமையுண்டு என்பதை அறிந்திருக்கிறோம். இத்தருணங்களில் தமிழக அரசு எடுக்கும் முடிவுகளில் நாங்கள் எச்சூழலிலும்

தலையிடுவது இல்லை எனவும் அரசின் முடிவே இறுதியானது எனவும் உறுதியளிக்கிறோம்.

5) நிலத்தடி நீர் பாசன கட்டமைப்புகளாகிய -------------- கிணறு பம்புசெட்டுகள் மற்றும் ------------ ஆகியவற்றினை பாதுகாப்பது எங்களுடைய பொறுப்பாகும். அக்கட்டமைப்புகளை விவசாயத்திற்கு மட்டுமே பயன்படுத்துவோம் என உறுதியளிக்கிறோம். மேற்கூறிய விவசாய நிலத்தில் கட்டப்பட்ட கட்டமைப்புகளின் மூலம் எடுக்கப்படும் நிலத்தடி நீரினை எவ்விதமான விற்பனை செய்யவும் எங்களை உட்படுத்திக் கொள்ள மாட்டோம் என உறுதியளிக்கிறோம்.

6) மேற்கூறிய அனைத்தும் நாங்கள் அறிந்தவரை உண்மையாகும்.

7) இக்கூட்டு ஒப்பந்தத்தின்படி எவ்வித விதிமுறைகளையும் மீறினால் அதற்கு நாங்களே பொறுப்பு. மேலும் உண்மைக்கு புறம்பான அல்லது தவறான தகவல்களை அளித்தால் சட்டப்படி சட்ட நடவடிக்கைகளுக்கு பொறுப்பாவோம் என்பதனை அறிந்திருக்கிறோம்.

தரிசு நிலத் தொகுப்புக் குழு
குழுஉறுப்பினர்களின் பெயர் /
முகவரி மற்றும் கையொப்பம்

வேளாண்மைப் பொறியியல்
துறை அலுவலரின்
கையொப்பம்

**சி. சமயமூர்த்தி**
**வேளாண்மை உற்பத்தி ஆணையர்**
**மற்றும் அரசு செயலாளர்**

**//உண்மை நகல்//**

பிரிவு அலுவலர் 16/12/22

அரசாணை (நிலை) எண். 298, வேளாண்மை-உழவர்நலத் (வஇபதி) துறை, நாள் 16.12.2022.

படிவம் II

கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம் 2022-2023- பணிகள் மற்றும் பயனாளிகளின் விவரம்

| வ.எண் | மாவட்டம் | வட்டம் | கிராமம் | தொகுப்பு | | கிணறுகள் (எண்கள்) | | புல எண் | தரிசு நிலத் தொகுப்புக் குழுக்களின் பிரதிநிதிகளின் விவரம் (பெயர் மற்றும் முகவரி) | விவசாய பிரதிநிகளின் பிரிவுகள் (எண்கள்) | | | | | | பதிவு எண் மற்றும் நாள் | பணி தொடங்கப் பட்ட நாள் | பணி முடிக்கப் பட்ட நாள் | செலவிடப் பட்ட தொகை (ரூபாய். இலட்சத்தில்) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | எண் | பெயர் | ஆழ்துளை கிணறு | குழாய் கிணறு | | | சிறு விவசாயிகள் | குறு விவசாயிகள் | பெண் விவசாயிகள் | இதர விவசாயிகள் | ஆதிதிராவிட விவசாயிகள் | பழங்குடியின விவசாயிகள் | | | | |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) | (12) | (13) | (14) | (15) | (16) | (17) | (18) | (19) | (20) |
| | | | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | | | |

சி. சமயமூர்த்தி
வேளாண்மை உற்பத்தி ஆணையர்
மற்றும் அரசு செயலாளர்

//உண்மை நகல்//

பிரிவு அலுவலர் 16/12/22